Vol.4, Issue 8 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

ஜனவரி 2022

# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org





ரஷீதா பகத்

## நெகிழவைத்த “நன்றி”

*மஹாப்ஸ் 21 மாநில மாநாடு முடிவிற்கு வரும் தருணத்தில் RI இயக்குனர் A S வெங்கடேஷ் நிகழ்ச்சி நன்றாக நடைபெற்றதையொட்டி மாநாட்டின் தலைவர் PDG M முருகானந்தம் அவர்களை கட்டியணைத்து நன்றி தெரிவித்தார்.*



















# உள்ளே


**12 ரோட்டரி பிரமுகர்களின் மஹாப்ஸ்-21 மண்டல மாநாடு**
மகாபலிபுரம் பிராந்தியச் சந்திப்பு, இந்தியா முழுவதிலிருந்தும் வந்திருந்த ரோட்டரியன்களுக்கு நேரில் சந்திக்கும் மகிழ்ச்சியான ஒரு வாய்ப்பை வழங்கியது.

**18 கபில்தேவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**
இந்தச் சந்திப்பு இந்தப் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரருக்கு வாழ்நாள் சாதனை விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியது.

**26 DGE-களுக்கான தலைமைப்பண்பு பாடங்கள்**
உள்வரும் ஆளுநர்கள் ரோட்டரியின் மிகச் சிறந்த பயிற்சி தலைவர்களிடமிருந்து தலைமைப்பண்புப் பாடங்களைக் கற்கிறார்கள்.

**44 ரோட்டரியை இமாலய உயரங்களுக்கு உயர்த்தியவர்**
சமீபத்தில் மறைந்த PRIP கிளிஃப் டாச்டர்மனுடனான தான் பழகியதை அன்பாக நினைவுகூர்கிறார் PRIP ராஜேந்திர சாபூ.

**48 CoL கடமையை அக்கறையுடன் செய்யுங்கள்**
சிகாகோவில் நடைபெறவிருக்கும் ரோட்டரி பாராளுமன்றத்துக்கு எப்படித் தயாராவது என்று PDGக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

**56 வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய RC சென்னை நார்த்**
நகரத்தில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருட்களும் சரியான நேரத்தில் உதவியும் வழங்கப்பட்டன.

**60 மனிதநேயத்துடன் புற்றுநோயை எதிர்த்துப் போராடலாம்**
1995 முதல், புற்றுநோய் கொண்டவர்களுக்குப் பின்தொடரல் செயல்பாடுகளுடன் முழுமையான பராமரிப்பை வழங்கிவருகிறது RC மெட்ராஸ் மிட்-டவுன்

**64 ஜும்ரிதலையா ரசிகர்களுக்கு நன்றி!**
சிலோன் வானொலி மற்றும் ARIன் விவித் பாரதி-யின் பெரும்பாலான பாடல் கோரிக்கைகள் இந்தச் சிறு நகரத்திலிருந்து வந்த நாட்களைத் திரும்பிப் பார்க்கலாம்.


Scan our QR code &
visit our Website

**அட்டைப் படத்தில்:**
மகாப்ஸ் 21 சந்திப்பில்
ஒரு பண்பாட்டு நிகழ்ச்சி.

**புகைப்படம்:** ஹேமந்த்குமார்

Scan our QR code &
read our Magazine

## PRID சுஷீல் குப்தா அவர்களுக்குப் பொருத்தமான விடையளித்தல்

*டிசம்பர் இதழின் அட்டைப் படம் லட்சக் கணக்கான ரோட்டரியன்களுடைய குரலுடன் இணைந்திருந்தது. ஏனெனில், PRID சுஷீல் குப்தா ரோட்டரியை மிகவும் வலுவாக்கிய பங்களிப்பை வழங்கிய, ஊக்கமளிக்கும் ஒரு தலைவர். முன்னாள் RI தலைவர் கல்யாண் பேனர்ஜி எழுதிய கட்டுரை அவருடைய மரபை நுட்பமாகச் சுட்டிக் காண்பித்தது.*


*இந்தியாவின் பால் சாதனை யாளராகிய வர்கீஸ் குரியனைப்பற்றிய கட்டுரை தங்கத்தைப்போல் அமைந்திருந்தது, இந்த நாட்டின் பரம ஏழைகளுக்கு உதவுவதற்காகப் பலரும் தேர்ந்தெடுக்காத ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்த இந்தச் சிறந்த மனிதரை நன்கு விளக்கியது.*

*இன்டஸ் அமைதிப் பூங்காவைப்பற்றிய கட்டுரை உலக மக்களிடையே அமைதியை, ஒற்றுமையை வளர்ப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. ரோட்டரிக்கு எந்த எல்லைகளும் இல்லை; இந்தியா, பாகிஸ்தான் இடையில் ரோட்டரி அன்பான உறவை முன்னிறுத்தினால், அது ரோட்டரியின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாக இருக்கும்.*

*RID 3090ன் பணிவாழ்க்கை அறிவுறுத்தல் முகாம், ரோட்டரியன்கள் செய்யும் தன்னலமற்ற சேவை இளைஞர்களுடைய எதிர்காலத்தை வடிவமைப்பதில் எப்படி உதவலாம் என்பதைக் காண்பித்துள்ளது.*

*காலநிலை மாற்றம் நிறைந்த இந்த ஆபத்தான நேரத்தில், ஏழாவது கவனப் பகுதியாகிய சுற்றுச்சூழலை நாம் மேலும் கவனிக்கவேண்டும். மூங்கில் வளர்ப்புக்கு வழிகாட்டுகிறது RID 3181 என்ற கட்டுரையில் விவரிக்கப் பட்டுள்ள படி, மூங்கில் வளர்ப்பும் மியாவாகி காடுகளை அமைப்பதும் இயற்கைப் பாதுகாப்பை மேம்படுத்தக் கூடிய பல மாற்றங்களைக் கொண்டு வரலாம். இயற்கை இல்லாவிட்டால் நாம் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.*

*புகழ் பெற்ற சமூகப் பணியாளர் அச்யுதா சமந்தா அவர்களை RI தலைவர் மேத்தா ரோட்டரியனாக இணைத்த அறிக்கையைப் படித்து நான் ஆழமாக நெகிழ்ந்தேன். மாதச் சுழற்சி நல விழிப்புணர்வுக்கு நிதி அளிக்கும் கலை ஏலங்கள் ஒரு புதுமையான யோசனை; நம் நாட்டில் லட்சக்கணக் கான பெண்களுடைய நிலை மேம் படவேண்டுமென்றால், இதுபோன்ற பல முயற்சிகள் தேவை. மும்பையில் நைஜீரியக் குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை என்ற கட்டுரை உலகெங்கும் மனித குலத்துக்குச் சேவை செய்யும் ரோட்டரியின் கொள்கையை உண்மையாகக் காண்பிக்கிறது. கிராமப்புற அஸ்ஸாமில் ஒரு மருத்துவமனை அமைக்கலாம் என்கிற PDG Dr நரேந்திர நாத் தத்தா, RID 3240, அவர்களுடைய யோசனை, மருத்துவர்களாகவேண்டும் என்ற ஆசையைக் கொண்ட பல இளைஞர்களுடைய கனவை நனவாக்கியுள்ளது.*



*இன்ஸா ஃபோல்ஸ்டரின் “எல்லா ரோட்டரியும் ஒன்றல்ல” என்பது, ரோட்டரியின் பன்முகத்தன்மையை நமக்குக் காண்பிக்கிறது.*

*“உங்கள் ஆளுநர்களைச் சந்தியுங்கள்” என்கிற பத்தி அனைத்து ரோட்டரியன்களுக்கும் ஊக்கம் அளிக்கிறது, பாடமாக அமைகிறது. DGகளின் திட்டங்கள் மிகச் சிறந்த வகையில் காண்பிக்கப்படுகின்றன, இது அனைத்து ரோட்டரியன்களுக்கும் புது ஆற்றலைக் கொண்டுவருகிறது, ஒரு கற்றல் வாய்ப்பை அளிக்கிறது.*

*மொத்தத்தில், டிசம்பர் இதழ் மிகச் சிறப்பாக இருந்தது, நல்ல யோசனைகள் மற்றும் பரிமாற்றங்களுடன் புத்தாண்டை வரவேற்கும்வகையில் இது அமைந்தது. ஆசிரியர் ரஷீதா பகத், அவருடைய குழுவினருக்குப் பாராட்டுகள்.*

Dr *ஜெயசேகரன்* V P<br>
RC *பையனூர்* — D 3204

*டிசம்பர் இதழின் அட்டையில் PRID சுஷீல் குப்தா அவர்களுடைய புகைப்படம் இடம்பெற்றுள்ளது; உண்மையான ரோட்டரி சாதனையாளராகிய அவருக்கு இது ஒரு பொருத்தமான புகழ்ச்சி. PRIP கல்யாண் பேனர்ஜி எழுதிய அஞ்சலிக் கட்டுரை, சுஷீல் குப்தா அவர்களுடைய புகைப்படங்கள் நிறைந்த பக்கங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. PRIP க்ளிஃப் டாச்டெர்மன் அவர்களுடைய இறப்பைப்பற்றிப் படித்து வருந்தினேன், அவருடைய நினைவு நம்மிடம் என்றென்றும் நிலைக்கும். RID மகேஷ் கொட்பாகி DisConsன் முக்கியத்துவத்தை நன்கு விளக்குகிறார்; RID வெங்கடேஷ் நம்முடைய சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். TRFக்கு வழங்கப்படும் சிறு தொகைப் பங்களிப்புகளும் பெரிய மாற்றத்தை உண்டாக்கலாம் என்று அறங்காவலர் குலாம் வாகன்வடி சரியாகச் சொல்கிறார்.*

*இந்தியாவின் பால் சாதனையாளரை நினைவுகூர்தல்: வர்கீஸ் குரியன் என்ற கட்டுரை படிக்கவேண்டியது; அவருடைய பொன்மொழிகள் பொருளுள்ளவை, நகைச்சுவை யானவை. தாதா: என் தாத்தா என்ற சித்தார்த் சேத் அவர்களுடைய கட்டுரை ஆர்வம் ஊட்டியது.*

*இந்தியா-பாகிஸ்தான் அமைதிப் பூங்கா, தில்லிச் சேரி ஒன்றில் 100 கைப் பம்ப்கள், நைஜீரியக் குழந்தை ஒருவருக்கு இதய அறுவைச் சிகிச்சை, கூமதி கிராமத்தில் சூரிய ஒளி விளக்குகளைப் பற்றிய மற்ற கட்டுரைகளும் நன்கு அமைந்திருந்தன,*

மனித குலத்திற்கு ரோட்டரி செய்யும் உறுதியான சேவையைக் காண்பித்தன.

ஃபிலிப் முலப்பொனெ M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211

டிசம்பர் இதழ் எப்போதும்போல் வளமான கட்டுரைகளால் நிறைந்திருந்தது. சுஷீல் குப்தா அவர்களை நினைவுகூர்தல் என்ற ஆசிரியர் குறிப்பும், PRIP பேனர்ஜி அவர்களுடைய அஞ்சலிக் கட்டுரையும் ரோட்டரியின் மறைந்த தலைவருக்கு உண்மையான மதிப்பை வழங்கின. நாம் ஒரு மிகச் சிறந்த மனிதரை இழந்து விட்டோம், அவருடைய குடும்பத்தினர், தொழில் உலகம் மற்றும் ரோட்டரியால் இந்த இழப்பைச் சரி செய்ய இயலாது. அவருடைய ஆன்மா அமைதி பெறட்டும்.

RC கல்கத்தா யுவிஸ் 1000 கழிப்பறைகளைக் கட்டுதல், RC தில்லி சவுத் சென்ட்ரல் ஒரு சேரிக்கு 100 கைப் பம்ப்களைக் கொடையளித்தல், பழங்குடியின மக்கள் வாழ்க்கைகளில் ஒளியேற்றும் RC சேலம் சென்ட்ரலின் சூரிய ஒளி விளக்குத் திட்டம், ஒரு கிராமத்தில் பார்வைக் குறைபாடுள்ள 49 மக்களுக்கு RC மதுரை ஸ்டார் ரோட்டரி வீடுகளை அளித்தல் மற்றும் மால்டாவில் 800 குழந்தைகளுடைய வளைந்த காலை RC மாங்கோ சிட்டி சரிசெய்தல் போன்ற சேவைத் திட்டங்கள் நன்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை மிட்-டவுன் — D 3000

மறைந்த PRID குப்தா அவர்களைப் பற்றிய ரஷீதா பகத் அவர்களின் ஆசிரியர் பக்கம், PRIP கல்யாண் பேனர்ஜியின் முதன்மைக் கட்டுரை ஆகியவை ஊக்கமளித்தன, எல்லா விதங்களிலும் உண்மையில் உயர்ந்து நின்ற அவரைப்பற்றிக் குறைந்த சொற்களில் நிறையப் பேசின. இந்தியாவும் உலகும் கண்டிப்பாக அவரைப் பிரிந்து வருந்தும்.

உங்களுடைய இன்றைய செயல்கள் பிறருடைய வாழ்க்கை களை நீட்டிக்க உதவலாம் என்னும் தலைவர் மேத்தாவின் சொற்றொடர் நெஞ்சைத் தொட்டது. மூக்குக் கண்ணாடிகள் அறிவார்ந்த பார்வையை வழங்குவதால், ஹூப்ளியில் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு அறிவார்ந்த பார்வை மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் திட்டம் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்கிறது. நாட்டில் ஒவ்வொரு மாவட்டமும் இதுபோன்ற புதுமைச் சிந்தனையுள்ள திட்டங்களை ஊக்குவிக்கத் தொடங்கினால், சமூகத்தின் மீதான தாக்கம் இன்னும் ஆழமாக இருக்கலாம்.

இந்தியாவின் பால் சாதனை யாளரைப் பற்றிய கட்டுரையும் ஊக்கம் அளித்தது. கட்டுரையில் பேசப்பட்ட விஷயங்கள், பகிர்ந்துகொள்ளப்பட்ட அனுபவங்கள் மிகச் சிறந்தவை, வாழ்க்கையைத் தன் போக்கில் வாழ்ந்த, ஆனால், குரல் இல்லாத மக்களுக்காக வாழ்ந்த அந்த மனிதரைப்பற்றி நிறையப் பேசுகின்றன. வர்கீஸ் குரியன் உண்மையில் ஒரு சிறந்த தலைவர்.

விவேக் கன்டேல்வால்
RC டியோனர் — D 3141

மறைந்த PRID சுஷீல் குப்தா ஒரு மிகச் சிறந்த ரோட்டரியன், இதயம் மற்றும் மனத்தின் பல மிகச் சிறந்த பண்புகளைக் கொண்டவர். அவர் வெற்றிகரமான விடுதித்துறை வல்லுனராக இருந்ததுடன், பல முகங்களைக் கொண்ட ஆளுமையாக, எளிய, பணிவான மனிதராகவும் இருந்தார். குப்தா அவர்களுடைய பண்புகளை ஆசிரியர் ரஷீதா அழகாக எழுதியுள்ளார். ஒட்டுமொத்த ரோட்டரி குடும்பமும் குப்தா அவர்களைப் பிரிந்து வருந்தும்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

PRID சுஷீல் குதா அவர்களுடைய அட்டைப் படம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. ரோட்டரிக்கு RI தலைவர் சேகர் மேத்தா வழங்கும் நல்ல நலன் என்பது ஒரு மனித உரிமை என்ற செய்தி மிகச் சிறந்தது.

சுஷீல் குப்தா அவர்களை நினைவு கூரும் ஆசிரியர் குறிப்பு நெஞ்சைத் தொட்டது. சிறு துளிகள்தான் ஒரு பெரிய கடலை உருவாக்குகின்றன என்ற அறங்காவலர் வாகன்வடி அவர்களுடைய செய்தி மிகச் சிறந்தது. RC கல்கத்தா யுவிஸ் ஏழைகளுக்கு 1001 கழிப்பறைகளைக் கட்டுகிறது என்ற கட்டுரை நம் கண்களைத் திறந்தது.

2022–26 TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள PRID பரத் பான்ட்யா அவர்களுக்கு வாழ்த்துகள்.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201


**Illustrators Wanted**

Looking for talented **freelance illustrators**. Please send us soft copies of your work at **rotarynewsmagazine@gmail.com.**


We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos, to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.**
WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# நம் தொழில் மூலம் உதவி

SERVE TO CHANGE LIVES

ரோட்டரியின் நிறுவனக் கொள்கைகளில் ஒன்று, உங்கள் தொழிலைப் பயன்படுத்தி உலகில் நன்மை செய்வது. நீங்கள் மருத்துவர், வழக்கறிஞர், பொறியாளர், வேறு எந்தத் தொழிலில் இருந்தாலும் சரி, இது பொருந்தும். நாம் நோய்ப்பரவலை வென்று அதிலிருந்து மீள முயல்கிற நேரத்தில், தங்கள் வேலையை இழந்த மக்களுக்கு மறு பயிற்சி அளிப்பதில் இந்தக் கொள்கை முக்கியமானது. இதற்கு எதிர்வினையாக, தமர் ஹாங் காங் ரோட்டரி மின் சங்கம் இளைஞர்களை மாறுகின்ற பணி உலகுக்குத் தயார் செய்யும் நோக்கத்துடன் கருத்தரங்குகளை நடத்தியது.

இந்த வகைப் பயிற்சி இன்னும் பெரிய அளவில் நடைபெறவேண்டும். 2022ல் உலக அளவில் வேலை யில்லாதோர் எண்ணிக்கை 200 மில்லியனைத் தாண்டும் என்கிறது ஐக்கிய நாடுகள் அவை. இதனால் பெண்களும் இளைஞர்களும் பெரிதும் பாதிக்கப்படக்கூடும்.

அதனால்தான், பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் திட்டங்களை நான் இந்த அளவுக்கு வலியுறுத்தியுள்ளேன். இந்த வகையில் சில திட்டங்கள் ஏற்கெனவே செயலுக்கு வந்து விட்டதைக் கண்டு நான் மகிழ்கிறேன். தண்ணீரும் தூய்மை உள் கட்டமைப்பும் இல்லாவிட்டால், கல்வியை அணுகுவதும் வேலைக்கான வழியும் தடுக்கப்படலாம்.

இந்தியாவில் உள்ள புனேயில் ஒரு திட்டம் சிறுமிகள் மற்றும் பெண்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில், மீண்டும் பயன்படுத்தக் கூடிய சானிட்டரி பேட்களை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. இந்தத் திட்டம் பேட்களைத் தயாரித்து வழங்குவதற்காகப் பலருக்கு வேலை வழங்குகிறது. இந்த நாட்டில் ஆண்டுதோறும் குப்பையில் வீசி எறியப்படும் 12.3 பில்லியன் சானிட்டரி நாப்கின்களால் ஏற்படும் மாசை இது குறைக்கும்.

மற்ற பல சங்கங்கள் தொழில் சார்ந்த சேவைகளைப் பயன்படுத்திப் பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதை முன்னெடுத்துச் செல்கிறார்கள். இந்தியாவில் உள்ள பூனா ரோட்டரி சங்கம் இளம் பெண்களுக்குத் தற்காப்புக் கலைகளைக் கற்றுத்தரும் பயிலகங்களை நடத்துகிறது; துன்புறுத்தல் அல்லது மனிதக் கடத்தலுக்கு எதிரான தற்காப்பாக இது அமையும்.

என்னுடைய தொழிலைப் பயன்படுத்தி ரோட்டரி வழியாக நன்மை செய்யும் நல்ல வாய்ப்பு எனக்கும் அமைந்தது. 2004ல் நடைபெற்ற இந்தியப் பெருங்கடல் சுனாமி, என் மாவட்டத்தில் உள்ள அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகளில் பெரும் சேதத்தை உண்டாக்கியது. அங்கு, ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன, நான் லிட்டில் அந்தமான் தீவுக்குச் சென்ற போது, எனக்குள் இருக்கும் கட்டுமானக் கலைஞர் விழித்துக் கொண்டார், நாங்கள் லிட்டில் அந்தமானில் 500 வீடுகளைக் கட்டத் தீர்மானித்தோம்.


ஒரு கட்டுமானக் கலைஞராக, நான் பல அழகிய கட்டடங்களைக் கட்டியுள்ளேன். அவற்றுடன் ஒப்பிடும்போது, இந்த 500 வீடுகளும் நான் கட்டியவற்றுள் மிகச் சாதாரணமான கட்டடங்கள். ஆனாலும், அந்த வீடுகளை அவர்களிடம் வழங்கும் போது நான் பெற்ற மன நிறைவு, அதற்கு முன் நான் கட்டிய எதிலிருந்தும் எனக்குக் கிடைத்த மன நிறைவைவிடப் பெரியது.

உங்களுக்கும் உங்கள் தொழிலைப் பயன்படுத்தி வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை செய்யும் வாய்ப்புகள் கிடைத்திருக்கலாம். ரோட்டரி வழியாகத் தொழில் சார்ந்த சேவையைச் செய்ததுபற்றிய உங்கள் கதைகளை நான் வரவேற்கிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்து வாருங்கள் முன்னெடுப்பில் பங்கேற்ற ஒவ்வொரு சங்கத்தையும் பாராட்டுகிறேன்.

Shekhar Mehta

**சேகர் மேத்தா**
RI தலைவர்





# சவாலான நேரத்தில் மண்டல மாநாடு!

சவாலான நேரத்தில் உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் இந்தியாவில் ஒரு மண்டல மாநாடு வண்ணமயமாகவும், பிரம்மாண்டமாகவும், ஆற்றல் மிகுந்ததாகவும் நடந்து முடிந்துள்ளது. மாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு RI தலைவரும், சலிக்காமல் இது சவாலாக நடந்துள்ளது என்று கூறினர். RI இயக்குநரும் மாநாட்டு அமைப்பாளருமான A S வெங்கடேஷ், மாநாட்டு தலைவர் PDG M முருகானந்தம் இருவரும் கோவிட் தொற்றுக்காலத்தில் எந்த ஒரு பெரிய சிக்கலும் இல்லாமல் மாநாட்டை நிர்வகித்து நடத்திக்காட்டியுள்ளனர். RI தலைவர் சேகர் மேத்தா உள்ளிட்ட பல மூத்த தலைவர்கள், கோவில் நகரமான மகாபலிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் நேரில் கலந்துகொண்டது பாராட்டத்தக்கதாகும். சென்னையிலிருந்து சுமார் 60 கி.மீ. தொலைவிலுள்ள கடற்கரை நகரத்தில், வங்காள விரிகுடாவின் குளிர்ந்த நீரை அணுகக்கூடிய, பசுமை நிறைந்த ரீஸார்ட்டுகளில் மென்மையான குளிரில் (சென்னையில் குளிர் என்பது அவ்வளவுதான்!) தங்கியது ரம்மியமானது. மஹாப்ஸ்-21 மண்டல மாநாட்டில் 700-க்கும் மேலான பிரநிதிகள் பங்கேற்றனர். வெங்கடேஷ் கூறியதுபோல கோவிட் வைரஸ் தொற்று முதல் அலை, இரண்டாவது அலை என நம்மை தாக்கியதால் தொடர் பொது முடக்கம். கடைசி நிமிடம் வரை மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மாநாடு நடைபெறுமா, இல்லையா ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டு கலக்கமான மனோநிலையிலேயே இருந்தனர்.

இதுபோதாதென்று வடகிழக்கு பருவமழை முன்னெப்போதும் இல்லாத அளவாக பெய்ததன் காரணமாக சென்னை மாநகரமும், புறநகர் பகுதிகளும் வெள்ளக்காடாயின. மாநாடு நிச்சயம் நடைபெறுமா? அல்லது எங்கள் பயணத்தை ரத்துச் செய்துவிடவா? மாநாடு நடைபெற்றால் கூட்டத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்? என்று பலரும் கேள்வி எழுப்பினர். நாங்கள் முருகா (மாநாட்டு தலைவர் PDG M முருகானந்தம்) மற்றும் அவரின் குழுவினர் மீது நம்பிக்கை வைத்திருந்தோம். கடவுள் அருளால் எல்லாம் நல்ல படியாய் நடந்து முடிந்தது என்றார் மாநாட்டின் நிறைவு அமர்வில் வெங்கடேஷ்.

மாநாட்டுப் பிரதிநிதிகளை பாரம்பரியமான வாழை இலை சாப்பாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். மூன்று நாள் ஹோட்டல் சாப்பாடு போரடிக்கவே வீட்டிற்குச் செல்லும் எண்ணத்தில் இருந்த நான் அதை கைவிட்டு, மீன் உள்ளிட்ட அசைவ உணவுகள் ஒருபக்கம் என்னை இழுக்க, உடன் வந்திருந்த ஜெய்ஸ்ரீயுடன் சைவ சாப்பாட்டிற்கு அமர்ந்தேன். ஆனால், எனது முடிவுக்காக வருத்தப்படவில்லை. வீட்டிற்குச் சென்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் ஒரு தூக்கம் போட்டேன். வெங்கடேஷ், வினிதா (சில வாரங்களுக்கு முன் அதிர்ச்சி தாங்கியாக இருந்தவர்), முருகானந்தம் மற்றும் அவரது குழுவினர் அன்று இரவு நன்றாக தூங்கியிருப்பார்கள் என்பதை கற்பனை செய்து பார்த்தேன்.

புத்தாண்டில் நாம் அடியெடுத்து வைக்கும்போது கொரோனா வைரஸ் பாதிப்பு, அதன் மூலம் எழுந்த பீதிகள், நிச்சயமற்ற தன்மை, துயரங்கள், நாம் விரும்பியவர்களை இழந்த துயரம் இவையெல்லாம் கரைந்து மகிழ்ச்சி நிறைந்த விடியலை நோக்கிப் பயணிப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. கொரோனா வைரஸால் ஏற்படும் பாதிப்பை நாம் தடுத்துவிட்டதாக பெருமிதம் கொள்ளும் இந்த நேரத்தில், நம்மை விட குறைந்த அதிர்ஷ்டசாலிகளை பற்றி சிந்திப்போம். நமக்கு கிடைக்கும் சலுகைகளின் ஒரு பகுதியை அவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். வாழ்க்கை நிலையற்றது என்பதையும், வாழ்க்கையில் எல்லாம் திடீரென்று முடிந்துவிடும் என்பதையும் தொற்று நமக்கு கற்றுக் கொடுத்துள்ளது.

2022 புத்தாண்டு கோவிட் தொற்று இல்லாத ஆண்டாக அமையும் என்ற நம்பிக்கையுடன் ரோட்டரி நியூஸ் டிரஸ்ட், இந்த ஆண்டு சிறப்பானதாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Pradhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.



# ரோட்டரி தேர்தல்கள் நன்மையா தீமையா

ஒருமுறை, முதன்மையான தொழில்துறை ஆளுமை ஒருவர் என்னிடம் கேட்டார்: "ரோட்டரியில் நீங்கள் ஏன் தேர்தல்களை நடத்துகிறீர்கள்? ரோட்டரி ஒரு சமூக சேவை அமைப்பு; தேர்தல்களால் பிரிவினைகளும் எதிர்மறை மனநிலையும் தானே வரும்?" நான் அவருக்குப் பெருமையுடன் பதில் சொன்னேன், "ரோட்டரியன்கள் மக்களாட்சியை நம்புகிறார்கள்; எங்கள் தேர்தல்கள் நட்பான வாக்கெடுப்புகளாக நடை பெறுகின்றன; இதில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குத் தாங்கள் சம்பளம் பெற்றுக்கொள்ளாத சேவைத் திட்டங்களுக்காகத் தன்னார்வத்துடன் முன்வருகிறோம் என்பதும், வெற்றியோ தோல்வியோ தங்கள் சமூக நம்பகத்தன்மையை அல்லது சுய மதிப்பைப் பாதிக்காது என்பதும் தெரியும். ரோட்டரியன்கள் தங்களுடைய சேவை நெறிமுறைக்கு உண்மையானவர்கள், அவர்களுக்கு எதிர்மறைச் சிந்தனை இல்லை.'

இப்போது, இதுபற்றி எனக்குச் சில ஐயங்கள் எழுகின்றன. சமீபத்தில் பல பிராந்திய மாவட்டங்களில் தேர்தல் நடைபெற்றபோது ஆங்காங்கு கிளர்ச்சிகள் எழுந்தன, அந்தச் செயல்முறையால் பல புகார்களும் உண்டாகின, இதனால், மூத்த ரோட்டரியன்களுடைய நெறிமுறையான நடவடிக்கை மீது நாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மிகவும் உலுக்கப்பட்டுள்ளது. நாம் இதை ஆராயவேண்டும், நமக்கு நாமே பல கேள்விகளை எழுப்பிக் கொள்ள வேண்டும். நாம் எதற்காக ரோட்டரியில் இருக்கிறோம்? துன்பத்தில் உள்ள சமூகங்களுக்குப் பொருள் மற்றும் மன உதவியை வழங்கவா? அல்லது, வெறுமனே தேர்தல்களில் வெல்லவா? நாம் சொல்வதை நாம் செய்கிறோமா?

நாம் வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கிற, போதும் என்ற மனத்தை வரமாகப் பெற்றிருக்கிற நம் உள் ஆன்மப்பண்புகளை அடையாளம் காணவும், நம்மைச் சுற்றியுள்ள நலிந்தோருடன் பகிர்ந்துகொள்ளவும் அழைக்கிற ரோட்டரியின் மைய மதிப்பீடுகளை முற்றிலுமாக மறுத்துப் பிரிவினை கொண்ட அரசியல் கட்சிகளைப்போல் ஆவோமா?

இந்த நேரத்தில் நாம் விழித்துக் கொள்ளவேண்டும். நாம் இதுபற்றி வாதிடுவோம், விவாதிப்போம், தீர்வுகளை முன்வைப்போம், சரியான நெறிமுறைகளை உருவாக்க உறுதி கொள்வோம், இதனால், வரம் பெற்ற மற்றும் மன நிறைவுள்ள ரோட்டரியன்களாகிய நாம் நம்முடைய தன்னார்வலர் உணர்வுகளையும் செயல்திறன் மிக்க பன்முகத்தன்மை உள்ள தொகுப்புத் தலைமையையும் சேதப்படுத்திக் கொண்டு எல்லாத் தேர்தல்களிலும் வெல்லவேண்டியதில்லை என்பதை அறிந்துகொண்ட ஒரு சூழலில் தேர்தல்களை நடைபெறச்செய்வோம்.



**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## வரலாறு படைப்போம்!



இந்த ரோட்டரி ஆண்டின் நடுப் பகுதியில் நாம் இருக்கிறோம். கடந்த ஆறு மாதங்களை நாம் திரும்பிப் பார்க்கும்போது தொற்றுநோய், நாம் அதிலிருந்து விடுபடுவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. அடுத்த ஆறு மாதங்கள் நாம் கனவுகளை நிஜமாக்க வாய்ப்புகளை வழங்கியுள்ளது. ரோட்டரியில் உறுப்பினராவது ஒரு வாய்ப்பாகும். நட்புறவு மற்றும் சேவை நமது அமைப்பின் இரு முக்கிய கரங்களாகும். உறுப்பினர் என்பது முதன்மையான உள் அளவீடு என்ற போதிலும் சமூகத்திற்கு சேவை செய்வது நமது வெளித் தோற்றமாகும். நம்மில் பலர் நட்புறவு மற்றும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புகளுக்காக இணைகிறோம். எனினும் அர்த்தமுள்ள சேவைத் திட்டங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் நமது நேர்மறை எண்ணங்களை வளர்ச்சி கண்ணோட்டத்தில் பாராட்டிக் கொள்கிறோம்.

நமது மண்டலங்களில் உள்ள பெரும்பாலான மாவட்டங்கள் அடுத்த சில வாரங்களில் மாவட்ட மாநாட்டை நடத்த உள்ளன. இது நிச்சயம் நண்பர்களையும் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள நமக்கு உதவும். இந்த மாநாடு ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும், நமது அமைப்பை பற்றி நிறைய தெரிந்துகொள்ளவும், எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டுச் சேவையின் சக்தி என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவும் உதவும். நம்மால் முடிந்ததைச் செய்வோம். விரைவில் "சிறு துளி பெருவெள்ளம்" என்பதை உணர்வோம்.

போலியோவை ஒன்றுபட்டு ஒழித்ததில் நாம் பெருமைபட்டுக் கொள்கிறோம். 35 ஆண்டுகளுக்கு முன்பு போலியோவை ஒழிப்பது சாத்தியமற்ற கனவாகவே இருந்தது. இந்த வெற்றிக்கு காரணம் கடந்த காலங்களில் ரோட்டேரியனான உங்களின் பெரு முயற்சியும், ரோட்டரி அறக்கட்டளைக்கு உங்களின் பங்களிப்பும் தான். இதற்காக நாம் பெருமைபட்டுக் கொண்டாலும் பெரும்பாலான ரோட்டேரியன்களுக்கு தனிப்பட்ட முறையில் பங்களிப்பு இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. நாம் வரலாற்றின் முக்கிய அங்கமாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனாலும், வரலாறு படைப்பதில் நாம் முக்கிய பங்காற்ற முடியும். உலகம் முழுவதிலும் ரோட்டேரியன்கள் தன்னலமில்லாமல் TRFக்கு பங்களிப்பு செய்ததன் மூலம் கணிசமான, முக்கியமான திட்டங்களை நம்மால் செயல்படுத்த முடிந்தது. ஒவ்வொரு ரோட்டேரியனும் நாம் முக்கிய பங்களிப்பு செய்துள்ளோமா என்று தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். எதிலும் நம்பிக்கையுள்ளவர் ஒரு கண்ணாடி டம்ளரில் பாதியளவு தண்ணீர் உள்ளதாகக் கூறுகிறார். அவநம்பிக்கையுள்ளவர் டம்ளரில் பாதியளவு காலியாக உள்ளதாகக் கூறுகிறார். ஒரு ரோட்டேரியன், டம்ளரில் மீதி பாதியளவு தண்ணீர் நிரப்ப எனக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது என்று கூறுகிறார்.

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


## Board of Trustees

Shekhar Mehta RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi RID 3131
**RI Director &**
**Chairman, Rotary News Trust**

AS Venkatesh RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
**Chairman**
**Governors Council**

Anup Mittal RID 3011
**Secretary**
**Governors Council**

Ramesh Meher RID 3030
**Secretary**
**Executive Committee**

V Thirupathi Naidu RID 3160
**Treasurer**
**Executive Committee**

Jacintha Dharma RID 3212
**Member**
**Advisory Committee**




**Editor**
Rasheeda Bhagat

**Deputy Editor**
Jaishree Padmanabhan

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

# கூட்டுப்பணிகளின் மதிப்பு



கூட்டுப் பணிகளின் (Partnerships) வழியாக வழிநடத்துதல் ரோட்டரிக்குப் புதிது இல்லை: பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் முன்னெடுப்பை உருவாக்குவதற்கு நாம் உதவினோம். பின்னர், பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இதில் இணைந்தபோது, இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான போரில் ஒரு நீண்ட கால நிதி திரட்டல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டாளர் நமக்குக் கிடைத்தார். நம்முடைய கூட்டுப்பணி மற்றும் கேட்ஸ் அறக்கட்டளையுடனான 2-க்கு-1 நிதி திரட்டல் பொருத்த ஒப்பந்தத்தின் வழியாக, ரோட்டரி ஆண்டுதோறும் இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்பதற்கு $150 மில்லியன் திரட்டுகிறது. இந்த நோயை முடிக்கும் முயற்சியில் அவர்கள் பங்கேற்பது நமக்குப் பெருமை அளிக்கிறது.

கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் பிற கூட்டாளர்களுடனான நம்முடைய பணி இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதுடன் முடிவதில்லை, மற்ற நோய்த்தடுப்பு முயற்சிகளும் இதில் உள்ளன என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். ரோட்டரி அறக்கட்டளை, கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் US World Vision அமைப்புகளுடன் இணைந்து, ஜாம்பியாவில் மலேரியாவை அகற்ற உதவுகிற, ரோட்டரி உறுப்பினரால் வழிநடத்தப்படுகிற திட்டம் ஒன்றுக்கு இணை நிதி அளிக்கிறது. இந்த முயற்சி தொடர்பான முந்தைய கூட்டுப் பணி, வருங்கால உடனுழைப்பின் அடிப்படையில், ஒவ்வோர் இணை நிறுவனரும் கூட்டாளர்களுக்கு $2 மில்லியன் பங்களிக்கிறார்கள். ரோட்டரி அறக்கட்டளையின் பெரிய அளவுத் திட்டங்கள் நல்கையின் முதல் பெறுநராகிய மலேரியா இல்லாத ஜாம்பியா திட்டத்துக்கு இந்தப் பங்களிப்பு சென்று சேரும்.

ரோட்டரி, பன்னாட்டு மேம்பாட்டுக்கான அமெரிக்க அமைப்புடன் (USAID) இணைந்து தேசிய அளவில் பெரிய முன்னெடுப்புகளில் ஈடுபடுகிறது. ரோட்டரி USAID WASH கூட்டுப் பணியானது, உகாண்டா, கானா போன்ற நாடுகளில் உள்ள சமூகங்களும் அரசுகளும் லட்சக்கணக்கான மக்களுக்குப் பாதுகாப்பான நீர், தூய்மை மற்றும் சுத்தத்தை வழங்க உதவியுள்ளது, பல உயிர்களை நல்ல முறையில் பாதித்துள்ளது. இத்தாலியில் கோவிட்-19 மற்றும் அதன் தொலைநோக்கு நிதி மற்றும் சமூகத் தாக்கத்தை எதிர்த்துப் போரிட உதவுவதற்காக நாம் USAID உடனும் சேர்ந்து பணிபுரிகிறோம். USAID மற்றும் ரோட்டரி இணைந்து நிதி அளிக்கும் ஐரோப்பாவின் இதயங்கள் திட்டம் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சமூகங்களுக்குப் பன்னாட்டு நல்கைகளின் வழியாக உதவுகிறது.

ஊட்டச்சத்தின் ஆற்றல் முன்னெடுப்பின் வழியாக, இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதலில் நம் கூட்டாளரான UNICEF மற்றும் எலியானெர் குரூக் அறக்கட்டளையுடன் நாம் இணைந்து பணிபுரிகிறோம், அறக்கட்டளையின் ஒளி இன்னும் நன்கு மின்னும் படி செய்வோம். அதன்மூலம், நாம் புதிய கூட்டாளர்களைக் கண்டறிவோம், உலகில் நாம் அனைவரும் செய்யும் நன்மையை மிகுதியாக்குவோம்.

**ஜான் F ஜெர்ம்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



# Houstonயில் ஷாப்பிங்

மியோகி வாக்கர்



2022 ஜூன் 4 முதல் 8 வரை நடைபெறும் ரோட்டரி பன்னாட்டு மாநாட்டுக்காக நீங்கள் Houstonக்கு வரும் போது, கையோடு சூட்கேஸைக் கொண்டு வருவது நல்லது. இந்த நகரம் தன்னுடைய ஷாப்பிங்குக்காகப் புகழ் பெற்றது: ஆடம்பர ஃபேஷன் கடைகளில் தொடங்கி, ஈர்க்கின்ற உள்ளூர்த் தயாரிப்புகள் வரை அனைவருக்கும் ஏதோ ஒன்று இங்கு இருக்கும்.


Uptown Houstonல் உள்ள Galleriaல், பிரமிக்க வைக்கும் 2.4 மில்லியன் சதுர அடி பரப்பில் நூற்றுக் கணக்கான கடைகளை நீங்கள் காண்பீர்கள். Houstonன் மிகப் பெரிய ஷாப்பிங் மையமான இது, இந்த நாட்டின் மிகப் பெரிய ஷாப்பிங் மையங்களில் ஒன்று. சுற்றுலாப் பயணிகளும் உள்ளூர் மக்களும் நெய்மன் மார்கஸ், நார்ட்ஸ்ட்ராம், சனெல், கேப், H & M மற்றும் சாக்ஸ் ஃபிஃப்த் அவென்யூ போன்ற கடைகளைத் தேடி இங்கு வருகிறார்கள்.

River Oaks Shopping Center என்பது Houstonன் பழைய மற்றும் ஸ்டைலான மையங்களில் ஒன்று. 1937ல் தொடங்கப்பட்ட மையம், தன்னுடைய கலை அலங்கரிப்புக் கட்டடங்கள், திறந்த வெளிக்கருத்து, விருது வென்ற திரைஅரங்கம் மற்றும் பழைய மற்றும் சமகால அழகியலின் கலவை ஆகியவற்றுக்காக மிக நன்றாக அறியப்பட்டது. அத்துடன், இங்குள்ள 70க்கும் மேற்பட்ட கடைகள், உணவகங்கள் அனுபவத்தை நன்கு உயர்த்துகின்றன.

Houstonன் அழகான Uptown Parkல் சில டஜன் ஈர்க்கின்ற, புதுமையான மற்றும் உள்ளூர்க் கடைகள் உள்ளன. ஒரு சிகார் கடை, விண்வெளி ஆராய்ச்சி அலங்கரிப்பைக் கொண்ட கஃபே, உள்ளூர் மற்றும் பன்னாட்டுக் கலைஞர்கள் இடம் பெறும் நகைக்கடை போன்ற தனித்துவமான வழங்கல்களைக் கொண்ட ஷாப்பிங் மையம், Houstonஐச் சேர்ந்த பலருடைய விருப்பம். ஷாப்பிங் முடிந்த பிறகு சாப்பிடுவதற்காக, உண்மையான ஃபிரெஞ்சு-மத்தியத் தரைக்கடல் உணவில் தொடங்கி சுஷி, மெக்சிகச் சாலையோர உணவு வரை வழங்கும் உணவகங்கள் உள்ளன.

**மேலும் தெரிந்துகொள்ள,**
convention.rotary.org பாருங்கள்

ADVT.




An ISO9001 and 14001 Certified Company

**JOGANI IMPEX LLP**

*Manufacture and Supplier of all type of Concrete and Construction Fibers*

For Dealership and Trade inquiries write to

**joganihelpline@gmail.com** or **9107690690**

www.joganireinforcement.com Follow us on:

# ரோட்டரி பிரமுகர்களின்
# மஹாப்ஸ்-21 மண்டல மாநாடு

ரஷீதா பகத்

இந்த அரங்கத்தில் 700 பிரதிநிதிகளை நேரில் பார்ப்பது அற்புதமான காட்சியாக இருக்கிறது. பல மாதங்களுக்குப் பிறகு, ஆன்லைன் சந்திப்பு, மெய்நிகர் சந்திப்பிலிருந்து விடுபட்டு இப்போது நேரிடையாக சந்திக்கிறோம். பழைய நண்பர்களை சந்திப்பதும், புதியவர்களை அறிமுகம் செய்துகொள்வதும், அவர்களுடன் காபி குடித்துக் கொண்டே அரட்டை அடிப்பதும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று RI தலைவர் சேகர் மேத்தா, மஹாப்ஸ்-21 மண்டல மாநாட்டில் தொடக்க அமர்வில் பேசுகையில் கூறினார்.

சென்னைக்கு அருகில் உள்ள மாமல்லபுரத்தில் 700 பிரிதிநிதிகள் நேரிடையாகப் பங்கேற்கும் மண்டல மாநாட்டுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்ததற்காக RI இயக்குநர் A S வெங்கடேஷ் மற்றும் மாநாட்டின் தலைவர் PDG M முருகானந்தம் ஆகியோருக்கு அவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். தொற்றுக்காலத்தில் இப்படியொரு மாநாட்டுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வது எவ்வளவு சவாலானது என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். ஆனால், மண்டல மாநாடு வேடிக்கைகள் நிறைந்தது. இங்கு நீங்கள் மக்களைச் சந்திக்கலாம், எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளலாம். புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளலாம். சவால்களை எப்படிச் சமாளிப்பது என்பதைத் தெரிந்து கொள்வதுடன், சிறந்த பேச்சாளர்களின் உரையையும் கேட்க முடியும்.

தமது பதவிக்காலத்தில் முதல் ஐந்து மாதங்களைத் திரும்பிப்பார்க்கையில் அவர் கூறியதாவது: ஆகஸ்ட் 15 ஆம் தேதியான நமது சுதந்திர தினம் எனக்கும் ராஷிக்கும் மறக்கமுடியாத மகிழ்ச்சியான நாளாக இருந்தது. அன்றைய தினம் ஈவான்ஸ்டனில் RI தலைமையகத்தின் 18-வது தளத்தின் உச்சியில் இந்திய திருநாட்டின் தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. நாங்கள் சென்ற இடத்தில் எல்லாம் இந்திய தேசியக் கொடியை பார்க்க முடிந்தது.

மேலும் வளருங்கள், மேலும் சேவை செய்யுங்கள் என்னும் தாரக மந்திரத்தை நினைவு கூர்ந்த மேத்தா, உலகம் முழுவதும் இந்த சொற்றொடர் பிரபலமாகிவிட்டது. அத்துடன் ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டு வாருங்கள் என்ற சொல் மேலும் பிரபலமாகிவிட்டது. உலகம் முழுவதும் வளருங்கள், சேவை செய்யுங்கள் திட்டத்தைச் செயல்படுத்த ரோட்டேரியன்கள் முன்வந்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், இங்குள்ள பார்வையாளர்கள் உலகின் மற்ற பகுதியில் உள்ள மக்களுக்கு மேலும் வளருங்கள், மேலும் சேவை செய்யுங்கள் என்பதற்கு பாடம் எடுக்க முடியும்.

பெர்னாட்ஷாவின் புகழ்பெற்ற வார்த்தைகளான “நீங்கள் ஒரு விஷயத்தை பார்த்து ஏன் என்று கேட்கிறீர்கள். ஆனால், இல்லாத விஷயங்களை கனவு காண்கிறேன்.




இடதிலிருந்து: *சுமதி, மாநாட்டின் தலைவர் PDG M முருகானந்தம், அமீதா, RID மகேஷ் கோட்பாகி, வினிதா மற்றும் மாநாட்டின் அமைப்பாளர் RID A S வெங்கடேஷ், RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி.*

இது ஏன் முடியாது? என்று கேட்கிறேன்". ரோட்டரியின் வளர்ச்சி என்று வரும்போது, ஏன் 1.3 மில்லியன் உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடாது? என்று கேட்டேன். பலர் அப்போது என்னைப் பார்த்து சிரித்தார்கள். ஆனால், இப்போது மக்கள் என்னை பார்த்துச் சிரித்தால் நான் சரியான பாதையில் செல்கிறேன் என்பதை ரோட்டரியில் கற்றுக்கொண்டேன், என்றார்.

உலக அளவில் இந்தப் பிராந்தியம் உறுப்பினர்கள் சேர்க்கையில் முன்னிலையில் இருப்பதாக மேத்தா தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் சராசரியாக உறுப்பினர் சேர்க்கை என்பது ஆண்டுக்கு 4,000 என்ற அளவில் இருந்தது. ஆனால், இந்த ரோட்டரி ஆண்டின் முதல் ஐந்தரை மாதத்தில் நான்கு ஆண்டுகளில் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டீர்கள். இப்போது 16,000த்திறகும் மேலான உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்குள் கூடுதலாக 20,000 உறுப்பினர்களைச் சேர்க்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உறுப்பினர்கள் சேர்க்கை எவ்வளவு முக்கியமோ அதுபோல் உறுப்பினர்களைத் தக்கவைப்பதும் முக்கியமானது. மேலும் ரோட்டரிக்கு அதிக உறுப்பினர்களைக் கொண்டு வந்தவர்கள் அவர்களை தக்க வைத்துக் கொள்ள பல்வேறு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்த விரும்புகிறார்கள்.

உலகம் முழுவதும் ரோட்டரி வளர்ந்து வரும் நிலையில் நம்மால் அதிகம் சேவை செய்ய முடிகிறது என்பது மகிழ்ச்சியான செய்தி. மேலும் இந்த பிராந்தியம்தான் அதிகம் சேவை செய்யவேண்டும் என்ற கதையை எழுதுகிறது. TRF திட்டங்களை செயல்படுத்துவதாக இருக்கட்டும் அல்லது அறக் கட்டளைக்கு அதிகம் கொடுப்பதாக இருக்கட்டும் அல்லது சேவை நடவடிக்கைகளாக இருக்கட்டும் இந்த பிராந்தியம் செய்வதைப் போல



ஸ்ரீதர் பாரதி

## இந்தியாவில் ரோட்டரி பணிகள்-ஒரு கண்ணோட்டம்

*கடந்த 10 ஆண்டுகளில், இந்தியாவில் செய்த ரோட்டரி பணிகளை விவரித்தார் தலைவர் சேகர் மேத்தா.*

- *இந்தியாவில் நாங்கள் நிறுவிய 50 கண் மருத்துவமனைகள் மூலம் 2 மில்லியன் கண் அறுவைச் சிகிச்சை கள் செய்துள்ளோம்.*
- *20,000த்துக்கும் மேலான குழந்தைகளுக்கு உயிர்காக்கும் இதய அறுவைச் சிகிச்சை செய்து அவர்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம்.*
- *இந்தியா முழுவதும் 30க்கும் மேலான இரத்த வங்கிகள் நிறுவியுள்ளோம்.*
- *இந்தியாவில் இயற்கைப் பேரிடர் ஏற்படும் காலங்களில் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்குமிடம் உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கியுள்ளோம்.*
- *ஸ்வாச் பாரத் (தூய்மை இந்தியா) திட்டத்தின் கீழ் ஊரகப்பகுதிகளில் 20,000 கழிப்பறைகள் கட்டுவதற்கு பங்களித்துள்ளோம்.*
- *25,000த்துக்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு மின்னணு-கற்றல் திட்டங்களைச் செயல்படுத் தியுள்ளோம்.*
- *TEACH திட்டத்தின் கீழ் 70,000த்துக்கும் மேலான ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*
- *50,000 குழந்தைகள் மீண்டும் பள்ளிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.*
- *ஐந்து ஆண்டுகளில் 5,000 நூலகங்கள் அமைக்க அப்போது மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த பிரகாஷ் ஜாவ்டேகரிடம் உறுதி யளிக்கப்பட்டு அவற்றை மூன்றரை ஆண்டுகளில் செயல்படுத்தினோம்.*
- *3,000 மகிழ்ச்சிப்பள்ளிகளை உருவாக்கியுள்ளோம்.*

## இன்ஷா அல்லா
## போலியோ இல்லாத பாகிஸ்தான்

*இந்தியாவில் தேசத்தை கட்டியெழுப்புவதில் ரோட்டரி ஈடுபட வேண்டியதன் அவசியத்தை நான் அடிக்கடி குறிப்பிடுவதுடன், இந்திய அரசுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்றும் சொல்வேன். இது பலருக்கும் சந்தேகத்தை எழுப்பியது. ஆனால், நமது போலியோ ஒழிப்புத் திட்டம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. உலக சுகாதாரத் திட்டத்தில் ரோட்டரியின் பங்கு பெரியது. 125க்கும் மேலான நாடுகளில் போலியோ ஒழிக்கப்பட்டு விட்டது. அம்மை நோய் தவிர போலியோ தான் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்தது. அறங்காவலர் அஜீஸ் மேமன் என்னிடம் அடிக்கடி கூறுவார். இன்னும் 45 நாட்கள் உள்ளன. அதற்குள் பாகிஸ்தானும் ( அங்கு இந்த ஆண்டு இதுவரை போலியோ தாக்குதல் எதுவும் பதிவாகவில்லை) போலியோ இல்லாத நாடாக உருவாகிவிடும். இன்ஷா அல்லா அஜீஸ், அந்த நாளில் நான் உங்களுடன் இருப்பேன் என்றார் சேகர் மேத்தா.*

*ரோட்டேரியன்கள் ஒரு சவாலை எடுத்துக் கொண்டால் எதுவும் சாத்தியமாகும். அதற்கான சக்திதான் இந்த பிராந்தியத்திலுள்ள 1,60,000 உறுப்பினர்கள். இந்த தேசத்தை கட்டியெழுப்புவதற்கு 1,50,000 பேர் தங்கள் திறமையையும் சக்தியையும் வெளிப்படுத்த தயாராக இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்தியப் பிரதமர் மிகவும் மகிழ்ச்சி அடைவார் என்று மேத்தா மேலும் கூறினார்.*



வேறு எங்கும் நான் பார்க்கவில்லை. இந்தியா, இலங்கை, நேபாளம் ரோட்டரி கிரீடத்தில் ஜொலிக்கும் இரத்தினங்கள். அப்படி என்ன சிறப்பான வேலை இங்கு நடக்கிறது. (பெட்டிச் செய்தியை பார்க்கவும்).

பல ஆண்டுகளுக்கு முன்பு NDTV தொலைக்காட்சி கோகோ-கோலா மற்றும் சச்சின் டெண்டுல்கர் இணைந்து ‘Support My School’ என்னும் டெலிதான் நிகழ்ச்சியை நடத்தியபோது அதைப் பார்த்து நான் வியந்தேன். இதேபோன்ற ஒரு நிகழ்ச்சியை ரோட்டரிக்காக நடத்த வேண்டும் என்று நினைத்தேன். சில ஆண்டுகளுக்குப் பிறகு இதேபோன்ற ஒரு நிகழ்ச்சி நடத்த NDTV யிடமிருந்து அழைப்பு வந்தது. அதன்பேரில் நானும் PRIP கல்யாண் பானர்ஜியும் அவர்களின் ஸ்டூடியோவுக்கு விரைந்தோம். சௌரவ் கங்குலி மற்றும் ரண்வீர் சிங் இருவரும் அங்கு இருந்தனர். கோகோ-கோலாவும் சச்சினும் இணைந்து 600 பள்ளி நிகழ்ச்சி களை நடத்தியதாகவும், ரோட்டரி ஓராண்டில் 1,300 மகிழ்ச்சிப் பள்ளிகள் (Happy Schools) நிகழ்ச்சி நடத்தியிருப்பதாகவும் அறிந்து கொண்டேன். இந்த பிராந்தியத்தில் ரோட்டரியின் தொடர்பு சக்தி இதுதான், என்றார்.

தொற்றுக்காலத்தில் ரோட்டரி ஏற்கெனவே எழுத்தறிவு இயக்கத்தை செயல்படுத்திக் கொண்டிருந்தது. 6 ஆண்டுகளில் இதை 25 மாநிலங்களுக்கு கொண்டு செல்ல திட்டம். ஆனால், குழந்தைகள் வீட்டிலிருந்தே படிக்கும் வகையில் மின்னணு முறை கற்றல் திட்டத்தை பிரதமர் அறிவித்தார். நான் உடனே பிரதமருக்கு கடிதம் எழுதினேன். 5 நாளில் பதில் வந்தது. அடுத்த 45 நாட்களில் மத்திய அரசுடன் நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டோம். இன்று இந்தியாவில் 100 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகளுக்கு நடத்தப்படும் பாடம் RILM உருவாக்கியதுதான். இது அரசின் E-வித்யா அலைவரிசை களில் ஒளிபரப்பாகிறது. ஒவ்வொரு அத்தியாயம் முடிந்த பின்னரும் இது RILMஆல் வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்படும். கோடிக் கணக்கான குழந்தைகள் ரோட்டரி என்ற பெயரைக் கேட்டு வளர்வார்கள் என்றார் மேத்தா. நாம் அவர்களுக்கு 2,000 தொகுப்புகளுக்கு மேலாக வழங்கியுள்ளோம். அவை தொடர்ந்து வெளியிடப்பட்டால் அவை 10 ஆண்டுகளுக்கு வரும். அனைத்து பாடங்களின் உள்ளடக்கமும் 6 மாதங்களில் தயாரிக்கப்பட்டவை.

வயது வந்தோர் கல்வி குறித்தும் அரசுக்கு ரோட்டரி உறுதியளித் துள்ளது. மேலும் பிரம்மகுமாரிகள், காயத்ரி பரிவார் போன்ற அமைப்புகள் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள ஏழு வெவ்வேறு பல்கலைக்கழகங்களுடனும் ரோட்டரி கூட்டாண்மை வைத்து செயல் படுகிறது என்றார். இலக்கை நாங்கள் எப்படியும் அடைவோம். உங்களுக்கு பெரிய கனவுகள் இருந்தால் இவை அனைத்தும் நிகழலாம்.

தண்ணீர் சேமிப்புக்காக 200 தடுப்பணைகள் கட்டுவதற்கு நாங்கள் மும்பையில் அம்லா ரூயாவுடன் (தண்ணீர் சேகரிப்புக்காக பணியாற்றிய சமூக ஆர்வலர்) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளோம். ரோட்டரி 20 சதவீத நிதியை வழங்கினால் போதுமானது. அவர்கள் 80 சதவீத நிதியை கொடுப்பார்கள்.




RID 3011 DG அனுப்மிட்டல், இதற்காக சர்வதேச நிதியுதவித் திட்டத்தின் கீழ் 150 தடுப்பணைகள் கட்டுவதற்கான நிதியைப் பெற்றுள்ளார்.

ஈரோட்டில் கோவிட் காலத்தில் ரூ.20 கோடி நிதி திரட்டி, 70,000 சதுர அடி பரப்பளவில் 400 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையை 45 நாட்களில் கட்டியதற்காக PDG சகாதேவனுக்கு என்னுடைய பாராட்டுகள்.

இதுபோன்ற கோவிட் கதைகள் பல உங்களால் உருவாக்கப்பட்டுள்ளன. நாம் செய்யும் பணி மகத்தானது. இரண்டு மாதங்களுக்கு முன்பு நாங்கள் நீரிழிவு நோய் பரிசோதனை முகாம் நடத்த விரும்பினோம். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல் பட்டதன் மூலம் 10 லட்சம் பேருக்கு நீரிழிவு நோய்க்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது. நீரிழிவு நோய் உள்ளவர்களாக புதிதாக 1 லட்சம் பேர் கண்டறியப்பட்டனர். அனைத்து மாவட்ட ஆளுநர்களுக்கும் நான் தலை வணங்குகிறேன்.

பார்வைக் குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு 1 லட்சம் கண்ணாடிகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட 'விஷன் ஸ்பிரிங்' திட்டத்தில் இந்தியாவில் 250 சங்கங்கள் கையெழுத்திட்டுள்ளன. நான் பிரதமர் மோடியை சந்தித்த போது, உங்களால் முடியும் என்றால் பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஊட்டச்சத்துக் காக பாடுபடுங்கள் என்று கூறினார். 'அனீமியா முக்த் பாரத்' (இரத்தசோகையை போக்கும் திட்டம்) திட்டத்துக்காக யுனிசெப்புடன் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். உ.பி.யில் முதல் கட்டமாக 10,000 சிறுமிகளை இலக்காகக் கொண்டு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார் மேத்தா.

கிளாஸ்கோவில் நடைபெற்ற COP 26 பருவநிலை உச்சி மாநாட்டில் ரோட்டரி சார்பில் தாம் கலந்து கொண்டதாக தெரிவித்த தலைவர் மேத்தா, இந்தியா, வங்கதேசம், கென்யா, நைஜீரியா மற்றும் செஷல்ஸ் உள்ளிட்ட 10 நாடுகளில் சதுப்பு நிலங் களை அமைக்க ரோட்டரி சார்பாக உறுதியளித்ததாக மேலும் கூறினார்.

பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது உலகம் முழுவதும் கவர்ந்து விட்டது. அதற்கான திட்டங்கள் எல்லா இடங்களிலும் நடந்து வருகின்றன. இந்தியாவில், நான் உறுப்பினராக உள்ள கொல்கத்தா மாநகர ரோட்டரி சங்கம் உள்பட பல்வேறு சங்கங்களில் 'வீரங்கணா' (பெண்களுக்கான

தற்காப்புக் கலை) திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

சர்வதேச மானிய உதவியுடன் நாங்கள் செயல்படுத்தும் திட்டத்தில் 10 சதவீதத்தை பிறநாடுகளில் செயல்படுத்த நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம் என்று அவர் மேலும் கூறினார்.

தொடக்க உரையாற்றிய மாநாட்டின் அமைப்பாளரும் RI இயக்குநருமான A S வெங்கடேஷ், தற்போது நாம் சந்தித்து வரும் தொற்றுக்காலத்தில் மாநாட்டை ஒருங்கிணைப்பதில் உள்ள சவால்களை விவரித்தார். மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடமும், மாநாட்டுப் பிரதிநிதிகளிடமும் இந்த மாநாடு நடைபெறுமா என்பது குறித்து நிச்சயமற்ற தன்மையும், பீதியும், சந்தேகமும் இருந்தது.

மேலும் சென்னையில் வரலாறு காணாத மழை, வெள்ளம் சவால்களை அதிகரித்தது. அதாவது அறிவிக்கப் பட்ட ஓர் இடத்தில் திறந்த வெளியில் 700 பிரதிநிதிகள் பங்கேற்கும் மாநாட்டை நடத்த முடியுமா என்ற நிச்சயமற்ற நிலை இருந்தது. ஆனால், மாநாட்டுத் தலைவர் முருகானந்தம் மற்றும் அவரது குழுவினரை நான் முழுமையாக நம்பியிருந்தேன். எல்லவாற்றுக்கும் மேலாக கடவுள் அருள் இல்லாமல் நாம் அனைவரும் இன்று ஒன்று சேர்ந்திருக்க முடியாது.

இதற்கு முன்பு பல கூட்டங்கள் ஆன்லைன் மூலமே நடந்தன. இந்த முயற்சி எங்களுக்கு புது அனுபவமாக இருந்தது. இறுதியில் எங்கள் முயற்சிக்கு பலன் கிடைத்தது. இங்கு பெருமளவில் மக்கள் கூடியிருக்கிறார்கள். அவர்களை புன்னகையுடனும் வாழ்த்துக்களுடனும் நேரில் சந்திக்க முடிகிறது. உங்களை நேரில் சந்திக்கும் இந்த சமயத்தில் எங்களிடமிருந்த கவலைகள் பறந்தோடி விட்டன.

இந்த மாநாட்டுக்காக நான் மிகப்பெரிய ரிஸ்க் எடுக்க வேண்டியிருந்தது. ஒருவேளை நாம் அனைவரும் மாநாட்டு நிகழ்ச்சிக்காக ஒன்று சேர முடியாவிட்டால், இதற்கான இழப்பை யார் தாங்குவது என்பது மிகப்பெரிய கேள்வி. RI அதை ஏற்காது என்பது தெளிவாகத் தெரியும்.

ரோட்டரியின் பாரம்பரியத்தில் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 1,300 ஆண்டு காலம் பழமை வாய்ந்த துறைமுக நகரமான மகாபலிபுரம் மாநாட்டு இடமாகத் தேர்வு செய்யப்பட்டது. பல நாடுகளில் போலியோவை முற்றிலும் ஒழித்து விட்டதாக பெருமைப்பட்டுக் கொள்வதை நான் ஒவ்வொரு கூட்டத்திலும் குறிப்பிடுவதுண்டு. இன்று நாம் கூடியுள்ளது எதற்காக என்றால் நீண்டகாலமாக நம்மால் செய்யமுடியாத விருந்து, வேடிக்கை, சந்திப்பு, வாழ்த்துக்களை நேரில் பரிமாறிக் கொள்ளத்தான். ஆனாலும், நாம் கோவிட் வழிகாட்டு முறைகளை முறையாக பின்பற்றுவோம். ரோட்டரி எதற்காக நிறுவப்பட்டதோ அதற்கு நாம் நம்மை மீண்டும் அர்ப் பணிப்போம். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் நம் வாழ்க்கையையும் நம்மைச்சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையையும் மாற்றியமைப்போம்.

மாநாட்டின் தலைவரும் ரோட்டரி மாவட்டம் 3000த்தின் PDGயுமான M முருகானந்தம் மாநாட்டுக்காக தமது குழுவினர் திட்டமிட்டு பணியாற்றியதை விவரித்தார். உங்கள் அனைவருக்கும் மாநாட்டு நேரத்தையும், அனுபவத்தையும் கொடுப்பதில் சமரசம் செய்துகொள்ள விரும்பவில்லை. குறுகிய காலத்தில், அதாவது 100 நாட்களில் எங்களால் முடிந்ததை சிறப்பாகச் செய்ய முயற்சித்துள்ளோம். தயவு செய்து உங்களுக்கு கிடைத்த நேரத்தை இங்கு மகிழ்ச்சியாக செலவிட்டு அனுபவியுங்கள் என்றார்.

RI தலைவர் மேத்தா, RI கோவிட் பணிக்குழு தலைவர் PRIP K R ரவீந்திரன், வெங்கடேஷ் மற்றும் முருகானந்தம் முன்னிலையில்




*மாநாட்டின் தலைவர் PDG M முருகானந்தம் மற்றும் சுமதி ரோட்டரியின் மூத்தத் தலைவர்களை துவக்க விழாவிற்கு ஊர்வலமாக அழைத்து வருகிறார்.*



ரஷீதா பகத்

**வலதிலிருந்து:** RI *தலைவர் மேத்தா, தமிழ்நாடு சுகாதார துறை அமைச்சர் மா சுப்ரமணியன்,* RID A S *வெங்கடேஷ் மற்றும்* PRIP K R *ரவீந்திரன்.*

தமிழ்நாடு மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு "கோவிட் கள வீரர்" (Covid Warrior)' விருதை வழங்கினார். தாம் சென்னை மேயராக இருந்தபோது 2006ம் ஆண்டில், 155 கோட்டங்களில் மருத்துவ முகாம்கள் நடத்திய போது அதில் ரோட்டரி முக்கியப் பங்காற்றியதை அமைச்சர் சுப்பிரமணியன் நினைவுகூர்ந்தார். அப்போது மருத்துவ முகாம்களின் சாதனை எண்ணிக்கைக்காக லிம்கா புத்தகத்தில் நாங்கள் இடம்பிடித்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார். கோவிட் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் நாடு முழுவதும் கோவிட் சிகிச்சை மையங்கள் அமைத்ததற்காகவும் நன்றி தெரிவித்த அவர், இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகம் முழவதும் போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் சிறப்பான பணிகளை அங்கீகரித்தார்.■

Rotary PEOPLE OF ACTION

# மும்பையில் குறைந்த விலை மருத்துவசேவைகள் மையம்

ரோட்டரி செய்திகள் குழு



முந்தைய 12 ஆண்டுகளாக, தெற்கு மும்பையில் உள்ள வால்கேஷ்வரில் இருக்கும் மங்கள்தாஸ் பங்கங்கா மையத்தில் ஏழைக் குடும்பங்களுக்கு மருத்துவச் சேவை வழங்குவதற்காக ஒரு பல பராமரிப்பு மருத்துவ மையத்தை இயக்கிவருகிறது RC பாம்பே சீ ஃபேஸ், RID 3141.

இந்த மையம் பொது நலன், ஃபிசியோதெரபி, பெண் நோயியல், பல், கண் குறைபாடுகள், ஊட்டச்சத்துக் குறைபாடுகளுக்கான நோய் கண்டறிதல் பராமரிப்பைச் சலுகை விலையில் அளிக்கிறது. இந்தப் பகுதியில் இந்த மையம் மிகவும் புகழ் பெற்றுள்ளது, அர்ப்பணிப்புள்ள மருத்துவர்களின் குழு ஒன்று 1,000க்கும் மேற்பட்ட நோயாளிகளைக் குணப்படுத்திக் கவனித்துக் கொள்கிறது என்கிறார் இந்தச் சங்கத்தின் துணைத் தலைவர் பாரத் மெர்சன்ட்.

ஒவ்வொரு மாதமும், டாக்டர் குளின் கோத்தாரி கண் மருத்துவமனையில் இந்தச் சங்கம் குறைந்தது ஐந்து கண் புரை அறுவைச் சிகிச்சைகளையாவது ஆதரிக்கிறது. மூன்று ரோட்டரியன்கள், ஆன்களைக் கொண்ட ஒரு குழு தானே நீடிக்கும் மாதிரியில் நடத்தும் இந்த மையத்தில் கண், பல், எலும்புப் புரை முகாம்களும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

# கபில்தேவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது


V முத்துகுமரன்

அன்பையும் மகிழ்ச்சியையும் எல்லா இடங்களிலும் பரப்புவதற்கு முன்பு நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களை முதலில் நேசித்தால் பின் மற்றவர்களையும் நேசிக்கத் தொடங்குவீர்கள். சேவை செய்யும் மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ளுங்கள் அப்போதுதான் இந்த உலகில் வசதியற்றவர்களுடன் மகிழ்ச்சி, பணம் மற்றும் நேரத்தை பகிர்ந்துகொள்ள முடியும் என்று சென்னையில் நடைபெற்ற மஹாப்ஸ்-21 மண்டல மாநாட்டில் ரோட்டரியின் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றுக்கொண்ட இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் கபில்தேவ் நிகஞ்ச், கூறினார்.

RI இயக்குநர் A S வெங்கடேஷ் உடன் நடந்த உரையாடலின் போது ஹரியானாவின் சூறாவளியான அந்த வேகப்பந்து வீச்சாளர் கபில்தேவ், அவருக்கு மாநட்டில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது. நீங்கள் இதை வாழ்நாள் சாதனையாளர் விருது என்று அழைப்பதன் மூலம் எல்லாம் முடிந்து விட்டது. இனி சாதிப்பதற்கு ஒன்றும் இல்லை என்று அர்த்தமல்ல. உங்கள் அன்பு மற்றும் பாசத்தின் மூலம் நான் வாழ்க்கையில் இன்னும் சாதிக்க விரும்புகிறேன். கிரிக்கெட் டிலிருந்து நான் ஓய்வுபெற்ற போது விளையாட்டை விட வாழ்க்கை மேலானது என்பதைப் புரிந்து கொண்டேன்.

சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்கு ரோட்டரி அளித்து வரும் சேவை களைப் பாராட்டிய அவர், தனது சொந்த தொண்டு நிறுவனமான “குஷி” மூலம் மக்களிடம் மகிழ்ச்சி யை பகிர்ந்தளித்து வருவதாகத் தெரிவித்தார். என் எண்ணங்களை நிறைவேற்ற கடவுள் எனக்கு வாய்ப்பளித்துள்ளார். அந்த வகையில் நான் அதிர்ஷ்டசாலி. என் மகள் என்னிடம், “நான் என்னவாக வேண்டும் என ஆசைப்படுகிறாய்” என்று கேட்டபோது, நான் கிரிக்கெட் விளையாடியதுபோல் உன்னால் செய்ய முடியாது. நீ வாழ்க்கையில் என்னவாக விரும்புகிறாயோ அதைச் செய் என்று கூறியதாக நினைவுகூர்ந்தார். பெற்றோர்களின் பணி, தங்கள் குழந்தைகளை சரியான

*ரோட்டரியின் எழுத்தறிவு பிரசாரத்தை ஆதரிக்க நான் தயாராக இருக்கிறேன். அதற்காக நீண்ட தொலைவு செல்லவும் நான் தயார்.*



**வலதிலிருந்து:** *சுமதி, PDG M முருகானந்தம், அபிராமி ராமநாதன், ராஷி, RI தலைவர் சேகர் மேத்தா, கபில்தேவ், RI இயக்குனர் A S வெங்கடேஷ் மற்றும் வினிதா.*

வழியில் நடத்திச் செல்வதாகும். அப்போதுதான் குழந்தைகள் வாழ்க்கையில் தங்களுக்கு விருப்பான துறையில் சாதிக்க முடியும் என்றார்.

1983ம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், ஜிம்பாப்வேக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் இந்தியா 17 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தபோது நீங்கள் அதிரடியாக 175 ரன்கள் குவித்து அவுட்டாகாமல் அணியை வெற்றிப்பாதைக்கு கொண்டு சென்றீர்கள். மேலும் இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி கௌரவமான அளவில் 183 ரன்கள் எடுத்தது. அப்போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

இந்திய கிரிக்கெட் அணி குடும்பம் போன்றது. நான் கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்தவன். எனவே அணியின் வெற்றியில் கவனம் செலுத்தினேன். கடவுள் ஒவ்வொருவருக்கு என்று சில நாள்களை நிர்ணயித்துள்ளார். அப்போது எந்த தவறும் நடக்காது. அந்த நாள்கள் எனக்கானவை. அவற்றை நான் அனுபவித்தேன்.

ஒரு குடும்பமாக ரோட்டரி, தங்கள் பயணத்தில் மலையையும் நகர்த்த முடியும் என்றார் கபில்தேவ்.

## திரைப்படம் 83 படத்திற்காக காத்திருக்கிறேன்

கிரிக்கெட் வீரர்களின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும், கபீர் கான் இயக்கி, கிரிக்கெட் வீரராக ரண்வீர் சிங் நடித்துள்ள ஹிந்தி திரைப்படமான 83, வெளியீட்டுக்காக மற்றவர்களைப் போலவே, ஆவலுடன் காத்திருக்கிறார் கபில்தேவ். 1983 உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் எங்கள் செயல்பாடுகளை நான், சுனில் காவஸ்கர் மற்றும் ஸ்ரீகாந்த் மூவரும் விளக்கியுள்ளோம். படம் எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. ரண்வீர் எங்கள் வீட்டுக்கு வந்து என் செயல்பாடுளை இரண்டு நாள் கேமராவில் பதிவு செய்தார். முதலில் நான், தயங்கினாலும் பின்னர் இயல்பாக நடந்து கொண்டேன்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு கோல்ஃப் விளாயாடத் தொடங்கினேன். என்னை சுற்றியுள்ள ஒரு சிலருடன் மட்டுமே விளையாடுவேன். விளையாட்டு தவிர உனக்கு ஒன்றும் தெரியாது. எனவே விளையாட்டு தவிர நீ வேறு எதையும் செய்ய வேண்டாம் என்று அம்மா எனக்கு அறிவுரை கூறியிருந்தார்.

## ஸ்டைல் மன்னன்

அவ்வப்போது நீண்ட தலைமுடி வளர்ப்பது அல்லது சர்தார் போல தலைப்பாகை அணிந்து தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது உங்கள் வழக்கமா? என்று வெங்கடேஷ் கேட்டதற்கு, என் மனைவியைப் புண்படுத்தாத வரை சிறிய மாற்றங்கள் அழகானவைதான்! மக்கள் என்னைப் பற்றி பேச வேண்டும் என நான் விரும்புகிறேன் என்றார்.

கேள்வி-பதில் அமர்வில், உயர்ந்த அளவில் மன அழுத்தத்தை எப்படிச் சமாளிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நம் நாட்டின் சார்பாக விளையாடுவது மன அழுத்தம் அல்ல, மகிழ்ச்சியானது. நான் வேடிக்கையாகவும் விருப்பத்துடனும் விளையாடுகிறேன். அதுதான் எனது வாழ்க்கை என்று பதில் அளித்தார்.


கிரண் ஜெஹ்ரா

ரோட்டேரியன்கள் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டிய கபில்தேவ், நற்பணிகளைத் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உலகில் பிறருக்காக ரோட்டேரியன்கள் அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறார்கள் என்று குறிப்பிட்ட அவர், மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில், ரோட்டரியின் எழுத்தறிவு பிரசாரத்தை ஆதரிக்க நான் தயாராக இருக்கிறேன். அதற்காக நீண்ட தொலைவு செல்லவும் நான் தயார் என்றும் தெரிவித்தார். கபில்தேவ் நிகழ்ச்சியில் பங்கேற்றதை கௌரவிக்கும் வகையில் மூன்று குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைக்கு ரோட்டரி நிதியுதவி செய்யும் என்று RID A S வெங்கடேஷ் அறிவித்தார்.■

# சவால்களை எதிர்கொள்வோம்!

ரஷீதா பகத்

‘மஹாப்ஸ்- 21’ மண்டல மாநாட்டை RI இயக்குநர் பரத் பாண்ட்யா தனக்கே உரிய பாணியில் சிறப்பாக கையாண்டார். அப்போது நடைபெற்ற கேள்வி-பதில் அமர்வும் சுவாரஸ்யமாக அமைந்திருந்தது. கேள்விகள் யதார்த்தமாகவும் அதற்கு குழுவினர் அளித்த பதில்கள் வெளிப்படைத்தன்மையாகவும் இருந்தது. பெரும்பாலும் கேள்விகள் தேர்தல்களில் குறுகிக்கிடுவது. மாவட்டத் தலைவர் மற்றும் சங்கத் தலைவர்களுக்கு RI மற்றும் இந்தியாவில் உள்ள மூத்த தலைவர்கள் இலக்குகளை எட்ட நிர்ப்பநதம் அளிப்பது ஆகியவை தொடர்பாக இருந்ததாக பாண்ட்யா கூறினார்.

ஒரு சர்ச்சையை எழுப்புவதற்காக மட்டுமே கேட்கப்படும் கேள்விகளைத் தவிர்த்து, அதே நேரத்தில் ரோட்டரியில் சிலவற்றை மறைத்து விட்டு எல்லாம் நன்றாக இருக்கிறது என்று சொல்ல விரும்பியதையும் தவிர்த்தேன் என்கிறார்.

முன்னாள் RI தலைவர் K R ரவீந்திரன், முன்னாள் இயக்குநர்கள் மனோஜ் தேசாய் மற்றும் C பாஸ்கர் குழு உறுப்பினர்களாக இருந்தனர்.

கேள்வி ரவீந்திரனிடம் கேட்கப் பட்டது. நான் (பாண்ட்யா) அதைக் கேட்கலாமா என்று தெரியவில்லை. ஆனால், நீங்கள் பதிலளிக்கலாம் அல்லது புறக்கணிக் கலாம். கேள்வி என்னவென்றால் மக்கள் உங்களை ‘இந்தியாவுக்கு எதிரானவர்கள்’ என்று சொல்கிறார்கள். இந்தியாவுக்கு எதிரான செயல்களைச் செய்வதாகவும் கூறுகிறார்கள்.

அப்படி கேள்வி எழுப்பியவர்களை அடையாளம் காட்ட முடியுமா? என்று ரவீந்திரன் கேட்டார். அதற்கு பாண்ட்யா மறுத்துவிட்டார். இருந்த போதிலும் நான் இந்த கேள்விக்கு பதிலளிக்கிறேன் என்ற ரவீந்திரன், இந்த அரங்கிலோ அல்லது எனது நாடானா இலங்கையிலோ இந்தியாவுக்கு எதிரானவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. என்னுடைய தந்தை இந்தியாவிலிருந்து வந்தவர். என்னுடைய தாத்தா கோயம்புத்தூரில் நீதிபதியாக இருந்தவர். அவரது குடும்பம் இந்தியாவில் வசித்து வந்தது. நானே OCI அடையாள அட்டை வைத்திருப்பவன். நான் கோயம்புத்தூரிலும் வர்த்தகம் செய்து வருகிறேன். இந்தியாவில் தேயிலைப் பைகள் சந்தையில் எனக்கு மிகப்பெரிய பங்கு உள்ளது. இந்தியாவில் நீங்கள் பயன்படுத்தும் தேயிலைப் பைகள் என்னிடமிருந்து வந்ததாகத்தான் இருக்கும். அப்படியிருக்கையில் நான் ஏன் இந்தியாவுக்கு எதிரானவனாக இருக்க வேண்டும்? இது ஒரு முட்டாள்தனமான கேள்வி.

ஆனால், TRF மற்றும் மாவட்ட அளவில் உள்ள நிதி முறைகேடுகள் பற்றி RI வாரியம் என்னை அடிக்கடி கேட்டுக் கொண்டதால்கூட இப்படி ஒரு புகார் எழுந்திருக்கலாம். நான் இப்படித்தான் வேலை செய்கிறேன். எந்த ஒரு அநாமதேய புகாரையோ அல்லது நிதி முறைகேடுகள் பற்றிய பூர்வாங்க ஆதாரங்கள் இல்லாத நிலையிலோ அவற்றை கண்டுகொள்வதில்லை. ரோட்டரி டைரக்டரியிலிருந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள மூன்று PDGக்களை நான் தேர்ந்தெடுக்கிறேன். ஒருவர் கணக்காளர், மற்றொருவர் தொழில்முறையாளர் மூன்றாமவர்



தொழிலதிபர். RISAO தனது சொந்த செலவில், (DG-க்களின் விருந்தோம்பலை எதிர்பார்க்காமல்) மாவட்டம் மற்றும் சங்களுக்குச் அவர்களை அனுப்பிவைக்கிறது. அங்கு அவர்கள் விசாரணை நடத்தி எனக்கு அறிக்கை தருகின்றனர். அதன் மீது எனது பரிந்துரையை வாரியத்திடம் நான் அளிக்கிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதா வேண்டாமா என்பதை வாரியம்தான் முடிவு செய்யும்.

அப்பொழுது தான் RI தலைவராகவும், மனோஜ் தேசாய் RI இயக்குனராகவும் இருந்தனர். நாங்கள் இந்தியா மற்றும் ஜப்பானில் பணிபுரியும் DGயை நீக்கிவிட்டோம். உடனே அவரை இந்தியாவுக்கு எதிரானவர் என்று DG அழைத்து, நீதிமன்றம் செல்வதாக அச்சுறுத்திய நிலையில், ஜப்பானில் உள்ள மூத்த தலைவர்கள் DG அச்சுறுத்தியபடி நீதிமன்றம் சென்றால் வழக்குக்கான கட்டணத்தை தாங்கள் செலுத்துவதாக வாரியத்திடம் உறுதியளித்தனர். மற்றொரு முறை வாரியம் ஒரு இந்திய மற்றும் ரஷிய மாவட்டத்தை பட்டியலிலிருந்து நீக்கியது. ஆனால், ரஷிய நாட்டவர், என்னை ரஷியாவுக்கு எதிரானவர் என்று கூறவில்லை. அவர் வாரிய இயக்குநராக இருந்தபோது, பாகிஸ்தானல் போலியாகவும், தேர்தலுக்காகவும் உருவாக்கப்பட்ட 40 சங்கங்களை நீக்கினார். அப்போது அவரை பாகிஸ்தானுக்கு எதிரானவர் என்று யாரும் சொல்லவில்லை.

நேற்று தலைவர் சேகரின் அறிமுக உரையைக் கேட்டபோது, அவரது சாதனையைக் கேட்டு பெருமிதம் கொண்டேன். அவர் வகித்த பல பதவிகள் நியமனங்கள் என்னால் செய்யப்பட்டது என்பது நினைவுக்கு வந்தது. நான் இந்தியாவுக்கு எதிரானவன் என்றால் இதைச் செய்திருக்க மாட்டேன். அவர் இந்தியர் என்பதால் நான் அதைச் செய்யவில்லை. ஆனால், அவர் திறமையானவர், தொழில் முறையில் ஒரு வேலையை சரியாகச் செய்து முடிப்பவர் என்பதால் அதைச் செய்தேன். அவர் RILM தொடங்கிய போது வாரியத்தில் இருந்த சில தனிப்பட்ட நபர்களை சமாதனப்படுத்தி அவரை நான் ஆதரித்தேன். எனவே, என்னால் இந்தியாவுக்கு எதிரானவன் என்ற கேள்வியைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த நபரின் பெயர் உங்களிடம் இருந்தால், ‘என்னை யாரும் தவறான பாதைக்கு இழுக்க முடியாது, லஞ்சமும் கொடுக்க முடியாது’ என்று அவரிடம் சொல்லுங் கள்! என்று கூறி பேச்சை முடித்துக் கொண்டார்.



**இடதிலிருந்து:** PRID *பரத் பாண்ட்யா,* PRIP K R *ரவீந்திரன்,* PRID *மனோஜ் தேசாய் மற்றும்* PRID C *பாஸ்கர்.*

*(அடுத்த நாள், நிறைவுநாள் அமர்வில் உரையாற்றிய தலைவர் சேகர் மேத்தா, ரோட்டரி தலைமைப் பயணத்தில் PRIP ரவீந்திரனின் பங்கு பணிகளை மனதார ஒப்புக்கொண்டார். ராஷிக்கும் எனக்கும் இது ஒரு சிறப்பான பயணம். நான் இன்று இங்கு இருக்கிறேன் என்றால் அதற்கு இங்கு வந்திருக்கும் இருவர் தான் காரணம். உங்களது நட்புக்கு நன்றி ரவி. நீங்கள் எப்போதும் என்னுடன் நிற்கிறீர்கள். ஆம், நான் ஹாம்பர்க் மாநாட்டு திட்டக்குழுவில் உத்திகளை வகுக்கும் குழு தலைவராக இருந்தபோது ஷெல்டர் பாக்ஸை கையிலெடுத்த போது அதில் நாங்கள் வெற்றிபெற முடிய வில்லை. இதற்கு காரணம் நீங்கள் தான். அதற்காக உங்களுக்கு நன்றி. அனைத்து வகையிலான கூட்டுறவுக்காக பாஸ்கருக்கும் (PRID) நன்றி. நாங்கள் நடத்திய அனைத்து விவாதங்களுக்கும் RI வாரியத்தில் எனக்கு ஆதரவாக இருந்ததற்கும் RIDs மகேஷ் மற்றும் வெங்கிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்).*

ரோட்டரி எதை நோக்கிச் செல்லவேண்டும், அதற்காக என்ன புதுமைகள் செய்ய வேண்டும் அல்லது எதிர்காலத் திட்டம் என்ன என்பது பற்றி யோசிக்காமல் உறுப்பினர் சேர்க்கையில் மட்டும் அதிகம் கவனம் செலுத்தப்படுகிறதே? என PRID தேசாயிடம் பதில் வேண்டி ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

சங்கங்களை ஆதரிப்பதும் பலப்படுத்துவதும்தான் பிரதான திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உறுப்பினர்கள் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளாக நிலையாக உள்ளது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்க




நாம் ஏதாவது செய்ய வேண்டும். இது நமது உள்முன்னுரிமையாகும் என்று தேசாய் கூறினார். இதர இரண்டு பகுதிகள் ஒன்று TRF பங்களிப்பு, மற்றது ரோட்டரி மீது பொதுமக்களிடம் நல்லெண்ணத்தை மேம்படுத்துவது. நாம் செய்யும் சேவைத் திட்டங்கள் காரணமாக TRF மூலமான சர்வதேச மானிய உதவி பெறுவது அதிகரித்துள்ளது. இதன் மூலம் ரோட்டரி மீதான நல்லெண்ணமும் மேம்பட்டுள்ளது. ஆனால், உறுப்பினர் சேர்க்கைதான் நமது முன்னுரிமை. அதற்கு நாம் அழுத்தம் கொடுக்காவிட்டால், அழிந்துபோன உயிரினமாகிவிடுவோம் என்றார்.

அடுத்து பாண்ட்யா, PRID பாஸ்கரிடம் ஒரு கேள்வி எழுப்பினார். சர்வதேச மானியத் திட்டங்களை (GGs) செயல்படுத்துவதில் தில்லுமுல்லுகள் நடைபெறுவதாகவும், சில சமயங்களில் பயனாளிகளின் பணம் சங்க நிதியாக எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறதே. நீங்கள் இயக்குநராக இருந்தபோது ஒரு குழுவை அமைத்தீர்களே. அதன் முடிவு என்ன? என்று கேட்டார்.

இதற்கு பாஸ்கர் பதிலளிக்கையில், சர்வதேச மானிய உதவியை அதிக அளிவில் பெறுபவர்களில் இந்தியாவும் ஒன்று. சில சமயங்களில் DG-க்கள் சர்வதேச மானிய உதவி பெறும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஆர்வமாக இருக்கிறார்கள். சமூகத்தின் தேவையை புரிந்துகொள்ளாமல், இதுபோன்ற மானிய உதவிக்கான TRF விதிகளை சரிவர கவனிக்காமலும் சங்கங்களை தூண்டி விடுவதையும் RI இயக்குநர் என்ற முறையில் நான் பார்த்திருக்கிறேன். GG-க்கு விண்ணப்பிக்க நிதி இல்லாத சில சங்கங்கள், பயனாளிடமிருந்து பணத்தை எடுத்து சங்கத்தின் பெயரில் TRF நிதியாக கொடுக்கின்றனர். பின்னர் சர்வதேச மானிய உதவி கிடைத்ததும் அந்த பணத்தை சங்கத்தின் பெயரில் நன்கொடையாக வழங்குவதை நான் பார்த்திருக்கிறேன் என்றார்.

இதுபோன்ற நடைமுறைகளை அறங்காவலர்கள் ஏற்றுக்கொள் வதில்லை என்பது சில சங்கங் களுக்குத் தெரிவதில்லை. சர்வதேச மானிய நிதியுதவி மூலம் மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட்ட சில உபகரணங்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் கிடப்பதை நாங்கள் கண்டறிந்தோம். உறுப் பினர்கள் சிலரே இது தொடர்பான புகார்களை தெரிவித்திருந்தனர். நேற்று தலைவர் சேகர் குறிப்பிடுகையில், நிதிகளை சரிவர பயன்படுத்தாது அல்லது நிதிமுறைகேடுகள் குறித்து எங்களில் சிலர் அறங்காவலர்களிடம் புகார் தெரிவிக்கின்றனர். இது இந்தியா பற்றிய மோசமான பிம்பத்தை உருவாக்குகிறது. எனவே 2017ல் நான் இதுகுறித்து அப்போதைய RI தலைவர் இயான் ரைஸ்லி, அறங்காவலர் தலைவர் பால் நெட்ஸல், மற்றும் நமது அறங்காவலர் சுஷில் குப்தா மற்றும் K R ரவீந்திரன் ஆகியோருடன் விவாதித்தேன். மானியங்களை மேற்பார்வையிடவும், TRF-க்கு செலவில்லாமல் பயணிக்கவும் PDGக்கள் கொண்ட குழு அமைக்கப் பட்டது. அந்த குழு இன்றும் இருக்கிறது என்று நினைக்கிறேன். இந்தியாவில் சங்கங்கள் என்ன செய்கின்றன. பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது. பயனாளிகளைச் சென்றடைகிறதா, அதன் மூலம் அவர்களின் வாழ்க்கை யில் மாற்றம் ஏற்படுகிறதா என்பதை உள்நாட்டில் கண்காணிக்க இது போன்ற மேற்பார்வைக்குழு நிச்சயமாகத் தேவை என்றார்.

அடுத்த கேள்வி ரவீந்திரனிடம் முன்வைக்கப்பட்டது. எங்கள் மண்டலங்களில் உள்ள மிகப் பெரிய சவால்கள் அல்லது நல்ல பணிகள் செய்கின்றனவா? நல்லிணக்க




**இடதிலிருந்து:** PDG M *முருகானந்தம்,* DGN V R *முத்து,* PDG K *ராஜகோபால்,* PRID *பாண்ட்யா,* PRIP K R *ரவீந்திரன்,* PDG *சமீர் ஹரியானி,* PRID *தேசாய்,* PRID C *பாஸ்கர்,* PDG *ஜான் டேனியல், மற்றும்* RID A S *வெங்கடேஷ்.*

ஒத்துழைப்புடன் ரோட்டரியை முன்னோக்கி கொண்டு செல்ல இவற்றை எப்படி சமாளிப்பது என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

ரவீந்திரன் பதிலளித்தார்: தலைவர் சேகர் இதற்கு நேற்று விரிவாக பதிலளித்தார். பல வழிகளில் உலகில் நாம் முன்னிலை வகிக்கிறோம். சேவைகளின் தரத்தில் வேறு நாடுகளோ அல்லது மண்டலங்களோ நம்முடன் போட்டி போட முடியாது. இந்தியாவுக்கு மட்டுமல்ல, வங்கதேசம், இலங்கை மற்றும் இந்த பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கும் நாம் சேவை செய்கிறோம். உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் நாம் உலகில் முன்னிலை வகிக்கிறோம்.

ஆனால், நமக்கு தேர்தல் தான் பிரச்னை. இதைத் தடுக்க நான் கடுமையாக முயன்றேன். ஆனால், முடியவில்லை. இது வாரியத்தில் எங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் வாரியத்துக்கு எழுதுகிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை என்று நினைக்கிறேன். முன்னதாக இந்த பிராந்தியத்தில் அறக்கட்டளை மற்றும் நிதி முறைகேடுகளில் பிரச்னைகள் இருந்தன. ஆனால், அவை பெரும்பாலும் தீர்க்கப்பட்டுவிட்டன. எங்களுக்கு இப்போது கருப்பு புள்ளியை ஏற்படுத்தியுள்ள பிரச்னை தேர்தல் தான். எனது கருத்து என்னவென்றால், மாவட்டங்கள் என்று வரும்போது PDGக்கள் தள்ளியிருக்க வேண்டும். வேட்பாளர்களே தங்களுக்கான பிரசாரத்தைச் செய்யலாம். ஆனால், ஆளுநர்கள் ஒதுங்கியிருந்தால் உயரத்தை எட்டமுடியாது. மண்டல தேர்தல்களின் போது முன்னாள் இயக்குநர்கள் மற்றும் இதர தலைவர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும். வேட்பாளரிடமே அதை விட்டுவிட்டு மற்றவர்கள் செயல்பாடுகளை கவனித்துக்கொண்டால் இதை பெருமளவில் குறைக்க முடியும். இந்த இரண்டு உரிமையும் இருந்தால் ரோட்டரியில் எங்களுக்கு சமமானவர்கள் இல்லை என்று சொல்லலாம்.

முந்தையநாள் தொடக்க விழாவில் தலைவர் சேகர் உரையாற்றுகையில், எங்கள் பிராந்தியத்தில் ரோட்டரி செய்துவரும் அருமையான பணிகளை பட்டியலிட்டார். குறிப்பாக சில திட்டங்களைச் சுட்டிக்காட்டினார். ஆனால், அவர் மேலும் கூறுகையில், ரோட்டரியில் பொய்யான செய்திகளை பரப்பத் தொடங்கியுள்ளது வேதனை அளிக்கிறது. உண்மை என்ன என்று தெரியாமல் பொய்யை அள்ளி வீசுவது எளிது. இது நாம் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டிய ஒன்று. இது நல்லதல்ல, எந்தவித அடிப்படையும் இல்லாமல் கடிதங்கள் வருவது RIல் இந்தியாவின் நற்பெயரை கெடுத்துவிடும். அப்படி ஒரு சூழல் உருவானால், செய்யாத தவறுகளுக்காக நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கும். இது நாம் கவனிக்க வேண்டிய விஷயமாகும். ஆனால், இதைத் தவிர்த்துப் பார்த்தால், எங்கள் மண்டலங்களில் நடைபெறும் சிறப்பான சேவைகள் மனதை மகிழ்விக்கின்றன.

ரவீந்திரன் அறிமுகப்படுத்திய மின்னணு வாக்குப்பதிவு முறை பற்றி கேட்டதற்கு, DGs, DGEs மற்றும் PDGs சில நேரங்களில் விருதுகள் மற்றும் இதர பரிசீலனைக்காக சங்கத்தின் தலைவர்களை தங்கள் முன் வாக்களிக்குமாறு கட்டாயப்படுத்துகின்றனர் என்றார். அப்போது PRID தேசாய், தமது பதவிக்காலத்தில் தில்லுமுல்லுகள் நடப்பதாக வாரியத்துக்கு நிறைய புகார்கள் வந்ததால் மின்னணு வாக்குப்பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு புகார்கள் வருவதே இல்லை என்றார். ஆனால், நமது மக்களின் புத்திசாலித்தனம் மின்னணு வாக்குப்பதிவைக்கூட முறியடிக்க முடியும் என்பதை காலப்போக்கில் நிரூபித்துள்ளது. நிறுவனங்கள் அல்லது கணினி மையங்களை நடத்துபவர்கள் வெவ்வேறு கணினிகள் மூலம் வாக்களிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அறிமுகப்படுத்தப்பட்டபோது இது பயனுள்ளதாக இருந்தது. ஆனால், பின்னர் மக்கள் கணினியை

வெல்வதற்கான வழிகளையும் கண்டுபிடித்துவிட்டனர் என்றார்.

அப்போது குறுக்கிட்டு பேசிய தலைவர் மேத்தா, இது ஒரு முக்கிய மான விஷயம். மனோஜ் சரியாக விளக்கினார். ஒவ்வொரு தடவையும் நாம் புதிய முறைகளைக் கொண்டு வருகிறோம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதைவிட வேறு ஒரு முறையை கண்டுபிடிப்போம். ரவீந்திரன் அறிமுகப்படுத்தி, அதை மனோஜ் சோதனைத் திட்டமாக நடைமுறைப் படுத்தியபோது இது அற்புதமானதாக கருதப்பட்டது. ஆனால், இப்போது அது பெருமளவில் தவறாகப் பயன்படுத்தப்படுவதைக் காண்கிறேன், கேள்விப்படுகிறேன். DG-க்கள் இதைச் சமாளிக்க வேண்டும். இது பெரும் பிரச்னையாகத் தொடரு மானால், அதை மறுபரிசீலனை செய்வது நல்லது. ஒருவேளை இயக்குநர்கள் ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்கலாம்.

மின்னணு வாக்குப்பதிவுக்கு எதிராக மாவட்ட மாநாட்டில் அதிக பட்ச கேள்விகள் எழுப்பப்பட்டதாக பாண்ட்யா சுட்டிக்காட்டிய போது அதை ஏற்றுக்கொள்வதாக மேத்தா கூறினார்.

மாவட்ட கணக்குகள் பற்றியும், DGக்கள் அவற்றை குறித்த காலத்தில் சமர்ப்பிக்காதது, தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் பாஸ்கரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், தலைவர் மேத்தா, முன்னாள் தலைவர் ரவீந்திரன் இருக்கும் நிலையில் இதைப் பற்றி விவாதிக்கலாம் என்றார். எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால், இந்தியாவில் DGக்களின் பயணச் செலவு மற்றும் இதர செலவுகளுக்கு RI நிதி அளிப்பதன் காரணமாக மாவட்ட நிலுவைத் தொகை வசூலிப்பதை கைவிட்டு விடலாம். PETS, மாநாடுகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் நிதி வழங்கப்படுகிறது. அப்படி யிருக்கையில் ஒவ்வொரு ரோட்டேரி யனிடமிருந்து ஒரு கணிசமான தொகைய வசூலிக்க வேண்டியதன் அவசியம் என்ன? இதன் மூலம் அதிக பணம் சேர்க்கிறார்கள். நிதிகளைக் கையாள்வதில் ஒரு ஒழுங்குமுறை இல்லை. மாவட்ட நிதிக்குழு செயல் படுவதில்லை, பல ஆளுநர்கள் மாவட்ட செலவினங்களுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதில்லை, ஒப்புதல் பெறுவதும் இல்லை. ஆளுநர்கள் வேலைகளில் மும்முரமாக இருக்கிறார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இறுதியாக ஆண்டு முடிவில் கணக்குகளை சரிபார்க்கும் போது அதில் பலகுறைபாடுகள் இருப்பதைக் காண்கிறார்கள். தயவு செய்து பணம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்று DGEகளுக்கு நான் அறிவுறுத்துகிறேன். நீங்கள் பணம் வசூலிக்கவில்லை என்றால் பதில் சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. மாவட்ட நிலுவைத் தொகையை வசூலிப்பதை தவிர்க்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான கருத்து என்றார்.

இந்த நிலையில் RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி குறுக்கிட்டார். அவர் பேசுகையில், மாவட்டத்தின் பெயரில் வசூலிக்கப்பட்ட நிதி, DGக்களின் நிதி ஒதுக்கீடு மற்றும் மாவட்ட மானியம் ஆகியவை தொடர்பான கணக்குகள் குறிப்பிட்ட காலத்தில் மாவட்ட சங்கங்களுக்கு சுற்றறிக்கையாக விடப்பட வேண்டும் என்பது துணை சட்ட விதியாகும். குழு உறுப்பினர்கள் இயக்குநர்களாக இருந்தபோதும் இவை அவர்கள் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. ஆனாலும், அந்த மாவட்டங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் கணக்குகள் முடிக்கப்படாத DGக்களுக்கு இன்றும் கழகம், மண்டலம் மற்றும் RI நிலையில் பணிகள் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

நான் ரோட்டரியில் சேர்ந்தது நட்புறவு மற்றும் சேவைக்காக. ஆனால், இப்போது பல இலக்குகளில் மேலிடத்திலிருந்து அதிக அழுத்தம் தரப்படுகிறது என்ற கேள்விக்கு பாஸ்கர் பதிலளிக்கையில், ரோட்டரி இப்போது மறுநிர்மாணம் செய்யப் படுகிறது என்று பதிலளித்தார். இது ஒரு நல்ல கேள்வி. நாம் தன்னார் வலர்கள். மேலும் நமக்கு சொந்த தொழில் உள்ளது. நாம் ஓய்வு பெற்றவரோ அல்லது இந்த நிறுவனத்தின் பணியாளர்களோ அல்ல. சங்கங்கள் மூலம் தான் ரோட்டரி வாழ்கிறது. தலைவரும், சங்க அலுவலக நிர்வாகிகளும் ஈடுபாடு காட்டாவிட்டால் சங்கம் உயிர்வாழ முடியாது. விருதுகள், அங்கீகாரம் என்ற பெயரில் சங்கங்களின் செயல்பாட்டின் மீது அதிக சுமைகள் ஏற்றப்படுகின்றன. PETS பெரும்பாலும் கார்ப்பொரேட் நிறுவனங்களின் விற்பனை இலக்கு போல் செயல்படுகிறது. உங்களால் எத்தனை புதிய உறுப்பினர்களைக் கொண்டுவர முடியும்? உங்களால் TRF நிதியாக எவ்வளவு வசூலிக்க முடியும்? என்று கேட்கப்படுகிறது. கீழிருந்து மேலான அணுகுமுறைக்குப் பதிலாக மேலிருந்து கீழான அணுகு முறையை நாம் பின்பற்றி வருகிறோம். சங்கங்கள் உள்ளூர் சமூகத்தின் தேவையைக் கண்டறிந்து பூர்த்தி செய்யவேண்டும். இதன் மூலம் ரோட்டரி மீதான நல்லெண்ணம் வளர்வதுடன், மக்கள் தாங்களாகவே ரோட்டரியில் சேர முன்வருவார்கள். ஆனால், தலைமைத்துவத்தில் பல்வேறு அடுக்குகள் இருந்தாலும் குறிப்பாக இந்தியாவில் பல்வேறு முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளை வழங்குகின்றன. மேலும் அனைத்தும் சங்க அளவிலேயே செல்கின்றன. சில நேரங்களில் நாம் இரக்கமின்றி DGs, சங்கத் தலைவர்களை விரட்டுகிறோம். இதனால் ரோட்டரியில் மகிழ்ச்சி காணாமல் போகிறது. இது விவாதிக்கப் பட வேண்டும். ரோட்டரியின் செயல்பாடு களில் மகிழ்ச்சியை கட்டமைக்க வேண்டும் என்றார்.

பாண்ட்யா தமது முடிவுரையில் பின்வருமாறு கூறினார்: நேற்று தலைவர் சேகர் பேசுகையில், பல்வேறு பிரச்னைகளால் மன அழுத்தம், பதற்றம் ஏற்படுகிறது. ஆனால், இப்பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காண்பது முக்கியம் என்றார். நான் அறுவைச்சிகிச்சை நிபுணன். தொடுதல் சிகிச்சையில் (ஹீலிங் தெரபி) நம்பிக்கையுள்ளவன். நமது மண்டலத்தில் ரோட்டரி உயரப் பறக்க தயாராக உள்ள நிலையில் நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண தொடுதல் சிகிச்சையைப் பயன்படுத்த தயாராக இருக்கிறோம் என்றார் பாண்ட்யா.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

Rotary DISTRICT 3231

SERVE TO CHANGE LIVES


ROTARY DISTRICT 3231
ZONE V


RTN. SHEKAR MEHTA
R.I. PRESIDENT


RTN. A S VENKATESH
R.I. DIRECTOR


RTN. Dr. MAHESH KOTBAGI
R.I. DIRECTOR


RTN. GULAM VAHANVATY
TRF TRUSTEE


RTN. CHANDRA BOB
DISTRICT 3231 TRAINER

END POLIO NOW

District 3231 has donated to Polio fund, **USD 25000** from the DDF which was matched by world fund and Bill & Melinda Gates which approximately is **₹ 83,25,000.**

## KURUNGAADU PLANTATION DRIVE

1.2 crore seeds were sowed



District 3231 has made a world record by placing **9020 notebooks** over the text, which was recorded in three famous book of records.


RTN. NANDHINI NIRMAL
DISTRICT FIRST LADY

ANNET. W N NETHRA

RTN. W M NIRMAL RAGHAVAN
DISTRICT GOVERNOR

## Ezhuchi

*Ennuvathu uyarvathu*

DISTRICT 3231 CONFERENCE 21 - 22

MARCH **5&6** 2022

CONFLUENCE CONVENTION CENTER MAHABALIPURAM

districtgovernor3231@gmail.com | facebook.com/rotarydistrict3231 | +917338737330




# DGE-களுக்கான தலைமைப்பண்பு பாடங்கள்

ஜெய்ஸ்ரீ

உங்கள் பதவிக்காலத்துக்கு ஓராண்டுக்குப் பின்னர் நீங்கள் கடந்தகால ஆளுநராக இருப்பீர்கள். ஆனாலும், உங்கள் மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிப்பீர்கள். நீங்கள் இந்த காலத்தில் கால் தடங்களை விட்டுச் செல்ல நினைத்தால் உங்கள் ஆண்டின் 365 நாட்களும் உங்களது வாழ்வில் முக்கியமானத இருக்கும் என்று மஹாப்ஸ்-21 மண்டல மாநாட்டில் GETS கருத்தரங்கில் ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடையே பேசுகையில் ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா கூறினார்.

கடந்த 40 ஆண்டுகளில் முதன் முறையாக முன்னாள் மாவட்ட ஆளுநர் கௌரி ராஜன் (RID 3220 இலங்கை) GETS அமர்வுக்கு தலைமை தாங்கியிருப்பதாகக் கூறி பாராட்டினார்.

உள்வரும் ஆளுநருக்கு அவரது தாரக மந்திரம்: பெரிதாக கனவு காணுங்கள், எதையும் நேர்மறையாக அணுகுங்கள். தலைவர்களாகிய நீங்கள் உச்சத்தைத் தொடவேண்டும். இந்த ஒரு ஆண்டு உங்களுக்கு மிக முக்கியமானது. உங்களைச் சுற்றியுள்ள ஆயிரக்கணக்கான நபர்களிடம் லட்ச க்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க ஊக்குவிக்கப் போகிறீர்கள் என்றார். போலியோவை உலகிலிருந்து ஒழிக்க 40 ஆண்டு களுக்கு முன்பு ரோட்டேரியன்கள் கண்ட கனவை அவர் நினைவுகூர்ந்தார். இதுபோன்ற ஒரு பெரிய திட்டத்தைச் செயல்படுத்த துணிச்சல், நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு தேவை.

தலைவர்கள் நேர்மறையான சிந்தனை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய மேத்தா, இது ஒரு சேவை நிறுவனம். நீங்கள் சொந்த விருப்பத்தில் ரோட்டரியில் சேர்ந்தீர்கள். அப்படிச் செய்துவிட்டு இது முடியாது, சாத்திய மல்ல என்று சொல்வது சரியல்ல. என்னால் இதைச் செய்ய முடியாது என்று கூறுவதும் சரியல்ல. ஒரு தொண்டர் என்பவர் நிச்சயமாக இதை எங்களால் செய்ய முடியும் என்று சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஒரு விஷயத்தை மேத்தா பகிர்ந்து கொண்டார். ஆளுநராக இருந்தபோது ஏழைகளுக்கு 500 வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பது என் கனவாக இருந்தது. அப்போது இதை நான் எனது சங்கத் தலைவரிடம் தெரிவித்தேன். ஒரு மாதம் கழித்து, கார்ப்பொரேட் நிறுவனம் ஒன்று நிலத்தை நன்கொடையாக அளிக்கத் தயாராக இருப்பதாக சங்கத் தலைவர் என்னிடம் சொன்னார். உடனே சங்கம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிலத்தை பெற்றது. நாங்கள் 3H மானியத்துக்கு விண்ணப்பித்தோம். சாதாரணமாக அதற்கு ஒப்புதல் பெற இரண்டு ஆண்டுகள் ஆகும். ஆனால், ஜூன் 24 ஆம் தேதி, அதாவது எனது பதவிக்காலம் முடிவடைவதற்கு 6 நாட்கள் முன்னதாக ரூ.1.5 கோடி நிதியுதவிக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டது. அதே ஆண்டில் நாங்கள் 300 வீடுகளைக் கட்டினோம். அதேபோல அந்தமான்-நிகோபார் தீவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை 7 முறை பயணம் செய்து பார்வையிட்டபின் அங்கு 500 வீடுகள் கட்டப்பட்டன. அதற்கான



திட்ட மதிப்பீடு ரூ.3 கோடி. நாங்கள் வங்கியில் பணம் இல்லாத நிலையில் திட்டத்தைத் தொடங்கினோம். இது ஒரு நேர்மறையான சிந்தனையின் சக்தி மற்றும் கனவுகள் மீதான நம்பிக்கை.

DGEக்கள் இலக்குகளை தெளிவாக அமைக்க வேண்டும் என்றார். மேலும் தாம் DGEஆக இருந்த போது பயிற்சியாளர்களுடன் ஆலோசனை களை பகிர்ந்து கொண்டதாக குறிப் பிட்டார். சங்கத் தலைவர்களும், ஆளுநரும் ஈகோவை மறந்து செயல் பட வேண்டும். அதாவது சங்க உறுப்பினர்களின் தோளை தட்டிக் கொடுத்து நன்றாகச் செயல்படுகிறீர்கள் என்று சொன்னால் அது பல சாதனை களுக்கு வழிவகுக்கும்.

தமது செல்லத் திட்டமான "ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டுவர வேண்டும்" என்பதை வலியுறுத்திய அவர், உங்கள் நண்பர்களை ரோட்டேரியனாக்குங்கள். உங்கள் மனைவியிடம் அவரின் நண்பர்களை ரோட்டரிக்கு அழைத்து வரச் சொல்லுங்கள்.

DGEக்களுடன் RI தலைவர் பேசுகையில், TRFக்கு அதிக பங்களிப்புச் செய்ய வேண்டும். பெரிய திட்டங்களை துணிச்சலுடன் நிறைவேற்ற வேண்டும் என்றார். தேசத்தின் கட்டமைப்பில் நமக்கு முக்கிய பங்கு உள்ளது. நமது திட்டங்களையும், அதன் அளவையும் எதனுடனும் ஒப்பிட முடியாது. இந்தியாவில் 1.6 லட்சம் ரோட்டேரியன்கள் உள்ளனர். இந்திய அரசிடம் இந்த அளவுக்கு திறன் வாய்ந்த சக்தி இல்லை. நீங்கள் வலிமை வாய்ந்தவர்களாக இருங்கள். முதல்வர் உங்களிடம் வந்து, மாநில ரோட்டரியுடன் நாம் இணைந்து திட்டங் கள் செய்தால் என்ன? என்று கேட்கும் அளவுக்கு நாம் செயல்பட வேண்டும் என்றார் மேத்தா.

இந்தியா, இலங்கை, நேபாளம், மாலத்தீவுகள் மற்றும் பூடான் ஆகிய ஐந்து நாடுகளை உள்ளடக்கிய மண்டலம் 4,5,6 மற்றும் 7 ஆகியவற்றின் பங்களிப்பு சிறப்பானது என்று மேத்தா குறிப்பிட்டார். இதே நிலையை பராமரிக்குமாறு DGEக்களை அவர் கேட்டுக்கொண்டார். நாம் அறக்கட்டளைக்கு வழங்கும் நிதியைப் போல பத்து மடங்கு தொகையை அமெரிக்கா வழங்குகிறது. இந்தியா 20 மில்லியன் டாலர் நிதி கொடுத்தால் அமெரிக்கா 200 மில்லியன் டாலர் நிதி கொடுக்கிறது. ஆனால், இந்திய ரூபாயின் கொள்முதல் சமநிலை, ஒரு டாலருக்கு 22.5 LCU என்ற அளவில் உள்ளது. அதாவது செலுத்தப்படும் டாலர் ஒவ்வொன்றும் இந்திய ரூபாயின் 22.5 மடங்குக்குச் சமம். எனவே 20 மில்லியன் டாலரை 22.5 ஆல் பெருக்கினால் உண்மையான மதிப்பின் அடிப்படையில் அமெரிக்காவைவிட நாம் அதிகம் தருகிறோம் என்று அவர் விளக்கினார்.

ரோட்ராக்டர்களை தங்கள் மாவட்ட குழுக்களில் சேர்த்து அவர்களை மரியாதையுடன் நடத்துமாறு மாவட்டத் தலைவர்களுக்கு மேத்தா அறிவுறுத்தினார். நமது வளங்கள், அனுபவம் மற்றும் திறமை இளைஞர் களின் சக்தி, ஆற்றல், உற்சாகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றுடன் இணைத்துக் கொண்டால் வெற்றிகரமான கூட்டணியாக அமைந்து ரோட்டரியை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்.



DGEs *புபுடு டி ஜொய்ஸா* (RID 3220, *இலங்கை*) *மற்றும்* Dr *ஜெயகௌரி ஹடிகல்* (RID 3182).

**வேகமாக, உயர மற்றும் வலுவாக**

மாநாட்டின் அமைப்பாளர் RID A S வெங்கடேஷ், DGEகளுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கும் வகையில் ஒலிம்பிக் பொன்மொழியை citus, altius, fortius (வேகமாக, உயர மற்றும் வலுவாக) குறிப்பிட்டார். நீங்கள் ஒருவருக்கு எதிராக போட்டியிட வேண்டும் என்பதை இது குறிக்கவில்லை. ஒவ்வொரு மாவட்டமும் அதன் வழியில் தனித்துவமானது. உங்களது DNAக்கள், வளங்கள், உறுப்பினர் விவரம், அமைவிடம் ஒவ்வொரு அம்சத்திலும் வேறுபட்டவை. 3240 மாவட்டம் 9 மாநிலங்களை உள்ளடக்கியது. அதே சமயத்தில் 3232 மாவட்டம் சென்னை என்ற ஒரு நகரத்தை மட்டும் உள்ளடக்கியது. எனவே அவற்றை ஒப்பிட முடியாது. போட்டி உங்களுக்குள்தான் இருக்க வேண்டும். நீங்கள் நினைத்ததை விட சிறப்பாக, ஒன்றிணைந்து செய்யவேண்டும்.

மகாபலிபுரம் சிற்பத்தில் கல்லில் யானை செதுக்கப்பட்டதை சுட்டிக் காட்டி அவர் பேசினார். யானைக்கு பொருந்தாதவற்றை கல்லிலிருந்து நீக்கிவிட்டால் நீங்கள் நினைக்கும் யானையைப் பெறமுடியும். அதே போல தேவையற்ற எண்ணங்களை நீக்கிவிட DGEகளுக்கு கற்பிக்கப்படும். எனவே நீங்கள் எது தேவையோ அதில் மட்டும் கவனம் செலுத்தினால் போதுமானது. வேகமாகவும், உயர்வாகவும் வலுவாகவும் செல்ல வேண்டுமானால், தேவையற்றத்தை நீக்கிவிட வேண்டும். சங்க அளவில் பன்முகத்தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும் என வெங்கடேஷ் வலியுறுத்தினார். மாவட்டத் தலைவராக நீங்கள் பயணிக்கும் போது உங்கள் மனைவியின் பங்கு பணிகளை அங்கீரித்து பாராட்ட வேண்டும். உங்கள் மனைவியையும் சேர்த்துக் கொண்டு செயல்பட்டால் ஆளுநரான உங்கள் ஆண்டு அர்த்தமுள்ளதாகவும் செயல்பாடுகள் நிறைந்ததாகவும் இருக்கும். அவர்கள் உங்களுக்கு தரும் கருத்துகளைப் போல் வேறு எவராலும் தரமுடியாது என்பதை என் அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். நான் ஆளுநர் மற்றும் இதர முக்கியப் பதவியில் செயல்பட்ட போது வினிதாதான் எனக்கு பல உண்மையான கருத்துகளை சொன்னார் என்றும் அவர் குறிப்பிட்டார்.



RID A S *வெங்கடேஷ் அவர்களின் மனைவி வினிதா மற்றும்* GETS *தலைவர்* PDG *கௌரி ராஜன்.*

**ரோட்டரி ஒரு சேர்ந்திசை**

ரோட்டரி தலைவர்கள் அனைவரும் தன்னார்வத் தலைவர்கள், அவர்கள் தலைமைத்துவத்தின் வழக்கமான வடிவத்துடன் பொருந்தமாட்டார்கள். நாம் இதயபூர்வமாக செயல்படுபவர்கள் என்றார் மாநாட்டின் இணை அமைப்பாளர் RID மகேஷ் கோட்பகி. நீங்கள் ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொண்டால் ஒரு நல்ல சேர்ந்திசையைக் கேட்க முடியும். அதே போல நீங்கள் கூட்டாகச் செயல்பட்டால் அது நல்ல பலனைக் கொடுக்கும் என்றார்.

மாநாட்டுத் தலைவர் PDG முருகானந்தம் பேசுகையில், அவ்வையாரின் ''கற்றது கையளவு, கல்லாதது உலகளவு'' செய்யுள் வரிகளை சுட்டிக்காட்டினார். DGEக்கள் ஆண்டு முழுவதும் கற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பொறுப்புகளை நேசியுங்கள். முடிந்தவரை கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மாவட்டத்தில், உங்கள் ஆண்டை மறக்கமுடியாததாக மாற்றுங்கள் என்று கூறினார்.

உலகமே கோவிட் நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தபோது மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்பட ரோட்டரி, தனது திட்டங்களைச் செயல்படுத்த புதிய வழிகளை கண்டறிந்தது என்று கௌரி பேசுகையில் குறிப்பிட்டார். இதன் மூலம் ஒரு புதிய தலைமைத்துவ வழி பிறந்தது. சுறுசுறுப்பானவர்கள் பிழைத்துக் கொண்டார்கள். ரோட்டரியின் முதல் பெண் தலைவர் ஜென்னிஃபர் ஜோன்ஸின் கீழ் நீங்கள் பணிபுரியப் போவதால் நீங்கள் ஒரு சிறப்புக் குழுவாக இருப்பீர்கள். GETS தலைவராக தம்மை தேர்ந்தெடுத்தற்காக வெங்கடேஷுக்கு நன்றி என்றார்.

RID பரத் பாண்டியா, உறுப்பினர்கள், அறக்கட்டளை பங்களிப்பு, சேவைத் திட்டங்களுக்கான GETS பயிற்சியாளர்களை அறிமுகப்படுத்தினார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# ரோட்டரியின் வளர்ச்சிக்கு பன்முகத்தன்மை அவசியம்

கிரண் ஜெஹரா

மதம், கலாசாரம், தேசிய எல்லைகள் மற்றும் சமூகப் பொருளாதார நிலை இவற்றுக்கு அப்பாற்பட்டு பன்முகத் தன்மையை கொண்ட மக்கள் உலகை கட்டமைக்கவும், மனிதகுலம் தழைக்கவும் ரோட்டேரியன்கள் பாடுபட வேண்டும் என்று அறங்காவலராகத் தேர்வு செய்யப் பட்டுள்ள PRID பரத் பாண்ட்யா தெரிவித்தார். மஹாப்ஸ் 21 மண்டல மாநாட்டில், Diversity, Equity Inclusion (DEI) அமர்வில் பேசிய அவர், வரும் ஆண்டுகளில் பன்முகத் தன்மை, சமபங்கு மற்றும் சேர்த்தல் ஆகிய கொள்கைகளின் ஒவ்வொரு கூறுகளையும் புரிந்துகொண்டு அவற்றை உள்வரும் ஆளுநர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வலியுறுத்தினார்.

பன்முகத்தன்மை என்பது ஒரு குறிப்பிட்ட சதவீத பெண்களை ரோட்டரிக்குள் கொண்டு வருவது அல்லது ரோட்ராக்டர்களை அதிக அளவில் சேர்ப்பது என்பது செயல்பட்டியலை உருவாக்குவதோ அல்லது உதட்டளவில் பேசுவதோ அல்ல என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். DGE-க்கள் தங்கள் மாவட்டங்களில் பன்முகத்தன்மையை புரிந்துகொண்டு, DEI-யை தங்கள் சங்கம், மாவட்டம் மற்றும் மண்டலங்களில் எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

ரோட்டரியின் வளர்ச்சிக்கு DEI முக்கியமானது. உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பான உத்திகளை வகுக்க உதவுவதே இதன் நோக்க மாகும். இதன் மூலம் ஒவ்வொருவரும் ஒருவரை கொண்டு வரும் முன்முயற்சி பயனுள்ளதாக அமையும். சங்கத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களில் ரோட்டரி வளர்வதற்கான DEI கொள்கைகளுக்கும் இடம் இருக்க வேண்டும். நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நாம் வெளிப்படையாகவும், பரிவு உணர்வுடனும் செயல்பட கற்றுக் கொள்ள வேண்டும். முற்றிலும் வேறுபட்ட பின்னணிகள் கொண்ட மற்றும் வளர்ச்சியை முன்னெடுப்பத்தில் ஆர்வம் உள்ள வர்களுடன் நாம் இணைந்து செயல்பட வேண்டும். தலைமைப் பண்பின் பரந்துபட்ட செயல்பாடுகளை ரோட்டரி தலைவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

சில சமயங்களில் சமபங்கு மற்றும் சமநிலை இடையே குழப்பம் ஏற்படுகிறது. சமபங்கு என்பது சங்கம், மாவட்டம் மற்றும் மண்டல அளவில் ஒரு திட்டத்தை பாரபட்சமின்றியும், நியாயமாகவும் செயல்படுத்துவதாகும். உறுப்பினர்கள் இது நமது சங்கம் என்று உணரச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ரோட்டேரியன்களும் சௌகரியத் துடனும் ஆதரவுடன் இருப்பதாக உணர்வதை தலைவர்கள் உறுதி செய்யவேண்டும்.

ரோட்டரியின் துன்புறுத்தலுக்கு எதிரான சகிப்புத்தன்மை பற்றி பரத் பாண்ட்யா பேசுகையில், ஒரு விஷயம் குறித்து உறுப்பினர்கள் புகார் தெரிவித்தால், அவர் மீது எந்த விதமான பழிவாங்கல் செயல்கள் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் நியாயமான முறையிலும், ஒருங் கிணைப்புடன் நீங்கள் செயல்பட வேண்டும் என்றார்.

மாவட்ட பயிற்சி திட்டத்தில் DEI கொள்கை கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும். மேலும் மாவட்ட ஆளுநர்கள், *www.rotary.org* என்ற இணையதள முகவரியில் உள்நுழைந்து இது தொடர்பான தகவல்களைப் பெறலாம் என்று RI இயக்குநர் A S வெங்கடேஷ் தெரிவித்தார். உங்களுக்கு DEI குறித்து சிறந்த பேச்சாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தேவைப்பட்டால் என்னிடமோ அல்லது மற்றொரு RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி இடமோ தெரிவித்தால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும்.■



Trustee-elect and PRID *பரத் பாண்ட்யா*



# TRFன்

# ஜொலிக்கும் நன்கொடையாளர்கள்


வலதிலிருந்து: RI *தலைவர் சேகர் மேத்தா, மாநாட்டின் தலைவர்* RID A S *வெங்கடேஷ், சமீனா மற்றும்* TRF *அறங்காவலர் அஜீஸ் மேமன்.*

ரஷீதா பகத்




V முத்துகுமரன்


EMGA PDG J B காம்தார் மற்றும் மாநாட்டின் தலைவர் PDG M முருகானந்தம்.


TRF அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன் RRFC PDG ஜான் டேனியல்.


RI தலைவர் மேத்தா, அறங்காவலர்கள் வஹன்வதி, மேமன் மற்றும் AKS உறுப்பினர்கள்.

இந்த ஆண்டுப் பிராந்தியச் சந்திப்பு மஹாப்ஸ் 21ல் ஆர்ச் க்ளம்ஃப் சமூகக் கொண்டாட்டம் என்ற TRF இரவு உணவு, தலைவருடைய வட்டம் (Chair Circle), அறங்காவலர்களுடைய வட்டத்தைச் (Trustees Circle), சேர்ந்த AKS உறுப்பினர்களை அங்கீகரித்துப் பெருமைப்படுத்தியது.

AKS உறுப்பினர்கள் ஊர்வலமாக இங்கு வந்தார்கள். இவர்களில் PDG சுரேஷ் ஜெயின் (RC தில்லி சவுத் ஈஸ்ட், RID 3011), அவருடைய மறைந்த மனைவி உஷா, PDGகள் வினய் மற்றும் ராஷ்மி குல்கர்ணி (RC புணே பார்வதி, RID 3131), சுரேஷ் குமார் மற்றும் கிரண் பொட்டார் (RC ஜெய்ப்பூர் மிட் டவுன், RID 3052) ஆகியோர் Chair Circleஐ சேர்ந்தவர்கள், இவர்களுடைய TRF பங்களிப்புகள் $500,000ஐத் தாண்டின.

AKSல் இணைந்த மற்ற புதியவர்கள் (அறங்காவலர் களுடைய வட்டத்தைச் (Trustees Circle) சேர்ந்தவர்கள்): V R முத்து மற்றும் மலர்விழி, RC விருதுநகர், RID 3212 ; V பாஸ்கர் ராம் மற்றும் சுசித்ரா, RC ராஜமுந்திரி ரிவர் சிட்டி, RID 3020; M அம்பலவாணன் மற்றும் கீதாராணி, RC மெட்ராஸ் மிட்-டவுன், RID 3232; நடனசபாபதி சுந்தரவடிவேலு மற்றும் முருகாம்பாள், RC கோயம்பத்தூர், RID 3201; S V வீரமணி மற்றும் ராதா, RC அடையாறு, RID 3232; நிதின் ரதிலால் மேத்தா மற்றும் ஹர்ஷா, RC பாம்பே ஏர்போர்ட், RID 3141; நிகுஞ்ச் ஜவேரி மற்றும் கனன், RC க்வீன்'ஸ் நெக்லஸ், RID 3141; சான்டியாகோ மார்டின், RC கோயம்பத்தூர் சென்ட்ரல், மற்றும் லீமா ரோஸ், RC கோயம்பத்தூர் ஆக்ருதி, RID 3201.

புதிய AKS சங்க உறுப்பினர்களாகிய இந்தத் தாராள நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டிய RI தலைவர் சேகர் மேத்தா, TRFக்கு இவர்களுடைய கொடை உலகெங்கும் மக்களுக்குக் கண் பார்வை வழங்க, இதயங்களைச் சரி செய்ய, உயிர்களைக் காக்க, நலிந்தவர்களுடைய வாழ்க்கை நிலைகளை மேம்படுத்த உதவியுள்ளது என்றார். உங்களைப் போன்றோரால் TRFக்கும் மனித குலத்துக்கும் நன்மை. உங்கள் தாராள மனப்பான்மைக்கு, இரக்கத்துக்கு, மனித குலத்தின்மீது கொண்டுள்ள அன்புக்கு நன்றி என்றார்.

2020–21ல், நம் பிராந்தியங்கள் $23.6 மில்லியன் பங்களிப்புடன் (இதில் இந்தியாவின் பங்களிப்பு $22.4 மில்லியன்) மீண்டும் TRF வழங்கலில் 2ம் இடத்தைப் பிடித்துள்ளது.

சுன்னில் மெஹ்ரா தலைமையிலான RI மாவட்டம் 3141 $3.5 மில்லியன் வழங்கி உலகின் மிக உயர்ந்த மாவட்டமாக ஆனது. மெஹ்ராவும் அவருடைய குழுவினரும் TRF இரவு உணவு விழாவில் அங்கீகரிக்கப்பட்டார்கள். EMGA J B காம்தர் (இவரும் AKS உறுப்பினர்தான்), அவருடைய மனைவி மார்லீன் (தலைவர் வட்டம்) அனைவரையும் வரவேற்றார்கள், ஒருங்கிணைப்பாளர், RI இயக்குநர் A S வெங்கடேஷ், RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி, TRF அறங்காவலர் தலைவர் பிரதிநிதி அறங்காவலர் அஜீஸ் மேமன், TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி AKS உறுப்பினர்களை வரவேற்று நன்றி தெரிவித்தார்கள்.

இந்த ஆண்டின் மிகப் பெரிய நன்கொடையாளர்கள், EMGAக்களான தீபக் குப்தா, J B காம்தர், சுரேஷ் ஹரி, டாக்டர் பிரமோத் ஆகியோர் அங்கீகரிக்கப்பட்டார்கள்.■






1. TRF *அறங்காவலர் மேமன் மற்றும் சமீனாவுடன்* RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அமீதாவுடன்.*

2. PRID *பரத் பாண்ட்யா மற்றும் மாதவியுடன்* DG *கௌரிஷ் தோன்ட்.*

3. TRF *அறங்காவலர் வஹன்வதி,* RID *வெங்கடேஷ், அறங்காவலர் மேமன்,* RI *தலைவர் மேத்தா மற்றும்* RID *கோட்பாகி.*

4. RI *தலைவர் மேத்தா,* PRID *பாண்ட்யா, அறங்காவலர்கள் வஹன்வதி மற்றும் மேமன்,* RID 3141 PDGs *சுனில் மேஹ்ரா,* T N *சுப்ரமணியன்,* DGE *சந்திப் அகர்வல்லா மற்றும்* AKS *உறுப்பினர்கள்.*















V முத்துகுமரன்










5. RID வெங்கடேஷுடன் இன்ஸ்டிட்யுட் தலைவர் முருகானந்தம் மற்றும் அவர் மனைவி சுமதி.
6. PRID மனோஜ் தேசாய், ஷர்மிஷ்தா, சுமதி, PDG M முருகானந்தம் மற்றும் PDG ஜான் டேனியல் மனைவி மீரா.
7. DGE K பாபுமோன் மற்றும் அவர் மனைவி பீனா, RID வெங்கடேஷின் மனைவி வினிதாவுடன்.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# இலகுவான தருணங்கள்

ரஷீதா பகத்

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் என்னும் தொற்றால் பாதிக்கப்பட்டிந்த நேரத்தில் மண்டல மாநாட்டை திட்டமிடுவது கடினமான பணியாகும். RI இயக்குநர் A S வெங்கடேஷ் கடந்த 18 மாதங்களுக்கு மேலான இந்த சவாலை சமாளிக்க வேண்டியிருந்தது. அவரும், நிகழ்ச்சியின் தலைவர் PDG முருகானந்தமும் மகாபலிபுரத்தில் அனைவரும் நேரில் பங்கேற்கும் மண்டல மாநாட்டை நடத்திச் செல்லமுடியுமா என்று பலரும் ஆச்சரியத்துடன் காத்திருந்தனர். தனது வரவேற்புரையில் வெங்கி (ரோட்டரி உலகில் அவரது பெயர் இப்படித்தான் பிரபலம்) கூறுகிறார்: நான் இயக்குநராகத் தேர்வானபோது மண்டல மாநாடு நடத்துவது பற்றி யோசித்தேன். ஆனால், இந்தூருக்கு (PRID பரத் பாண்ட்யா) அடுத்து எனக்குத்தான் வாய்ப்பு கிடைக்கும் என்று நினைக்கவில்லை. பார்த்து கற்றுக்கொள்வதற்கு இடையில் ஏதும் இல்லை.

மாநாடு ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் பங்கேற்கும் பிரதிநிதி களிடையே மாநாடு நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகம், நிச்சயமற்ற தன்மை, ஒருவித அச்சம் இருந்தது. முதலில் பொது முடக்கம்-1 மற்றும் பொது முடக்கம் -2 அறிவிக்கப்பட்டது. அடுத்து அனைவரையும் பயமுறுத்தும் வகையிலான கோவிட் இரண்டாவது அலை. எந்த ஒரு நிறுவன ஏற்பாட்டுக் குழுவும் ஆன்லைனில் இவ்வளவு கூட்டங்களை நடத்த நிர்பந்திக்கப் பட்டுள்ளதா என்ற சந்தேகம் இருந்தது. 22 மாதங்களுக்கு முன்பு முதன் முறையாக நாங்கள் அந்த இடத்தை பார்த்தோம். அதன் பிறகு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் மீண்டும் அங்கு சென்றோம். இந்த இடைப்பட்ட காலங்களில் பொது முடக்கம் காரணமாக மூடப்பட்டிருந்தது என்றார் அவர்.



*மாநாட்டின் அமைப்பாளர்* RID A S *வெங்கடேஷ் மற்றும் வினிதா.* PRID P T *பிரபாகர் மற்றும் நளினி அவர்களும் உள்ளனர்.*

மேலும் 11 நாட்களுக்கு முன்பு சென்னை மாநகரில் வரலாறு காணாத பருவமழை பெய்ததால் நகரின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. மாநாடு நடக்குமா, நடக்காதா என்று கேட்டு ஏறக்குறைய 40-க்கும் மேலான தொலைபேசி-அலைபேசி அழைப்புகள் வந்தன. நான் கடவுளையும், எனது குழுவினரையும் முழுமையாக நம்பினேன். கடவுள் கருணை காட்டினார். அவரது ஆசி இல்லாமல் நாம் எல்லோரும் இங்கு சந்தித்திருக்க முடியாது.

நாங்கள் கடந்துவந்த பாதை இதுதான். ஆனால், இறுதியாக இங்கு உங்களில் 700-க்கும் மேலான பிரதிநிதிகளை சந்திக்க முடிந்துள்ளது. எங்களது வேண்டுதலுக்கும், கவலைகளுக்கும் பலன் கிடைத்துள்ள தாகவே உணர்கிறோம்.

ஆனால், வெங்கி புன்னகையுடன் ஒன்றை ஒப்புக்கொண்டார். எங்களிடம் பதற்றமும், நிர்ப்பந்தமும் இருந்த போதிலும் நான் அமைதியாகவும் நம்பிக்கையுடனும் இருந்தேன். அதற்கு காரணம் எனது மனைவி வினிதா. அவர்தான் என் கவலைகளை தாங்கிக் கொண்டார். அதற்காக அவருக்கு நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன்.

### பிரியமான கபில்தேவ்

கிரிக்கெட் ஜாம்பவானான கபில்தேவ், மாநாட்டில் தமது அமர்வின் போது மேடையையும், பார்வையாளர்களையும் தன் வசப் படுத்திக் கொண்டார். அனைவரின் கவனமும் அவர் மீதே இருந்தது. RI இயக்குநர் வெங்கடேஷ், கபில்தேவிடம், அடிக்கடி சிகை அலங்காரத்தை மாற்றிக்கொள்வது மற்றும் சர்தார்ஜி போல தலைப்பாகை அணிவது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு கபில்தேவ், மாற்றம் சுவாரஸ்யமானது. அது மனைவி மனதை புண்படுத்தாதவரை. சில சமயங்களில் என் மனைவி இது நன்றாக இல்லை, ஆனாலும் பரவாயில்லை என்பார். நாம் தினமும் ஒரே வகையான உணவை சாப்பிட முடியாது அல்லவா என்றார். பின்னர் வினிதா வெங்கடேஷ் பக்கம் திரும்பி, 'நீங்கள் உங்கள் கணவரின் தோற்றத்தை மாற்றுவதற்கு முயற்சிக்கலாமே' என்று நகைச் சுவையாக குறிப்பிட்டார்.

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் நெருக்கடியான நேரத்தில் கபில்தேவ் 175 ரன்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தது மற்றும் முக்கியமான போட்டிகளின் போது விளையாட்டில் ஏற்பட்ட அழுத்தம் குறித்து கேட்டதற்கு, கிரிக்கெட் விளையாடுவது மகிழ்ச்சி யைத் தருகிறது. மன அழுத்தத்தை தரவில்லை. சவாலான நேரங்களில் ஒரு பேட்ஸ்மென் களத்தில் இறங்கும் போது தன்னையும் அணியையும் குடும்பமாகவே கருதுகிறான். தாய் நாட்டுக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்றார்.

மேலும் களத்தில் மன அழுத்தத்தை மறந்துவிடுங்கள். மனச்சோர்வு என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை நான் கூட்டுக் குடும்பமாக வாழ்வதால் இருக்கலாம். கூட்டுக் குடும்பமாக இருக்கும்போது மன அழுத்தத்துக்கே வேலை இல்லை. நீங்கள் தனிமையில் இருந்து, உங்களுடன் பேசுவதற்கு யாரும் இல்லாதபோது நீங்கள் மன அழுத்தத்தை உணரலாம்.

பார்வையாளர்களுடன் இயல்பாக பேசியும், அவர்களின் அரவணைப்பு களையும் வாழ்த்துகளையும் புன்னகை யுடன் ஏற்றுக் கொண்ட கபில், குறிப்பிட்ட நேரத்துக்கு அதிகமாக அவர் பேசிய போதிலும் யாரும் அது பற்றி குறைகூறவில்லை. ஏனெனில் எதிர்பார்ப்புக்கு மேலாக சிறந்த பொழுதுபோக்காளராக இருந்ததுதான்!



TRF *அறங்காவலர் அஜீஸ் மேமன் மற்றும் அவர் மனைவி சமீனா.*

## MMM கிளப்

மஹாப்ஸ் மாநாட்டில் பங்கேற்ற RI தலைவர் சேகர் மேத்தா உள்ளிட்ட அனைத்து மூத்த தலைவர்களும், மஹாப்ஸ்-21 மாநாட்டுக்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்தமைக்காக PDG M முருகானந்தம் மற்றும் 30 பேர் அடங்கிய குழுவினருக்கு பாராட்டுத் தெரிவித்தனர். மாநாட்டில் இறுதியாக பேசிய, TRF அறங்காவலர் தலைவர் ஜான் ஜெர்மின் பிரதிநிதியாக வந்திருந்து மாநாட்டில் பங்கேற்ற அறங்காவலர் அஜீஸ் மேமன், ரோட்டரி உலகில் MMM என்று அறியப்படும் PDGயின் தனிப்பட்ட ஊழியர்கள் இணைந்து பணியாற்றியது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார். உண்மையில் அவரது பின்னணியில் ரோட்டரி சங்கத்தையே வைத்திருக் கிறார். இவர்களைக் கொண்டு MMM ரோட்டரி சங்கத்தையே உருவாக்கலாம் என்று யோசனை தெரிவித்தார்.

இந்தியாவில் பல இடங்களில் மேமன் என்ற எனது பெயரை மேமன் என்றே பலரும் குறிப்பிட்டதாகக் கூறினார். தவிர்க்க முடியாத நிலையில் இதை ஏற்றுக்கொண்டதாக கூறிய அவர், சிலர் மேமன் என்ற பெயரை மேனன் என்று தவறாக எழுதி விட்டதாக என்னிடம் கூறியபோது, நானும் மேனன் என்றே மாற்றிக் கொள் கிறேன். அப்போது எல்லாம் எளிதாகி விடும் என்று நகைச்சுவையாக அஜீஸ் மேமன் குறிப்பிட்டார்.

RI *தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி, கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவுடன்.*



புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# மஹாப்ஸ் தருணங்கள்



RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் அவர் மனைவி ராஷி.



PRID மனோஜ் தேசாய் மற்றும் ஷர்மிஷ்தா.

K விஸ்வநாதன்



PRIP K R ரவீந்திரனும் PRID C பாஸ்கர் மற்றும் மாலா.



இடதிலிருந்து: *சுஜாதா, இன்ஸ்டிட்யுட் துணை தலைவர் P மாதவ் சந்திரன், இன்ஸ்டிட்யுட் தலைவர் M முருகானந்தம் மற்றும் சுமதி.*



*வினிதா வெங்கடேஷ் மற்றும் மாதவி பாண்ட்யா.*


*வினிதா மற்றும் அமீதா கோட்பாகி.*


RI *தலைவர் மேத்தாவுடன் இன்ஸ்டிட்யுட் அமைப்பாளர்* RID A S *வெங்கடேஷ்.*



DGE*க்களின் துணைவியர்* 2022*ல் விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இன்ஸிடிட்யுட்டை பிரபலப்படுத்துகின்றனர்.*





1. சென்னை கலாக்ஷேத்ராவின் நடனக்குழுவின் நடன நிகழ்ச்சி.
2. 2021–22 ஆண்டு DGக்கள்.
3. இன்ஸ்டிட்யுட் துவக்க விழாவிற்கு அணி வகுத்துச் செல்லும் ரோட்டரி தலைவர்கள்.
4. RID மகேஷ் கோட்பாகி, RID AS வெங்கடேஷ் மற்றும் TRF அறங்காவலர் அஜீஸ் மேமன்.
5. ராஷி மற்றும் RI தலைவர் மேத்தாவுடன் PRIP K R ரவீந்திரன்.
6. RID 3131 PDG ராஷ்மி குல்கர்னி தன் மாநிலத்திற்கான விருதுகளுடன்.
7. RID கோட்பாகி, PDG கிஷோர் குமார், அவர் மனைவி ஷோபா, அமீதா கோட்பாகி.






















புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் ஸ்ரீதர் பாரதி

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# கொள்கை மாற்றத்தில் ரோட்ட்ராக்டர்களின் கருத்துகள்

ஜெய்ஸ்ரீ

வரும் ஜூலை மாதம் முதல் ரோட்ட்ராக்டர்கள் ஆண்டு உறுப்பினர் தொகையாக-நிறுவன அடிப்படை சங்கங்களுக்கு 5 டாலர்களும், சமூக அடிப்படை சங்கங்களுக்கு 8 டாலர்களும் RI-க்கு செலுத்துவார்கள். 2019 இல் நடைபெற்ற CoL's கூட்டத்தில் ரோட்ட்ராக்டர்களை ரோட்டேரியன்களாக தரம் உயர்த்தும் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. அவர்களை மாவட்ட குழுக்களில் ஈடுபடுத்துவதற்கான வயது வரம்பும் நீக்கப்பட்டது. உலக ரோட்ட்ராக்ட் குழு தலைவர் ரவி வட்லாமணி தலைமையில் நடைபெற்ற சிறப்பு அமர்வில் ரோட்ட்ராக்ட் பிரதிநிதிகளான RI's ரோட்ட்ராக்ட் இன்டராக்ட் குழு உறுப்பினர் PDRR ராம்குமார் ராஜு, RSAMDIO தலைவர் PDRR ஆர்த்தி, அதன் துணைத்தலைவர் PDRR நவீன் சேனா மற்றும் SEARIC MDIO தலைவர் PDRR கௌஷல் சாஹு ஆகியோர் ரோட்ட்ராக்டர்கள் இந்த மாற்றத்தை எப்படி கருதுகிறார்கள் என்று விவாதித்தனர்.

உறுப்பினர் தொகை வசூலிப்பது குறித்த முடிவுக்கு பல்வேறு வகையாக கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. சமூகத்தை அடிப்படையாகக்கொண்ட சங்கங்களுக்கு இது ஒரு பிரச்னையே அல்ல. ஆனால், கல்லூரி அடிப்படையிலான சங்கங்களுக்கு இது சவாலாகவே இருக்கும் என்கிறார் ராஜு. சென்னை, எத்திராஜ் கல்லூரி ரோட்ட்ராக்ட் சங்கத்தில் 6,000 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். பெங்களூருவில் உள்ள ஆர்.வி. கல்லூரி ரோட்ட்ராக்ட் சங்கத்தை குறிப்பிட்டு பேசிய அவர், இத்தகைய உறுப்பினர்களை இழக்க நாங்கள் விரும்பவில்லை என்றார். வட்லாமணி ஆண்டுக் கட்டணத்தை நியாயப்படுத்தினார். இது ஒரு பீட்சாவின் விலை. ஒரு மதிப்புமிக்க மாற்றத்துக்கு ரோட்ட்ராக்டர்கள் கொடுப்பது சிறிய விலை. அதாவது 5 டாலர்கள் மட்டுமே என்றார்.

அவரது கருத்துகளை சேனா எதிரொலித்தார். ரோட்டேரியன்களாக தரம் உயர்த்தப்படும் போது அதன் மூலம் கிடைக்கும் பயன்களை கணக்கில் கொண்டால் அவர், பணம் கொடுக்க தயாராக இருப்பார்கள் என்றார். அடுத்து நடைபெற உள்ள சர்வதேச மாநாட்டில் பங்கேற்க 50 ரோட்ட்ராக்டர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அங்கு அவர்களுக்கு தலைமைப்பண்பு பயிற்சி அளிக்கப்படும். எதையும் இலவசமாக கொடுத்தால் அதற்கு மதிப்பு இருக்காது என்றார் கௌஷல் சாஹு.

எனினும் வயது வரம்பை நீக்குவதை எதிர்த்து ரோட்ட்ராக்ட் பிரதிநிதிகள் ஒன்று பட்டு குரல் எழுப்பினர். ரோட்டேரியனாக இருந்து கொண்டு அதிக கட்டணம் செலுத்துவதை விட குறைந்த கட்டணத்தில் ரோட்ட்ராக்டர்களாக இருக்கவே மக்கள் விரும்புவார்கள். உண்மையில் சில ரோட்டேரியன்கள் ரோட்ட்ராக்டர்களாக



ஸ்ரீதர் பாரதி

PDRRs *ராம்குமார் ராஜு, ஆர்த்தி கோஸ்வாமி, கௌஷல் சாஹு மற்றும் நவீன் சேனா,* PDRR *சுஜித்குமாருடன் (நடுவில்)*




*RI தலைவர் சேகர் மேத்தா PDRR Rtn நவீன் சேனாவிற்கு Paul Harris Certificate அளிக்கிறார். (இடமிருந்து) உலக ரோட்டராக்ட் கமிட்டி தலைவர் ரவி வட்லாமணி, மாநாட்டு அமைப்பாளர் RID A S வெங்கடேஷ், மாநாட்டு தலைவர் PDG M முருகானந்தம், PDRR Rtn ராஜு, DGN (RID 3232) ரவி ராமன் மற்றும் PDRR ஆர்த்தி ஆகியோரும் உடன் உள்ளனர்.*

ரஷீதா பகத்

மாறியதுகூட எனக்குத் தெரியும். இந்த முடிவு பல குழப்பங்களை உருவாக்கிவிட்டது என்று கருத்து தெரிவித்தார் சேனா.

ரோட்டரி-ரோட்ராக்ட் கூட்டாண்மை பற்றி பேசுகையில், ரோட்ராக்டர்கள் இளைஞர்களின் கூட்டமாகும் அவர்கள் படைப்பாற்றல், ஆற்றல், கண்ணோட்டம், தொழில்நுட்பம் கொண்டவர்கள். அவர்கள் நடப்பு விவகாரங்களை விரல் நுனியில் வைத்திருப்பவர்கள். ரோட்டரி இயக்கம் தனது இலக்கை அடைவதில் நாங்கள் ஆதரவாக இருப்போம். TEACH திட்டமாக இருக்கட்டும், போலியோ விழிப்புணர்வு திட்டமாக இருக்கட்டும் அதைச் செயல்படுத்து வதில் உங்களுக்கு தொண்டர்கள் பெருமளவில் தேவைப்படுவார்கள். ரோட்ராக்டர்கள் அந்தப் பணியைச் செய்ய தயாராக உள்ளனர். உங்கள் திட்டங்கள் மற்றும் மாவட்ட குழுக் களில் எங்களை ஈடுபடுத்துவதன் மூலமும் இணைந்து செயல்படுவதன் மூலமும் சாதனைகள் புரிய முடியும். ரோட்டரியினருக்கு அனுபவம் இருந்தால், ரோட்ராக்டர்களுக்கு ஆற்றல் சக்தி உள்ளது என்றார்.


பரஸ்பரம் பலன்கள் உள்ளன என்றார் ராஜு. என்னை இந்த நிலைக்கு வளர்த்தது PDG C R ராஜு போன்ற ரோட்டேரியன்கள் தான். ரோட்ராக்டர்கள் ரோட்டேரியன்களை ஆதரவைப் பெற்று செயல்பட்டால் அவர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்று கூறிய அவர், தாம் DRR ஆக இருந்தபோது நடந்த மாநாட்டு அனுபவங்களை நினைவு கூர்ந்தார். சிட்னி மாநாட்டு அமர்வில் 40,000 உயர்நிலை ரோட்டேரியன்களுடன் பேசியதன் மூலம் கனவு நனவானது. My Flag My India நிகழ்வின் மூலம் 50,000 ரோட்ராக்டர்களும், ரோட்டேரியன்களும் இணைந்து சென்னையில் உலகின் மிகப்பெரிய மனிதக் கொடியை உருவாக்கி சாதனை படைத்தனர் என்று அவர் நினைவு கூர்ந்தார். எங்களைப் பொருத்தவரை ரோட்டேரியன்கள் எங்களுடன் இருந்து எங்களை முன்னோக்கி அழைத்துச் செல் கின்றனர். வட்லாமணி, மாநாட்டுத் தலைவர் முருகானந்தம் மற்றும் ஆலோசகர் Y குமணன் மூவரும் DRR ஆக இருந்தவர்கள். இந்த ரோட்டரி தலைவர்களிடம் ரோட்ராக்ட் எப்படி தலைமைப் பண்புகளை வளர்த்துள்ளது என்பதைக் காட்டுகிறது என்றார்.

பெண் ரோட்ராக்டர்கள் எண்ணிக்கை குறைந்து இருப்பது குறித்து ஆர்த்தி வருத்தப்பட்டார். இது 30 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. மகளிர் கல்லூரிகளில் ரோட்ராக்டை நிறுவுவது, அவர்களுக்கு தலைமைப் பொறுப்புகளை வழங்குவது, மாதவிடாய் சுகாதாரம் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் போன்ற மகளிர் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகிவற்றில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

ரோட்ராக்ட் போலவே ரோட்டரியும் ஹூஸ்டன் மாநாட்டில் 10 பெரிய திட்டங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று வட்லாமணி பரிந்துரைத்தார். ரோட்ராக்டர்களை இரட்டை உறுப்பினர்களாக்கு வதற்கும், ரோட்ராக்ட் மற்றும் ரோட்டரி உறுப்பினர்களை அதிகரிக்கவும் உதவவேண்டும் என்று பிரதிநிதிகளை வலியுறுத் தினார். 2029ம் ஆண்டுக்குள் ரோட்ராக்ட் உறுப்பினர்கள் எண்ணிக் கையை 10 லட்சமாக அதிகரிக்க RI இலக்கு நிர்ணயித்துள்ளது. 2022-க்கு ரோட்ராக்ட் உறுப்பினர்கள் எண்ணிக்கை 3,00,000 என்ற இலக்கை அடைய வேண்டும் என்பது ரோட்டரித் தலைவர் சேகர் மேத்தாவின் விருப்பமாகும் என்றும் அவர் கூறினார்.■



Rtn Shekhar Mehta
RI President



Rtn Ramesh Meher
District Governor

# GLIMPSES OF DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021-22
LIVE LIFE.... GIVE LIFE

SERVE TO CHANGE LIVES





## Blanket distribution to prisoners

One afternoon, District pleader Adv. Ketan Dhake was seated with District Legal Aid Service Authority Secretary Judge A A Shaikh to discuss a project in Jalgaon Central Jail as per the Supreme Court directive. They reached out to club president Umang Mehta of Rotary Club of Jalgaon Gold City to collaborate for the project.

Both of them were impressed with the project taken up and progress made by Rotary Jalgaon Gold City. The initial project was to provide counselling for the Under Trial Prisoners (UTP) lodged in the jail. However, following a discussion, the club felt the need for providing blankets to the inmates to protect against the winter cold. And so the project took shape.

The honorary guests Judge Shaikh and District Government pleader Advocate Ketan Dhake along with Umang Mehta were showed the barracks where they interacted with the inmates. Prior to providing the counselling, they wanted to understand whether the UTPs understood their rights while in jail. Surprisingly, 20 per cent of them were not aware of the concept of bail.

During the counselling session led by Judge Shaikh, Advocate Ketan Dhake and Rtn Umang Mehta they educated 200-300 inmates about their rights, medical assistance available and answered their questions.

The blankets that were distributed to all inmates was sponsored by Rahul Jain, a member of Rotary Club of Jalgaon Gold City. The project chairman Rtn. Rahul Kotecha, Prakhar Mehta, Rahul Kothari, Anand Gandhi and law students from the Maniyar college were present.


This project was a first-of-its-kind and was an impactful and successful event.

## From mental illness to mental wellness

The District Action Group on Mental Health Initiatives (DAGMHI) in Rotary District 3030, India, is the first chapter of the Rotary Action Group on Mental Health Initiatives. RAGMHI was formed in 2015. DAGMHI's Board was formed in May 2021 but it has been working since May 2020, when COVID-19 struck the world. The pandemic saw the rise of mental health problems like never before.

DAGMHI shares the vision and mission of RAGMHI, as it promotes mental health and emotional wellbeing in society by generating awareness, removing stigma, and spreading the understanding that mental illness is treatable and preventable. Since last 19 months it has conducted 50 webinars for children, parents, Rotarians, Rotaractors, Interactors and school students, on different topics. It has conducted poster, slogan and video making competitions. It acts as a resource base for all clubs of the district and other districts too. It has encouraged and guided clubs to form mental health committees and work towards awareness.


It launched a 4-page monthly online newsletter — *Mind Matters* — in April 2021 which is shared with Rotary clubs across the globe.



ADVT.



Rtn Shekhar Mehta
RI President



Rtn Ramesh Meher
District Governor

# GLIMPSES OF DISTRICT 3030

जीवन RID 3030 RY 2021-22
LIVE LIFE.... GIVE LIFE

SERVE TO CHANGE LIVES



## A hospice for terminally ill patients in Amravati

Shreemati Late Saraswatidevi Premchand Harwani Memorial Rotary Midtown Sukhant Palliative Care Center at the Dr Panjabrao Deshmukh Memorial Medical College is a project of Rotary Club of Amravati Midtown, RID 3030, Club ID 15486, implemented with strong giving culture and a generous approach to the local society.

### Our Mission

To provide care and support to terminally ill patients right from the day of diagnosis to the end of life stage and bereavement. This shall be accomplished by providing

- Medical and nursing care of palliative nature
- Psychological, social, emotional, and spiritual support, and counselling through indoor, day-care and home-based palliative care services with the help of a vibrant generous approach and strong giving culture.

### Our Vision

- People battling lifetime diseases and suffering from unbearable distress, pain and other symptoms must live a dignified life till their last breath
- The elderly suffering fourth stage distress and leading dependent life must live a dignified life till their last breath
- No close relative of terminally ill patients and old age persons leading dependent life should suffer from mental and physical stress of caring for their loved ones.

### Services offered at Rotary Midtown Sukhant Palliative Care Center

- **Until death:** Palliative care for terminally ill patients until death
- **Short stay:** Terminally ill patients are also admitted for a short stay particularly when the caretakers have to leave home for some important work
- **Daycare:** Family members can drop their patient in the morning hours and take them back in the late evening hours.
- **Home-based palliative care:** Not every terminally ill patient is admitted to a palliative care centre, but for many patients medical, nursing, counselling facilities have to be delivered directly at their doorsteps. This is called home-based palliative care. In the second phase of this project, Sukhant Home-based Palliative Care Service will be started.

### Facilities available at Rotary Midtown Sukhant Palliative Care Center

- 20-bed hospital with cubical arrangement for patients and caregivers, with all modern facilities
- Air cooled space with proper cross-ventilation
- Round-the-clock service of trained nurses and other healthcare workers, availability of doctors from time to time
- Centralised oxygen supply system and advanced firefighter system
- Dietary guidance and psychological counselling facilities
- Videoconferencing facilities for patients to communicate with relatives
- Beautiful garden attached to the ward for spending some time in pleasant environment and for prayer
- In addition to qualified healthcare workers, services of well-trained volunteer caregivers will be available.

Rotary Midtown Sukhant Palliative Care Center management team remains grateful to all donors, all members of Rotary Club of Amravati Midtown, management of Shree Shivaji Education Society, Dean and Director of Dr Panjabrao Deshmukh Memorial Medical College and particularly PDG Kishor Kedia, RID 3030, for encouraging, guiding and for all the support extended from time to time.

# ரோட்டரியை இமாலய உயரங்களுக்கு உயர்த்தியவர்

ராஜேந்திர சாபூ


1979 மே மாதத்தில், RI ஒன்று கூடுகையில் நான் கிளிஃப் டாச்டர்மனைச் சந்தித்தேன். அது ஒரு நீண்ட நட்புப் பயணத்தின் தொடக்கமாக அமைந்தது. அவர் 1968–69ல் மாவட்ட ஆளுநராக இருந்தார், நான் 1976–77ல் மாவட்ட ஆளுநர் ஆனேன். ஆனால், அவர் எப்போதும் தன்னுடைய கூடுதல் அனுபவத்தைப்பற்றிப் பேசியதில்லை, நாங்கள் எங்களுடைய ரோட்டரி சேவையில் நெருங்கினோம். நான் 1981–83ல் RI இயக்குநராக இருந்தேன், 1991–92ல் RI தலைவர் ஆனேன். இதைத் தொடர்ந்து அவர் 1983–85ல் இயக்குநராக இருந்தார், 1992–93ல் தலைவராக இருந்தார். அறிவுக்கூர்மை மற்றும் அறிவாற்றலின் அடையாளமாக நான் அவரை மதித்தேன். கிளிஃப் ஒரு கல்வியாளர், பசிஃபிக் பல்கலைக் கழகத்தின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர். அந்தப் பல்கலைக்கழகத்தின் தலைவர் ஸ்டான் மெக்காஃப்ரெ. நான் இயக்குநராகப் பொறுப்பு வகித்த முதல் ஆண்டில் அவர் RI தலைவர் ஆனார். அவர், புதிய எல்லைகள் குழுவின் தலைவராக கிளிஃப்பை ரோட்டரி தலைமைக்கு அழைத்துவந்தார். ஃபிலிப்பைன்ஸில் வெற்றிகரமான இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து வழங்கலைத் தொடர்ந்து, 2005ல் ரோட்டரியின் நூற்றாண்டுக்குள் ஒட்டுமொத்த உலகின் குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்து வழங்கவேண்டும் என்று இந்தக் குழு RI இயக்குநர்களுக்குப் பரிந்துரைத்தது. இதற்கான செயல்திறன் மிக்க முன்னெடுப்பு நிலையை வாரியம் எடுத்தது. 1983 சட்ட அவையில் 3-H (நலன், பசி மற்றும் மனித குலம்) என்கிற திட்டத்தைச் சில முன்னாள் உயர் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். நான் வாரியத்தில் இருந்தேன், கிளிஃப் இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். வாரியத்தின் செயலைப் பாதுகாக்கும் அதிகாரம் அவருக்கு இருந்தது. எதிர்ப்பானது தோற்கடிக்கப்பட்டது.

1979ல் போகா ராடனிலும் (Boca Raton), நாங்கள் ஒன்றாக இருந்த எல்லாப் பன்னாட்டு நிகழ்வுகளிலும் உஷா, நான் இருவரும் கிளிஃப், அவருடைய மனைவி டொரோத்தி ஆகியோருக்கு நெருங்கிய நண்பர்களாக ஆனோம். டொரோத்தி 1987ல் புற்றுநோயால் மறைந்தார். டொரோத்தியின் நிறைவேறாத ஓர் ஆசை, கிளிஃப் RI தலைவர் ஆவது தான் என்று கிளிஃப் என்னிடம் கூறினார். கிளிஃப் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவருடைய கருப்பொருள், உண்மையான மகிழ்ச்சி, பிறருக்கு உதவுவதுதான்.

நான் RIPE-ஆக தேர்ந்தெடுக்கப் பட்ட போது, கிளிஃப் RIPN-ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். என்னுடைய வாரியத்தில் கிளிஃப் அறிவு ஊற்றைக் கொண்டு வருவார் என்று தெரிந்து கொண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன். ஆக்ராவில் நடந்த எங்கள் சந்திப்புக்கு கிளிஃப்ஃபை அழைக்க நான் விரும்பினேன். ஆனால், அப்போது அவருடைய பித்தப்பையில் தொற்றுஏற்பட்டதால் திடீர் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி யிருந்தது. அதனால், அவரால் அங்கு வர இயலவில்லை. எனினும், அடுத்த ஆண்டு, தலைவராக அவர் இந்தியாவுக்கு வந்தார், முதன்மையாக, RI இயக்குநர் பாண்டுரங்க செட்டி-யின் இல்லமாகிய பெங்களூருக்கு வந்தார், வாரியத்தின் செயல் குழுத் தலைவராக அவரை ஆக்கினார். 1998ல் TRFன் தலைவராக அவர் தில்லியில் CoLக்கு வந்தார். 1994ல் அவர் மேரி எலெனாவை மணந்தார்.

1958ல் கிளிஃப் RC பெர்கெலெ-யில் சேர்ந்தார், பின்னர் 1971ல் RC ஸ்டாக்டனுக்கு மாறினார். நிறைவாக, அவர் RC மொரகா-வில் சேர்ந்தார், அதன் பிறகு, அதில் உறுப்பினராகத் தொடர்ந்தார். மேரி எலெனா-வும் RC மொரகா-வில் சேர்ந்து அதன் தலைவராக ஆனார்.

1992ல் பன்னாட்டு ஒன்று கூடுகையில் நான் கிளிஃபைச் சேர்த்தேன், இதை அவர் ஆழமாகப் பாராட்டினார், அப்போது தொடங்கிய செயல்முறை இன்றைக்கும் தொடர்கிறது… IAஆனது



PRIP *ராஜேந்திர சாபூ மற்றும்* PRIP *கிளிஃப் டாச்டர்மேன்.*

உள்வரும் RI தலைவருடைய முழுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. வாரியக் கூட்டங்களில்கூட, அவர் என்னை ஆதரிப்பார், எந்த நுண்ணுணர்வான பிரச்சனைகளையும் நாங்கள் எங்களுக்குள் தீர்த்துக்கொள்வோம். ஒருமுறை, ஒரு நிர்வாகப் பிரச்சனை எழுந்தது. தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவருடைய செயலாளர், அவர் தலைவராக ஆகும்போது அவருடன் நகரவேண்டும் என்று நான் உணர்ந்தேன். இப்போது இது இப்படிதான் செய்யப்படுகிறது. ஆனால், நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது என் செயலாளராக இருந்த ஆன் ஃப்ளெமிங், நான் தலைவரானபோது என்னுடைய செயலாளராகத் தொடர விரும்பவில்லை. அவர் கிளிஃபை அணுகி இதைச் சொன்னார், கிளிஃப் என்னை அணுகினார், நான் இதற்கு ஒப்புக்கொண்டேன். அவர் தானாக இதைச் செய்திருக்கலாம். ஆனால், இது ஒரு நெறிமுறை என்று அவர் நினைத்தார், அவர் என்னைக் காயப்படுத்த விரும்பவில்லை.

1995 மார்ச், ஏப்ரல் மாதங்களில் லூயிஸ் கியெ RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார், நான் அறங்காவலர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தேன். பால் ஹாரிஸின் 50வது நினைவு நாளை முன்னிட்டு ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக, அமைதி மற்றும் முரண்களைத் தீர்த்தலில் மேம்பட்ட கல்வி என்கிற ஒரு யோசனையை நான் உருவாக்கினேன். லூயிஸ் இதை ஏற்றுக்கொண்டார், நான் இதை ஏப்ரல் மாத அறங்காவலர்கள் கூட்டத்தில் முன்வைத்தேன், அப்போதைய TRF தலைவர் பௌலோ கோஸ்டா இதற்கு உதவினார். இதற்கு எனக்கு அங்கீகாரம் கிடைத்தது. அடுத்த கூட்டத்தில் நான் தலைவராக இருக்கும்போது நான் நிறைவுத் தீர்மானத்தை எடுக்கலாம். PRIP பில் ஸ்கெலிட்டனுடைய அறிவுறுத்தலின்பேரில், கிளிஃப் மற்றும் கல்வியாளர்களாகிய வேறு இரண்டு ரோட்டரி தலைவர்கள் தலைமையில் நான் குழுவை உருவாக்கினேன். கிளிஃப் அதை நன்கு வழிநடத்தினார்; அடுத்த அறங்காவலர்கள் கூட்டத்தில் இந்தத் திட்டம் கிளாஸ்கௌ மாநாட்டில், கிளிஃப் தலைமையில் கிட்டத்தட்ட 400 ரோட்டரியன்கள் கலந்துகொண்ட ஒரு துணைக் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. எனக்கு ஒப்புதல் எதிர்வினை கிடைத்தது. அதனால், கிளிஃப், நான் மற்றும் லூயிஸ் இந்தத் திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் சென்றோம்.



ABCs of Rotary என்கிற ஒரு சிற்றேட்டைக் கிளிஃப் வெளி யிட்டார். ஒவ்வொரு புதிய ரோட்டரியனும், வருங்காலத்தில் ரோட்டரி உறுப்பினராகக் கூடியவர்களும் இந்தப் புத்தகத்தைப் பெற்றுப் படித்தார்கள். அத்துடன், மெக்சிகோ அல்லது பனாமாவுக்குத் தன்னார்வலராகச் சென்று அவர்களச் சேவையிலும் ஈடுபட்டார். அவர் ஒரு தீவிரமான சாரணர்; மிகுந்த சிந்தனை, நகைச்சுவை மற்றும் சட்டென்று அறிவோடு பதில் சொல்லும் திறமையும் அவருக்கு இருந்தது.

கிளிஃப் தன்னுடைய பேச்சுகளில் பல கதைகளைச் சொல்லியிருக்கிறார். அவற்றில் சில கதைகள் மிகவும் நகைச்சுவையானவை. ‘‘உங்கள் பேச்சுகளைக் கேட்கிறவர்கள் குறிப்பு எடுக்கிறார்கள்’’ என்று நான் கிளிஃபிடம் கூறினேன். அதற்கு அவர் சொன்னார்: ராஜா, அவர்கள் என்னுடைய பேச்சி யிலிருக்கும் செய்தியைப்பற்றிச் சிந்திக்கவில்லை; இருக்கும் நகைச் சுவைகளை மட்டும் தான் குறித்துக் கொண்டார்கள். அவருக்கு அந்த நுண்ணுணர்வு இருந்தது. அவருடைய தாய் கெல்லாக்ஸின் தொலைக்காட்சி விளம்பரங்களில் தோன்றிவந்தார். அந்த விளம்பரங்களில் அவர் அந்த உணவைச் சாப்பிடவேண்டியிருந்தது. நான் கிளிஃபின் தாயைச் சந்தித்தபோது, ‘‘நீங்கள் கிளிஃபுக்கு நகைச்சுவைத் திறமையை அளித்திருக்கிறீர்கள்’’ என்று அவரைப் பாராட்டினேன்,

கிளிஃபின் மிகச் சிறந்த பேச்சு களைப்பற்றி, நோக்குநிலையைப்பற்றி நான் அவரைப் பாராட்டியுள்ளேன், தலைமைப்பண்புகளில் அவருடைய மிகச் சிறந்த படைப்பு, ஓர் இசை க்குழுவை நடத்துபவராக அவர் செயல்பட்டத்துதான். பன்னாட்டு ஒன்றுகூடுகைகளில் இது திரும்பத் திரும்ப நடக்கிற ஒரு விஷயமாக ஆனது; கிளிஃப் தன்னுடைய வழங்கலைத் தொடங்கு முன்பு, உள்வரும் மாவட்ட ஆளுநர்கள் எழுந்து நின்று கை தட்டுவார்கள், அவர் வழங்கலை முடித்த பிறகும் தான்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, அவரால் நெடுநேரம் நிற்க இயலவில்லை. மேரி எலெனா புற்றுநோயால் இறந்தபோது, அந்த இரட்டைத் துன்பம் கிளிஃபை வாட்டியது. அதன்பிறகு, அவர் பன்னாட்டு ஒன்றுகூடுகைகளுக்கு வருவதை எப்போதும் தவிர்த்தார். சமீபத்தில் எனக்கு நினைவிருப்பது, 2018 IA.

நாங்கள் அவ்வப்போது தொடர்பு கொண்டோம். மேட் கபராஸ், ஃபிராங்க் டெவ்லின் மற்றும் லூயிஸ் கியெ இறந்ததுபற்றிக் கிளிஃப் பேசினார். நவம்பர் 23ல் அவர் இறந்துவிட்டார் என்ற தகவல் எனக்குக் கிடைத்தபோது, தன் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்த மனிதர் அவர் என்று நான் உணர்ந்தேன். தன்னுடைய திறமையால் அவர் ரோட்டரியை இமாலய உயரத்துக்குக் கொண்டு சென்றார் என்பது உண்மை.

கட்டுரை ஆசிரியர் முன்னாள் RI தலைவர்.

# TRF Star Performers (2020–21)

| Trophy | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Contribution to Annual Fund | Sunnil Mehra (3141) | Jose Madhavassery (3201) |
| Highest Contribution to Endowment Fund | Sunnil Mehra (3141) | S Muthu Palaniappan (3232) |
| Highest Contribution to Polio Fund | Sunnil Mehra (3141) | P N B Murugadoss (3212) |
| Highest Per Capita APF Contribution to TRF | Sunnil Mehra (3141) | Ajith Weerasinghe (3220) |
| Highest Total Contribution to TRF | Sunnil Mehra (3141) | S Muthu Palaniappan (3232) |
| Highest Donor Participation | Sunnil Mehra (3141) | Jose Madhavassery (3201) |
| Highest Club Participation | Dr Sandeep Kadam (3142) | S Muthu Palaniappan (3232)<br>Ajith Weerasinghe (3220) |

| ALL INDIA TROPHIES | RI District |
|---|---|
| Nitish Laharry Trophy for All India Highest Total Contribution to TRF | 3141 |
| Binota and Kalyan Banerjee Trophy for All India Highest Endowment Fund Contribution | 3141 |
| Usha and Raja Saboo Trophy for All India Highest Annual Fund Contribution to TRF | 3141 |
| Highest All India Polio Fund Contribution to TRF | 3020 |
| District with highest number of new AKS members | 3141 |






RI President Shekhar Mehta and Trustee Aziz Memon present an award to RID 3170 PDG Sangram Patil and spouse Utkarsha; **From L:** Trustee-elect PRID Bharat Pandya, RID 3240 PDG Subhasish Chatterjee, RI President Mehta, Trustee Memon, DGN Nilesh Agarwal, PDG Debashish Das and DGE Dr Kushanava Pabi.




**RID 3131 PDG Rashmi Kulkarni with (from L) RRFC Lakkaraju Satyanarain, PDG Dr Girish Gune, Vinay Kulkarni, Trustee Memon and President Mehta.**



# — Zones 4, 5, 6 and 7

| Trophy | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Contribution to Annual Fund | Rajib Pokhrel (3292) | Sangram Vishnu Patil (3170) |
| Highest Contribution to Endowment Fund | Sudip Mukherjee (3291) | Nagendra Prasad (3190) |
| Highest Contribution to Polio Fund | Subhasish Chatterjee (3240) | M Satish Babu (3020) |
| Highest Per Capita APF Contribution to TRF | Subhasish Chatterjee (3240) | Rashmi Vinay Kulkarni (3131) |
| Highest Total Contribution to TRF | Rajib Pokhrel (3292) | Rashmi Vinay Kulkarni (3131) |
| Highest Donor Participation | Rajib Pokhrel (3292) | M Ranganath Bhat (3181)<br>N V Hanmanth Reddy (3150) |
| Highest Club Participation | Subhasish Chatterjee (3240) | Rajarama B Bhat (3182)<br>Rashmi Vinay Kulkarni (3131) |




RID 3232 PDG S Muthu Palaniappan receives award from Trustee-elect Pandya in the presence of (from L) PDG E K Sagadhevan, DGE Dr N Nandakumar, RRFC John Daniel, President Mehta, PDG Babu Peram, Trustee Memon, PDGs V Raja Seenivasan, I S A K Nazar, AKS members S V Veeramani and Radha, PDG Rekha Shetty, DGN Ravi Raman and AKS members M Ambalavanan and Geetharani.

Below: RID 3291 PDG Sudip Mukherjee receives the award from President Mehta in the presence of (from L) RRFC Basu Dev Golyan, PDG Shyamashree Sen, PRID Pandya, Trustee Memon, PDGs Anirudha Roy Chowdhury, Angsuman Bandyopadhyay and Trustee Gulam Vahanvaty; **From L:** Institute Convener RID A S Venkatesh, Trustee Memon, RID 3060 PDG Prashant Jani, his spouse Hita, President Mehta and RID Mahesh Kotbagi.







*Next issue: Membership and PI Awards.* Pictures: Sridhar Bharathy

# CoL கடமையை அக்கறையுடன் செய்யுங்கள்: பரத் பாண்ட்யா

V முத்துகுமரன்

மாவட்ட ஆளுநரானபிறகு ரோட்டரியன்கள் செய்யவேண்டிய மிக முக்கியமான பணி, சிகாகோவில் ரோட்டரியின் பாராளுமன்றத்தில் CoL பிரதிநிதிப் பொறுப்பை ஆற்றுவது. தங்கள் மாவட்டங்கள், பிராந்தியங்களின் நல்ல தோற்றத்தை முன்னிறுத்துவதுடன், அவர்கள் ரோட்டரியின் எதிர்காலத்தை வடிவமைப்பார்கள் என்றார் அறங் காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வரும் PRIDயுமான பரத் பாண்ட்யா.

சென்னை மஹாப்ஸ் 21 சந்திப்பின் CoL கருத்தரங்கில் பேசிய அவர், பிணைப்பான்களில் உள்ள அனைத்துச் சட்டங்களையும் நன்கு படிக்கும்படி PDGகளைக் கேட்டுக்கொண்டார். ஏனெனில், CoL ரோட்டரியை முன்னெடுத்துச் செல்கிற, அதை இன்னும் பெரிதாக வளர்க்கிற, அதை இன்னும் பொறுப்பான, விரைவான, சுறுசுறுப்பான, வெளிப்படைத்தன்மை மிக்க அமைப்பாக ஆக்குகிற மிகச் சிறந்த நம்பிக்கையையும் பொறுப்பையும் வழங்குகிறது. இதில் பங்குபெறுவோர் ரோட்டரியை மறுவடிவமைப்பதற்காக RIன் அமைப்புக் கையேட்டை, சட்டங்களை (முன்வைக்கப்படும் சட்டங்களை) மற்றும் CoL செயல்முறைகளைப் படிக்கவேண்டும்.

இதுபற்றிய வரலாற்றைப் பேசிய பாண்ட்யா CoL 1933ல் ஓர் RI மாநாட்டின் முழுமை நிகழ்வின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது; 1972ல் ரோட்டரியின் பாராளுமன்றமாக அங்கீகரிக்கப்பட்டது; 1977ல் ஒரு தனி அமைப்பாக ஆனது, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அவை கூடுகிறது. 2001 தொடங்கி அனைத்து அவைகளும் சிகாகோவில் உள்ள RI தலைமையகத்தில் நடத்தப்படுகின்றன என்றார்.

CoLல் நீங்கள் நிகழ்ச்சிகளின்போது சுறுசுறுப்பான சூழலை உணர்வீர்கள், அங்கு நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள், பழையவற்றை மறங்கள், திரும்பக் கற்றுக்கொள்ளுங்கள், சட்டங்கள் இயற்றுதல், திருத்தங்களில் சுறுசுறுப் பாகப் பங்கேற்றிடுங்கள்'' என்றார் அவர். CoL 2019ன் முதல் நாளில் ரோட்டராக்டரி ரோட்டரியின் சமக் கூட்டாளியாக உயர்த்தும் தீர்மானத்தை அப்போதைய RI தலைவர் பாரி ரஸ்ஸின் (2018–19) கொண்டு வந்த போது, அது தெளிவாகத் தோற்கடிக் கப்பட்டது. ஆனால், அடுத்த நாள், RI வாரியத்தில் ஒரு விவாதம் நடைபெற்றது. கடைசி நாளில் பெரும்பான்மை வலுவுடன் இந்த முன்வைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்த நான்கு மாதங்களில் CoL உறுப்பினர்கள் சட்டங்களைப் படிக்கவேண்டும், எவற்றை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்று தீர்மானிக்கவேண்டும், மேடையில் தாக்கமுள்ள 3 நிமிடப் பேச்சு ஒன்றுக்குத் தயார் செய்யவேண்டும் என்றார் பாண்ட்யா. எப்போது பேசவேண்டும் என்பதை நீங்கள் தீர்மானிக்கவேண்டும். ஏனெனில், நேரம் மிகவும் முக்கியம். நீங்கள் உங்கள் மாவட்டத்தை, பிராந்தியத்தின் பிரதிநிதி என்பதை நினைவில் வையுங்கள். சட்டங்கள் அல்லது திருத்தங்களின் வழியாக உங்கள் தாக்கம் ரோட்டரியை முன்னால் கொண்டு செல்லும்'' என்றார் அவர்.

RID A S வெங்கடேஷ் பேசுகையில், CoLல் எப்படி வாக்களிப்பது என்று



**இடதிலிருந்து:** TRF *அறங்காவலர் - தேர்வு பரத் பாண்ட்யா,* PDGs *முகேஷ் அர்னேஜா, ஜவஹர் வட்லாமணி மற்றும்* PRID Dr *மனோஜ் தேசாய்.*

V முத்துகுமரன்

சிந்தித்துத் தீர்மானியுங்கள்'' என்றார். தற்போது CoLன் அறிவுறுத்தல் வாரியத்தில் 93 சட்டங்கள் உள்ளன, இவற்றில் சில மிகவும் குறிப்பிட வேண்டியவை, இவை செயலுக்கு வந்தால், ரோட்டரியை அசைக்கும்.'' ரோட்டரி CoL துணைத்தலைவர் PDG T N சுப்ரமணியன் தலைமையில் நடைபெறும் இச்சந்திப்பை முழுமை யாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி வெங்கடேஷ் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார். ஏனெனில், CoLல் நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம் என்பதை அவர் உங்களுக்குத் தெளிவாக உணர்த்துவார்.

### வாக்குகளுக்குப் பரப்புரையில் ஈடுபடவேண்டாம்

CoLல் ஒரு சட்டத்துக்காக வாக்குகளைக் கேட்டுப் பரப்புரையில் ஈடுபடுவது அல்லது ஆதரவைக் கேட்பது சிறிதும் அனுமதிக்கப்படுவதில்லை என்றார் PDG ஜவகர் வட்லமணி. கோரிக்கைக் கடிதம், ஆதரவை நாடும் துண்டுப் பிரசுரங்களைக்கூடக் கூடத்தில் உள்ள CoL தலைவருடைய அனுமதியுடன் தான் வழங்கலாம். அங்கு கிட்டத்தட்ட 50% பார்வை யாளர்கள் ஆங்கிலம் பேசாத நாடு களிலிருந்து வருவார்கள் என்பதால், தயாரித்த உரையை மெதுவாகவும் தெளிவாகவும் படிப்பது மிக நல்லது'' என்றார் அவர்.

பிரதிநிதிகள் எல்லாச் சட்டங் களுக்கும் வாக்களிக்கவேண்டும் என்று கட்டாயம் இல்லை. ஆனால், முன் வைக்கப்படும் அனைத்துச் சட்டங்களையும் படித்த பிறகு, நீங்கள் அவற்றுக்காக அல்லது அவற்றை எதிர்த்து வாக்களிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், பெரும்பாலான தீர்மானங் களுக்கு நீங்கள் வாக்களிக்கவில்லை என்றால், அங்கு சென்று என்ன பயன்'' என்று கேட்டார் PRID Dr மனோஜ் தேசாய். பல பகுதிகளைச் சேர்ந்த RI இயக்குநர்கள் தங்கள் சட்டங்களைச் செயலாக்குவதற்குப் போட்டியிடுவார்கள் என்று குறிப் பிட்ட அவர், திரும்பி வந்தபிறகு, நீங்கள் உங்கள் DGகளிடம் இது பற்றிப் பேசலாம்; சங்கங்களுக்குச் சிற்றேடுகளை வழங்கி, CoL தீர்மானங் களைப்பற்றித் தெரிவிக்கலாம்.

வாக்களிக்கும் செயல்முறையின் போது பச்சை, சிவப்பு மற்றும் மஞ்சள் கொடிகளைச் செயல்திறனுடன் பயன்படுத்துங்கள் என்றார் PDG முகேஷ் அர்னெஜா. மஞ்சள் அட்டையை (அல்லது கொடியை) உயர்த்துவதன் மூலம் நாம் ஆணைப் புள்ளி ஒன்றை உருவாக்கலாம், சட்டங்களில் தெளிவைக் கோரலாம்.

20% வாக்குகளைப் பெறும் சட்டங்கள் தான் CoLல் விசாரிக்கப் படும், கருத்தில் கொள்ளப்படும், 80% வாக்குகளைப் பெறும் சட்டங்கள் செயலுக்கு வரும் என்றார் PDG சுப்ரமணியன். சுமார் 30% CoL உறுப்பினர்கள் பேசுவதே இல்லை. ஆனால், நீங்கள் ஒரு சட்டத்தை, அல்லது திருத்தத்தை முன்வைக்கும் போது, அதைக் குறிப்பிடக்கூடியதாக, தாக்கம் உள்ளதாக ஆக்குங்கள்'' என்றார் அவர். PDG ஷரத் ஜெயின் இணைந்து தலைமை தாங்கிய இந்த நிகழ்ச்சியில் சுமார் 60 PDGகள் பங்கேற்றார்கள்.■

# மாவட்டப் பயிற்சியின் முக்கியத்துவம்

ரோட்டரி செய்திக் குழு

ரோட்டரி செயல்திறனோடு செயல்படவேண்டுமென்றால், மாவட்டப் பயிற்சி சங்கங்கள் வரை செல்லவேண்டும், மேலும், தங்களுடைய பொறுப்புக் காலத்தின்போது தங்கள் நண்பர்களாக, தத்துவ அறிஞர்களாக, வழிகாட்டிகளாக இருப்பதற்காக'' DTகள் (மாவட்டப் பயிற்சியாளர்கள்) DGகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றார் PRID பரத் பாண்ட்யா.

மஹாப்ஸ் 21 சந்திப்பில் DT கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய அவர், ரோட்டரியன்கள் அதே மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக, பல நேரங்களில் யார்மீது புகழ் வெளிச்சம் பாயவேண்டும் என்கிற பிரச்சனையில் DTக்களுக்கும் அவர்களுடைய ஆளுநர்களுக்கும் இடையில் பிரச்சனை வருகிறது என்றார். DG தன் வேலையை நன்கு செய்திருந்தால், DTயின் நல்ல வேலைக்காக'' அந்த DT அந்த மாவட்டத்தில் நெடுநாள் நினைக்கப்படுவார். உங்கள் மாவட்டம் மிகச் சிறந்த திட்டங்கள், நிகழ்ச்சி களை நடத்தினால், உங்களுக்குப் பாராட்டுகள். உங்கள் திறமையையும் அனுபவத்தையும் உங்கள் ஆளுநர், அவருடைய குழுவுக்குக் கொண்டுவாருங்கள்.

ஆண்டுமுழுவதும் சங்கங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி களைத் திட்டமிட்டு நடத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் இருக்க வேண்டும். PETSகள் மற்றும் மாவட்ட அளவிலான பிற பயிற்சி நிகழ்ச்சிகளில் நாம் கூடுதல் உரையாடல் நிகழ்ச்சி களை நடத்தவேண்டும். எல்லாப் பிராந்தியங்களிலும் ஒரே மாதிரியான தகவல்கள் மற்றும் பயிற்சிச் செயல்முறையை அனுப்புவதற்கு ஒரு தேவை உள்ளது.

RID A S வெங்கடேஷ் பேசுகையில், DTகள் பயிற்சி மாதிரிகளை உருவாக்கவேண்டும்'' என்றார். இங்கு சிறந்த பயிற்சியாளர்கள் உள்ளார்கள், அதனால், அவர்களை மிக நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ரோட்டரி தொடர்ச்சியை நம்பினாலும், நம் பிராந்தியங்களில் உள்ள ரோட்டரியன்கள் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ச்சியை நம்புகிறார்கள். உள்வரும் ஆளுநர்களுடைய தேவைகள், ஆலோசனைகளைப் பச்சாத்தாபத்துடன் கேளுங்கள். குறுகிய கால இலக்குகள் அல்லது தனிப்பட்ட திட்டங்களுக்குப் பதிலாக, இன்னும் பெரிய அமைப்பைப்பற்றிச் சிந்தியுங்கள். ஆளுநருடன் சேர்ந்து நீங்கள் எடுக்கும் எல்லாத் தீர்மானங்களாலும் ரோட்டரி வெற்றியடையட்டும், என்றார்.

# ஆளுநர்களின் சந்திப்பு

ஜெய்ஸ்ரீ



ஜெய்ஸ்ரீ

RI *இயக்குனர் மகேஷ் கோட்பாகியுடன்* DG*க்கள்.*

இந்த ஆண்டு மாதம் 4,000 உறுப்பினர்கள் என்ற வளர்ச்சியுடன், கடந்த பத்து ஆண்டுகளில் ஆண்டுக்கு 4,000 உறுப்பினர்கள் என்பதைவிட சிறப் பாகவே செயல்பட்டு வந்துள்ளோம் என்று RI தலைவர் சேகர் மேத்தா, மாவட்ட ஆளுநர்களின் பதவிக் காலத்தின் மத்தியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவரது “ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டுவாருங்கள்” (EOBO) கொள்கைத் திட்டத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில், நான்கு மண்டலங்களும் ஒருங்கிணைந்து கடந்த ஜூலை முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் உறுப்பினர் களின் எண்ணிக்கையை 15,553 ஆக உயர்த்தி உள்ளன. ஆனால், இந்தியாவில் 400 ரோட்டரி சங்கங்கள், கெடுகாலத்தை கடந்தும் இன்னும் தங்கள் நிலுவைத்தொகையைச் செலுத்தாதது குறித்து அவர் அதிருப்தி தெரிவித்தார். இந்த சங்கங்களுக்குப் பொறுப்பான உதவி ஆளுநர்களை பதவி நீக்கம் செய்யுங்கள். ஒரு உதவி ஆளுநர் 2 அல்லது 3 சங்கங்களை கவனிக்க முடியவில்லை என்றால் அது அவமானம். 400 சங்கங்கள் நிலுவை வைத்திருப்பது நெஞ்சை உலுக்குகிறது. அந்த சங்கங்களுக்கு பொறுப்பான உதவி ஆளுநர்களை மாவட்ட அங்கீகாரத்துக் காக பரிசீலிக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

துரதிருஷ்டவசமாக, RI உறுப்பினர் குழு தலைவர் PRID கமல் சங்வியின் தாயார் மறைந்துவிட்டதால், சேகர் மேத்தா கூடுதல் பொறுப்பாக அதை கவனித்து வந்தார். உறுப்பினர்கள் வளர்ச்சி, TRF பங்களிப்பு, சேவைத் திட்டங்களில் சமூக பொறுப்புணர்வுள்ள நிறுவனங்களை இழுத்தல் மற்றும் சமுதாயம் சார்ந்த சேவைத் திட்டங்கள் ஆகியவற்றில் ஆளுநர்கள் தங்களுடைய சிறந்த நடை முறைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

ரோட்டரியின் சேவை நாட்களை மேம்படுத்துமாறும் மாவட்டத்தில் பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்களை ஊக்குவிக்குமாறும், ரோட்டரியின் செயல்பாடுகளை இணையதளத்தில் பதிவேற்றுமாறும் மேத்தா வலியுறுத்தினார். இப்படிச் செய்தால்தான் உங்கள் மாவட்டங்கள் அங்கீகாரத்துக்காக பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார்.

இந்த ஆண்டு உறுப்பினர்கள் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டுவதைத் தவிர வேறு எதுவும் முக்கியமானதாக இருக்காது. பத்து ஆண்டுகளில் 40,000 உறுப்பினர்கள் என்பது நமது செயல்பாடுகளையும் திறனையும் நியாயப்படுத்தாது. 130 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில் 1.7 லட்சம் உறுப்பினர்கள் என்பது போதுமானதல்ல, நாம் இன்னும் அதிக உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்று மாநாட்டு அமைப்பாளர் RID A S வெங்கடேஷ் கூறினார்.

RC மெட்ராஸ் காபிடல் சிட்டி 94 முன்னாள் வட்டமேஜை உறுப்பினர்களை மீண்டும் உறுப்பினர் களாக்கியுள்ளது. மேலும் 60 வட்டமேஜை உறுப்பினர் களைக் கொண்ட புதிய சங்கம் நிறுவப் பட உள்ளது. முன்னாள் ரோட்ராக்டர்கள், ரோட்டேரியன்களின் குழந்தைகள் மற்றும் ரோட்ராக்டர்கள் ரோட்டேரியன் களாகவும் செயல்பட அனுமதிப்பது என பல கருத்துக்களை அவர் முன்வைத்தார். இதன் மூலம் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அமர்வுக்கு தலைமை வகித்த RID மகேஷ் கோட்பாகி, 3190, 3054 மற்றும் 3170 ஆகிய ரோட்டரி மாவட்டங்கள் பிரிக்கப்பட இருப்பதாகக் கூறினார். ரோட்ராக்ட் குழு தலைவர் ரவி வட்லாமணி, TRF அறங்காவலர் அஜீஸ் மேமன் ஆகியோரும் பேசினர்.■

# ரோட்டரி என்னை சிறந்த மனிதனாக உருவாக்கியது: PDRR சுஜித்குமார்

கிரண் ஜெஹரா

RID 3232, PDRR சுஜித்குமார் ஒரு சிறந்த மனிதனாக பரிமளிக்க ரோட்ராக்ட் வாய்ப்பளித்தது. இதற்காக தலைமைத்துவ அமர்வு மற்றும் இதர திட்டங்களுக்கு நன்றி. ஏழை மாணவர்களுக்கு கல்வி வழங்கும் அரசு சாரா சேவை நிறுவனமான மாற்றம் அறக்கட்டளையின் நிறுவனர், ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் ரோட்டரி திட்டத்துக்காக உணவு தானியங்களை சேகரித்த காலங்களை நினைவுகூர்ந்தார்.

எதிர்பார்த்த அளவைவிட அதிக தானியங்களைச் சேகரித்ததால், தானியங்களை விநியோகிக்க வேண்டிய தொழுநோயாளிகள் இல்லத்துக்கு செல்லும்படி சங்கத் தலைவரால் கேட்டுக் கொள்ளப் பட்டார். அந்த இல்லத்தில் தொழு நோயாளிகள் இருந்த நிலையைக் கண்டதும் அங்கிருந்து ஓடிவிட நினைத்தேன் என்றார். போக்குவரத்து சிக்னல் ஒன்றில் கை விரல்கள் இல்லாத தொழு நோயாளி ஒருவர் தந்தையின் ஸ்கூட்டரை நோக்கி வந்து கைகளை உயர்த்தி ஆசிர்வதித்தபோது, வாழ்க்கை மாற்றம் ஏற்பட்டது. குழந்தையை நல்ல முறையில் வளர்த்து வந்ததாக என் தந்தையிடம் கூறினார். அப்போதுதான் ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் மூலம் மக்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன் என்றார்.

சுமார் 1,500 ஏழை மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளில் சேர்ந்து படிப் பதற்கு அவரின் அறக்கட்டளை உதவி வந்துள்ளது. கல்வி நிறுவனங்கள் இந்த அறக்கட்டளையுடன் இணைந்து மாணவர்களுக்கு இலவச சேர்க்கை வழங்கியதுடன் நில்லாமல், படிப்புக் கட்டணம், போக்குவரத்து கட்டணம், விடுதிக்கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் உள்ளிட்ட செலவினங் களையும் தள்ளுபடி செய்கின்றன. இது தவிர மாணவர்களுக்கான



கிரண் ஜெஹரா

*மாநாடு தலைவர்* PDG M *முருகானந்தம் மற்றும்* RID 3190 PDG K P *நாகேஷ்* PDRR *சுஜித்குமாரை கௌரவிக்கின்றனர்.*

புத்தகங்கள் மற்றும் எழுது பொருள்கள் செலவையும் ஏற்றுக் கொள்கின்றன.

ஒரு காலத்தில் ரயில் நிலையத்தில் மிட்டாய் விற்றுக்கொண்டிருந்த பார்வையற்ற K சுகுணா என்ற பெண், BA மற்றும் BEd பட்டம் பெற்ற படத்தை குமார் பகிர்ந்துகொண்டார். பார்வையற்ற அப்பெண்ணும் அவரது கணவரும் வேலையில்லாத நிலையில் குழந்தைகளை பராமரிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. இந்த நிலையில் ரயில் நிலையத்தில் மிட்டாய் விற்றுக்கொண்டிருந்ததையும் அவர்களின் மகன் மற்றும் மகள் வீட்டுப் பாடம் செய்து கொண்டி ருந்ததையும் குமார் குழுவினர் கண்டனர். சென்னையில் மஹிந்திரா சர்வதேச பள்ளியின் முதல்வர் நிர்மலா கிருஷ்ணனை சந்திக்க அவரின் அறக்கட்டளை உதவியது. நேர்காணலுக்குத்தான் வந்திருக்கிறோம் என்பது தெரியாத நிலையில் சுகுணா, அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்தார். ஒரே ஒரு பிரச்னை. அவரால் ஆங்கிலத்தில் பேச முடிய வில்லை. ஆனால், அந்த மொழியை கற்றுக்கொள்ள தயாராக இருந்தார்.

இன்று சுகுணா மஹிந்திரா சர்வதேச பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். மேலும் சென்னையில் உள்ள சத்யபாமா பல்கலைக்கழகத்தில் Phd படித்து வருகிறார். அவர் மற்றவர் களை ஊக்குவிக்கும் பேச்சாளராக வும் இருக்கிறார் என்று குமார் தெரி வித்தார். தனது பேச்சின் முடிவில் PDRR சுஜித்குமார் கூறுகையில், நான் சுகுணாவைப் போல பலரை சந்தித்திருக்கிறேன். அவர்களின் வாழ்க்கையிலும் என்னால் மாற்றத்தை கொண்டுவர முடிந்தது. அதற்கு காரணம் என் மீது ரோட்டரி வைத் திருந்த நம்பிக்கையும் மதிப்பும் தான். வாழ்க்கையில் எனது அணுகுமுறையை மாற்றிக்கொள்ள ரோட்டரி பயிற்சி அளித்தது. ரோட்டேரியன்கள் செயல் படுவதைப் பார்க்கும்போது நம்மிடம் மற்றவர்கள் மீது பரிவும், சுயநலம் இல்லாமல் கொடுக்கும் எண்ணமும் தானாகவே வளர்கிறது என்றார்.■

# இளம்பிள்ளை வாதம் இல்லாத பாகிஸ்தான்

V முத்துகுமரன்




V முத்துகுமரன்

*பாகிஸ்தான் போலியோப்ளஸ் குழு தலைவர் மற்றும் TRF அறங்காவலர் அஜீஸ் மேமன்.*

இந்த ஆண்டின் 320 நாட்களில் பாகிஸ்தானில் யாருக்கும் புதிதாக இளம்பிள்ளைவாதம் காணப்பட்டதாக எந்தப் பதிவுகளும் இல்லை. அடுத்த 45 நாட்களுக்கு நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம். ஒட்டுமொத்த ஆண்டிலும் யாருக்கும் புதிதாக இளம்பிள்ளைவாதம் வரா விட்டால் எங்கள் நாட்டை இளம் பிள்ளைவாதம் இல்லாத நாடாக அறிவிப்பதாக RI தலைவர் சேகர் மேத்தா எங்களுக்கு உறுதியளித் துள்ளார்'' என்றார் RID 3271, பாகிஸ்தானைச் சேர்ந்த TRF அறங்காவலர் அஜீஸ் மேமன். இவர் மஹாப்ஸ் சந்திப்பில் அறக்கட்டளைத் தலைவர் ஜான் ஜெர்ம் அவர்களின் பிரதிநிதியாக கலந்து கொண்டார். ஆனால், சிறிய காலகட்டத்துக்குப்பிறகு வைல்ட் போலியோவைரஸ் மீண்டும் வராமல் தடுக்கவேண்டுமென்றால், கண்காணிப்பு முக்கியம். நைஜீரியா இளம்பிள்ளைவாதம் இல்லாத இடமாக அறிவிக்கப்பட்டபோதும், 18 மாத இடைவெளிக்குப்பிறகு சிலருக்கு இளம்பிள்ளைவாதம் வந்தது.

TRF கருத்தரங்கில் பேசிய அவர், நாங்கள் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில், எங்களுக்கு அருகில் உள்ள ஆஃப்கானிஸ்தானுடன் நாங்கள் 2,400 கிமீ பாதுகாப்பு இடைவெளிகள் உள்ள எல்லையைப் பகிர்ந்துகொள்கிறோம். அங்கு இதுவரை இரண்டு பேருக்கு இளம்பிள்ளைவாதம் வந்துள்ளது. எங்கள் வாஜிரிஸ்தான் பகுதியில் எல்லையின் இருபுறங்களிலும் குடும்பங்களைக் கொண்ட மக்கள் அடிக்கடி இங்கும் அங்கும் சென்று வருவதால், எல்லை தாண்டிய இளம்பிள்ளைவாத நோய்த்தொற்று ஆபத்து உள்ளது என்றார்.

பாகிஸ்தான் அரசாங்கம் கூடுதல் எச்சரிக்கையுடன் உள்ளது, இளம்பிள்ளைவாதத்துக்கு எதிராகத் தடுப்பு மருந்து பெற்றவர்களை மட்டும் தான் ஆஃப்கானிஸ்தான் எல்லையைத் தாண்டி இங்கு வர அனுமதிக்கிறது என்றார் அவர்.

இளம்பிள்ளைவாத அகற்றலுக்கான தேசியப் பணிப் படைக்குத் தலைமை தாங்கும் பாகிஸ்தான் PM இம்ரான் கானைச் சமீபத்தில் சந்தித்ததை மேமன் நினைவுகூர்ந்தார், போலியோப்ளஸ் திட்டத்துக்குக் கவனம் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, இந்தப் பகுதியில் உள்ள நான்கு CMகளுடனும் தான் தொடர்பில் இருப்பதாகச் சொன்னார்.

### ஆஃப்கானிஸ்தான் துன்பங்கள்

ஆஃப்கானிஸ்தான் நல அமைச்சர் டாக்டர் கலந்தர் எபாட் அவர்களுடன் உரையாடிய இவர், அந்த நாட்டில் தடுப்பு மருந்துகளுக்குப் பற்றாக்குறை இல்லை என்று தெரிந்துகொண்டார், ஆனால், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் மூடப்பட்டுள்ளதால், அவற்றை வழங்கும் வசதிகள் போதவில்லை. மேலும், மருத்துவ சேவை வழங்கச் செவிலியர்களோ மருத்துவர்களோ இல்லை. உலகம் இளம்பிள்ளைவாதத்தை முற்றிலும் நீக்க விரும்பினால், ஆஃப்கானிஸ்தான் தன்னுடைய நலப் பராமரிப்பு நெருக்கடியை வெல்வதற்கு உலகம் உதவவேண்டும் என்றார் மேமன்.

கோவிட் தாக்கிய போது, ரோட்டரி அறக்கட்டளை, உலகெங்கும் உள்ள சங்கங்களுக்கு நோய்ப்பரவலை எதிர்த்துப் போரிடுவதற்காக $46 மில்லியன் நல்கைகளை வழங்கியது; இளம்பிள்ளைவாதத்தைத் தடுக்கும் குளிர்ச் சங்கிலி வசதிகள் கோவிடுக்கு எதிராகப் போரிடத் திருப்பிவிடப் பட்டன; ரோட்டரியன்கள் உணவுப் பொட்டலங்கள், மளிகைச் சாமான் களை வழங்கினார்கள்; தங்கள்

வாழ்வாதாரத்தை இழந்த அன்றாடக் கூலித் தொழிலாளர்களை நாம் அணுகி உதவினோம்.

2020–21ல் $410 மில்லியன் இலக்குக்குப் பதில் $441 மில்லியன் திரட்டியது TRF. இதில் இந்தியாவின் பங்களிப்பு $23 மில்லியன். இந்தியா தன் இலக்காகிய $30 மில்லியனைச் சாதிக்கும்'' என்றார் அவர்.

ரோட்டரியில் சேர்வதற்கு முன்னர் தான் ஏழைச் சிறுமிகள், குழந்தைகளுடைய பள்ளிக் கட்டணங்களைச் செலுத்திக்கொண்டிருந்ததாக RI இயக்குநர் A S வெங்கடேஷ் நினைவு கூர்ந்தார். ஆனால், நான் ரோட்டரியன் ஆனபிறகு, பள்ளி அல்லது வகுப்பறை கட்டுவது, ஏன், மருந்தகம் அமைப்பது அல்லது மருத்துவமனை திறப்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்.

**2020–21ல் TRF (உலகப் புள்ளிவிவரங்கள்)**

- *மாவட்ட நல்கைகள் – 467; நிதி* $31.1 *மில்லியன்*
- *பேரிடர் எதிர்வினை நல்கைகள் – 55; நிதி* $3.1 *மில்லியன்*
- *பன்னாட்டு நல்கைகள் – 2,066; நிதி* $143 *மில்லியன்*
- *அறக்கட்டளை உலகம்முழுவதும் திட்டங்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகளுக்காக* $5.5 *பில்லியனுக்குமேல் திரட்டி முதலீடு செய்துள்ளது.*
- 2025*க்குள்* $2.025 *பில்லியன் நன்கொடை நிறுவல் பணமுடிப்பு ஒன்று உருவாக்கப்படும், இது அளவிலும் தாக்கத்திலும் இன்னும் பெரிய திட்டங்களைச் செய்ய ரோட்டரிக்கு உதவும்.*

ரோட்டரியின் தொண்டுப் பிரிவாகிய TRFன் பணிகளை எண்ணி நாம் பெருமைப்படவேண்டும்'' என்றார் அவர்.

நோய்வாய்ப்பட்டவர்களும் ஏழைகளும் அவர்களுடைய கண்ணீரை நாம் துடைக்கவேண்டும் என்று காத்திருப்பதால், முன்பு எப்போதையும் விட இப்போது உலகுக்கு ரோட்டரி தேவை என்றார்.■

# இன்னும் மேம்பட்ட ஓர் உலகத்துக்காக TRFக்குத் தாராளமாக வழங்குங்கள்

ரோட்டரி செய்திக் குழு

நோய்ப்பரவலால் பல சவால்கள் வந்திருந்தாலும், உலகெங்குமுள்ள மாவட்ட ஆளுநர்கள் மெய்நிகர் நிகழ்ச்சிகளின் மூலம் பணியாற்றிச் சென்ற ஆண்டு $441 மில்லியன் திரட்டினார்கள். இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடம், கடினமான நேரங்களில் கூடுதலாக வழங்க ரோட்டரியன்கள் விரும்புகிறார்கள்'' என்றார் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி.

TRFக்கு வழங்குதலில் மற்ற மாவட்டங்களைத் தாண்டி நின்ற RID 3141ஐப் பாராட்டிய அவர், RID 3141 முதல் இடத்தில் இருப்பதுடன், கூடுதலாக வழங்கிய முதல் 50 RI மாவட்டங்களில் வேறு ஆறு மாவட்டங்களும் (3131, 3232, 3190, 3201, 3060 மற்றும் 3011) உள்ளன'' என்றார். வழங்குதலில் USக்கு அடுத்தபடியாக 2வது இடத்தில் இந்தியா உள்ளது, என்றார். DGEக்களுக்கு நாம் இளம் பிள்ளைவாதத்தின் முடிவின் தொடக்கத்தைப் பார்க்கத் தொடங்கலாம்'' என்று நினைவூட்டிய அவர், நம் ஆண்டு மற்றும் இளம்பிள்ளைவாத அகற்றல் நிதிகளுக்குத் தாராளமாக வழங்குங்கள்.

இன்னும் மேம்பட்ட ஓர் உலகுக்காக நன்கொடையளிக்கும் ரோட்டரியன்களுடைய தன்னலமற்ற செயல்பாட்டுக்காக'' வஹன்வதி நன்றி தெரிவித்தார், சாரிட்டி நேவிகேட்டர் TRFக்குத் தொடர்ந்து வழங்கி வரும் 4 நட்சத்திர மதிப்பீட்டுக்கு அவர்கள் தான் காரணம் என்றார். TRF சமூகத்திட்டங்களுக்கு நிதியளித்தது, சில நேரங்களில் WHO, UNICEF, நோய்க் கட்டுப்பாட்டுக்கான மையங்கள், US மற்றும் பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து நிதியளித்தது. ஒரு நாளின் எந்த நேரத்திலும், ஆயிரக்கணக்கான ரோட்டரியன்கள் தங்கள் நேரத்தையும் உழைப்பையும் தன்னார்வத்துடன் அளித்து, TRFக்கு வழங்கப்படும் அனைத்துப் பங்களிப்புகளும் அறிவோடும் பலப்பல வாழ்க்கைகளை மாற்றும் தரமான ரோட்டரி திட்டங்களிலும் செலவழிக்கப்படுவதை உறுதி செய்கிறார்கள்'' என்றார் அவர்.■



TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி.*

# விசாகப்பட்டினத்தில் அடுத்த ரோட்டரி மண்டல சந்திப்பு

ரோட்டரி செய்திக் குழு




*விசாகா விஸ்டா அமைப்பாளர் RID மகேஷ் கோட்பாகி, அமீதா, PDG Ch கிஷோர் குமார், அவர் மனைவி ஷோபா மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் தெலுங்கு பாடலொன்றுக்கு நடனமாடுகின்றனர்.*

மகிழ்ச்சியும் பரபரப்பும் நிறைந்த மஹாப்ஸ் 21 சந்திப்பின் நினைவுகளில் மூழ்கியிருக்கிறீர்களா? அப்படியானால், இதே போன்ற கூடுதல் மகிழ்ச்சியின் மூலம் உங்கள் ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள், துறைமுக நகரமான விசாகப்பட்டினத்தில் டிசம்பர் 9–11ல் நடைபெறவிருக்கும் பிராந்தியச் சந்திப்பாகிய விசாகா விஸ்டா-வுக்கு வாருங்கள், நீங்கள் ஒரு போதும் மறக்காதபடி மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள் என்று PDG Ch கிஷோர் குமார் தலைமையில் நடைபெறவிருக்கும் அடுத்த சந்திப்பை அறிவிக்கிறார் RID மகேஷ் கோட்பாகி. நாங்கள் விசாகப்பட்டினத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம், பல ரோட்டரியன்கள் இந்த நகரத்தைப் பார்த்ததில்லை, ஆனால், இது வளமான பண்பாட்டைக் கொண்டது, பார்க்கவும் கற்றுக்கொள்ளவும் பல ஆர்வமூட்டும் இடங்களைக் கொண்டது என்கிறார் அவர்.

இதுபற்றிப் பேசிய PDG குமாரும் துணைவர் ஷோபா-வும் ஆந்திரப் பிரதேசத்தின் வணிகத் தலைநகரமாகிய இந்த ஊருக்கு ரோட்டரியன்களை அழைத்தார்கள், இங்குள்ள புகழ் பெற்ற கோயில்கள், அழகான கடற்கரைகள், தனித்துவமான நீர் மூழ்கிக் கப்பல் மற்றும் விமான அருங்காட்சியகங்கள் மற்றும் இந்தத் துறைமுக நகரத்துக்கு அருகில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அழகிய கிராமமாகிய பீமுனிப் பட்டனம் என்கிற டச்சு முன்னாள் குடியிருப்பைப் பார்க்க அழைப்பு விடுத்தார்கள்.

விசாகப்பட்டினம் சாலையால் மிக நன்றாக இணைக்கப்பட்டிருப்பதால், இரு திசைகளிலும் கொல்கத்தா அல்லது சென்னையை எளிதில் சென்றடையலாம்'' என்றார். சமீபத்தில், இங்கு இயங்கும் கிழக்குக் கடற்படைக் கட்டளைக் குழு நடத்திய ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சியில், உலகின் 62 கடற்படைகள் பங்கேற்றன. அழகிய கடற்கரைகள், சிறந்து விளங்கும் விருந்தோம்பல் தொழில்துறையைக் கொண்ட இந்தத் துறைமுக நகரம் ஒரு மிகச் சிறந்த விடுமுறைத் தலமும்கூட. சுற்றுலாப் பயணிகளுக்குப் பல சேவைகளை வழங்கும் விடுதிகள் இங்கு உண்டு. ஆன்மிக விருப்பம் கொண்டவர்கள் சிம்ஹாசலம், அன்னவரம் கோயில்களைப் பார்க்கலாம்.

RI தலைவர் சேகர் மேத்தா விசாகா விஸ்டா சின்னத்தை வெளியிட்டார், அதன் இணையத் தளம், இணையப்பதிவை வழங்கும் URL அறிமுகப்படுத்தினார். பண்பாட்டு வேட்டி, அங்கவஸ்திரம் மற்றும் மடிப்புகளைக் கொண்ட சேலைகளை அணிந்த நிகழ்ச்சிக் குழு உறுப்பினர்கள் கோட்பாகி மற்றும் கிஷோர் குமார் தலைமையில், புகழ் பெற்ற தெலுங்குப் பாடல் ஒன்றுக்கு நடனம் ஆடினார்கள்.

## Visakha Vista 22 Committee

RI President Shekhar Mehta (Advisor)

RI Director Mahesh Kotbagi (Convenor)

RI Director AS Venkatesh (Co-Convenor)

PDG Kishor Kumar (Chairman)

PRID Kamal Sanghvi (Counsellor)

PDG Ravi Vadlamani (Counsellor)

புகைப்படம்: K விஸ்வநாதன்.

# DGEக்களின் துணைவியருக்கு பயிற்சி

கிரண் ஜெஹரா

“பயணம் இப்போது தான் தொடங்கியுள்ளது, ரோட்டரியனுடைய துணைவர் என்ற முறையில் நீங்கள் நிறைய விஷயங்களைச் செய்ய வேண்டியிருக்கும்” என்றார் வினிதா. RID A S வெங்கடேஷின் துணைவியாரான இவர், மஹாப்ஸ் 21 சந்திப்பில் துணைவர்கள் நிகழ்ச்சியில் இவ்வாறு பேசினார். தங்களைப்போல் உலகெங்கும் உள்ளவர்களைச் சந்திக்கும் எந்த வாய்ப்பையும் தவறவிடவேண்டாம் என்று அவர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். இது வாழ்க்கையில் ஒருமுறை கிடைக்கிற வாய்ப்பு, பலவிதமான மக்களுடைய பண்பாடுகள், பாரம்பரியங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு” என்றார் RID மகேஷ் கோட்பாகியின் துணைவர் அமிதா. ரோட்டரி உங்களுக்கு வாய்ப்புகளைத் திறக்கிறது. ஒர்லாண்டோ, USல் அனைத்து IA நிகழ்ச்சிகளிலும் நீங்கள் கண்டிப்பாகக் கலந்துகொள்ளுங்கள்.

DGEக்களுடைய துணைவர்கள், தலைவருடைய கருப்பொருள் மற்றும் முக்கியத்துவங்கள், தங்கள் பங்கு, பன்னாட்டு ஒன்று கூடுகையில் (IA) கற்றுக்கொண்ட பாடங்களைப் பயன்படுத்தித் தங்கள் மாவட்டக் கருத்தரங்குக்கு அவர்கள் எப்படி மதிப்பைக் கூட்டலாம் போன்றவற்றைப் புரிந்து கொள்வதற்காக நாள்முழுவதும் ஊடாடலில், செயல்பாடுகளில் ஈடு பட்டார்கள். IAக்கான மிகச் சிறந்த முன் தயாரிப்பு, வலுவான, நேர் விதமான சுய பிம்பம் தான்” என்றார் PDG T N சுப்ரமணியன் (RID 3141)துணைவர் வித்யா. DGEக்களுடைய கூட்டாளர்கள் குறிப்பேட்டைப் படிக்கும் படி அவர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். ஆங்கிலத்தில் உரையாடச் சிரமப் படுகிறவர்கள் உங்கள் குழுவில் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளக் கூடிய, ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய ஒருவரிடம் உதவி பெறலாம் என்று வித்யா வலியுறுத்தினார். குறைவான பொருட்களுடன் பயணம் செய்வது, சீர்ப்படுத்தல் மற்றும் சமூக ஒழுங்குமுறை பற்றிய சில மதிப்பு மிக்க உதவிக் குறிப்புகளையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

170 நாடுகளைச் சேர்ந்த 540 DGEக்கள், அவர்களுடைய துணை வர்களைச் சந்தித்து உரையாடும் மிகச் சிறந்த வாய்ப்பாக இது அமைகிற அதே நேரத்தில், உங்கள் மாவட்டத் திட்டங்களைப்பற்றி அவர்களிடம் பேசுகிற மிகச் சிறந்த வாய்ப்பும் உங்களுக்கு இருக்கும்.” என்றார் PRID மனோஜ் தேசாயின் துணைவர் ஷர்மிஷ்தா. RID பரத் பாண்ட்யா அவர்களுடைய மனைவி மாதவி, உங்கள் நலனைக் கவனித்துக் கொண்டபடி உங்களுடைய மாவட்டச் செயல்பாடுகள் அனைத்திலும் செயலூக்கத்துடன் பங்கேற்பதற்கு உங்களுக்குப் பத்துக் கைகள் தேவைப்படும் என்றார். DGN துணைவராகத் தன்னுடைய அனுபவத்தை அவர் நினைவு கூர்ந்தார், வெவ்வேறு RI மற்றும் TRF நிகழ்ச்சிகளைப்பற்றிப் படிக்கும்படி அவர் துணைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

PDG ரவி வட்டலமணியின் மனைவி ராஜி, PDG சமீர் ஹரியானியின் மனைவி ரூபா, PDG சந்தீப் நாரங்கின் மனைவி அனு நாரங் மற்றும் PDG ஜான் டேனியலின் மனைவி மீராவும் துணைவர்களுக்குச் சமூக ஒழுங்குமுறை, பண்பாட்டு இயல்புகள், பாரம்பரியங்கள், திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்பற்றி மதிப்புமிக்க உதவிக் குறிப்புகளை வழங்கினார்கள். ■



*வினிதா வெங்கடேஷ், ஷர்மிஷ்தா தேசாய், மாதவி பாண்ட்யா மற்றும் அமிதா கோட்பாகி DGEக்களின் துணைவியருடன்.*

கிரண் ஜெஹரா

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய RC சென்னை நார்த்

ரஷீதா பகத்

கடந்த டிசம்பர் மாதம் வரலாறு காணாத பருவமழையால் சென்னை மாநகரம் நிலை குலைந்த போது, ஆயிரக்கணக்கான குடும்பத்தினர் போக்கிடம் இல்லாமல் தவித்தனர். பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தபோது நாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இந்தியாவுக்கு வெளியிலிருந்தும் ரோட்டேரியன்கள் உணவு மற்றும் ரேஷன் பொருள்கள் மற்றும் நிவாரண உதவிகளை பாதிக்கப்பட்ட குடும்பத் தினர்க்கு தாராளமாக உதவியுள்ளனர் என்றார் PDG G ஒளிவண்ணன்.

தமிழ்நாடு அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் உதவி கேட்டு வந்தபோது, சென்னை நார்த் ரோட்டரி சங்க அறக் கட்டளை விரைந்து செயல்பட முன் வந்தது. அடுத்த ஒரு வாரத் தில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ரூ.10 லட்சம் நிதி திரட்டப்பட்டது. அவரது பிரசுரம் ஒன்றை தமிழக முதல்வர் M K ஸ்டாலின் வெளியிட்ட போது இது நடந்தது. நாங்கள் முதல்வரின் அறையிலிருந்து வெளியே வந்தபோது அதிகாரிகள் சிலர் எங்களைச் சூழ்ந்து கொண்டு, வெள்ள நிலைமையைக் கையாள்வதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் அரசு திணறி வருகிறது. ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் என்ற முறையில் உங்களால் உதவ முடியுமா? என்று கேட்டதாக கூறினார் ஒளிவண்ணன்.

அவர் காரில் ஏறி உட்கார்ந்ததும், அவருக்கு உள்ளூர் MLA ஒருவரிடமிருந்து அலைபேசி அழைப்பு வந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவி வழங்குவதில் அரசுடன் இணைந்து ரோட்டரி செயல்பட வேண்டும் என்று MLA கேட்டுக்கொண்டார். RI தலைவர் சேகர் மேத்தா தொடர்ந்து கூறிவருவது போல இப்போது மத்திய மற்றும் மாநில அரசுகள் சமூக சேவைக்கு ரோட்டரியின் உதவி கேட்டு வருகின்றன. நாம் எப்போதும் அரசுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

தொடக்கத்தில் எந்தவித ஆதரவும் இல்லாமல் நிராதரவாக இருந்த மக்களுக்கு 5,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து அரிசி, கோதுமை, ரவை, சர்க்கரை, சமையல் எண்ணெய், தேயிலை உள்ளிட்ட ரேஷன் பொருள்கள் அடங்கிய 1,700 பொதிகள் 8 வெவ்வேறு பகுதிகளில் விநியோகிக்கப்பட்டன. திட்டத்துக்கான மொத்த மதிப்பு ரூ.10 லட்சம், அதாவது நாங்கள் சேகரித்த பணம். ரோட்டேரியன் அல்லாதவர்களும் இத்திட்டத்திற்கு கணிசமாக நிதியுதவி அளித்தனர்.

எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் வழக்கம்போல திட்டச் செயல்பாடு களை மேற்பார்வையிட்டதுடன், வெள்ள நீரால் சூழப்பட்ட பகுதி களுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணப் பொருள்கள் அடங்கிய பொதிகள் கிடைப்பதை உறுதிசெய்தனர். சங்கத்தின் தலைவர் ஜான் பிரெடரிக், செயலர் ஜூலியன், ரோட்டேரியன்கள் ஷபீர், பானுமூர்த்தி, துரைப்பாண்டியன், வெங்கடேஷ், ஜோசப், மேரி அமுதா, ஜெயப்பிரகாஷ், குமார் ராஜேந்திரன் மற்றும் சிலர் பல்வேறு விநியோக



*PDG G ஒளிவன்னன் மற்றும் சங்க தலைவர் ஜான் ஃப்ரெட்ரிக் வெள்ள நிவாரண பொருட்களை பாதிக்கப்பட்டோருக்கு வழங்குகின்றனர்.*

மையங்களில் இருந்து கொண்டு நிவாரண உதவிகளை வழங்கினர்.

இதுபோன்ற இயற்கை இடர் பாடுகளின் போது உள்ளூர் சமூகத்தினருக்காக அயராது உழைத்து வரும் தன்னார்வத் தொண்டர்கள் விக்ரம், ஹேமாவதி மற்றும் அசோக் ஆகியோர் பயனாளிகளைக் கண்டறிய சென்னை நார்த் ரோட்டரிக்கு பெரிதும் உதவினர். இரண்டு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பரந்தாமன் மற்றும் டாக்டர் எழிலன் (இவர் ரோட்டேரியன் மட்டுமல்ல அறக்கட்டளையின் முன்னாள் உறுப்பினர்) தங்கள் தொகுதியில் தகுதியானவர்களை நிவாரண உதவிகள் சென்றடைய ரோட்டரியின் உதவியை நாடினர்.

இந்த திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான நேரத்தில் நிவாரணம் வழங்கப்பட்டது. ரோட்டரி உறுப்பினர்களின் தன்னார்வ சேவைகள் உள்ளூர் ஊடகங்களில் செய்திகளாக வெளிவந்தன. மேலும் இது பொதுமக்களிடையே ரோட்டரி மீதான நல்லெண்ணம் மேம்படவும் உதவியது என்றார் ஒளிவண்ணன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு மேலும் உதவி செய்ய முடியுமா? என்று கேட்டதற்கு, இப்போது நிலைமை பரவாயில்லை. ஆனாலும், எங்களிடம் கொஞ்சம் பணம் உள்ளது. மீண்டும் அரசு எங்களுடன் இணைந்து செயல்பட விரும்பினால் உதவி செய்ய தயாராக இருக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

### கோவிட் காலத்தில் ரூ.150 கோடியில் திட்டம்

கோவிட் தொற்றின் மோசமான காலத்தில் சென்னை நார்த் ரோட்டரி சங்கம் முக்கியப் பங்காற்றியது. கோவிட் இரண்டாவது அலையின் போது நாடு முழுவதும் ஆக்சிஜன் பற்றாக்குறை நிலவியது, நாங்கள், அரசு மருத்துவமனை மற்றும் அறக்கட்டளை மருத்துவமனைகளுக்கு ரூ.150 கோடி மதிப்புக்கு ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் சிலிண்டர்களை விநியோகம் செய்துள்ளோம்.

இந்தியாவில் ACT என்ற பதிவு செய்யப்பட்ட நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் நெருக்கடியான பேரிடர் காலங்களில் உதவி செய்து வருகிறது. அந்த நிறுவனத்திற்கு உலகம் முழுவதிலிருந்தும் நன்கொடைகள் வருகின்றன. இந்தியாவில் கோவிட் தொற்று காலத்தில் ஆக்சிஜன் சிலிண்டர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்ட போது ரூ.150 கோடிக்கு ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் சிலிண்டர்களை கொள்முதல் செய்தனர். ஆனால், பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு இந்த உபகரணங்களை கொண்டு சேர்ப்பதற்கான வழி வகைகள் அவர்களுக்குத் தெரியவில்லை. அமெரிக்காவில் உள்ள முக்கிய நபர்களில் ஒருவர் எங்கள் சங்கத்தின் கடந்த தலைவரின் நெருங்கிய நண்பர். அவர் தொடர்பு கொண்ட போது தலைவர் என்னிடம் பேசினார். அவர்கள் அந்த உபகரணங்கள் நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளைச் சென்றடைய வேண்டும் என்று விரும்பினர். உடனடியாக நான் RI தலைவர் மேத்தாவிடம் பேசினேன். இதையடுத்து அந்த உபகரணங்களை கொண்டு செல்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டது. மொத்தம் வழங்கப்பட்ட ஆக்சிஜன் செறிவூட்டி கருவிகள் மற்றும் சிலிண்டர்களில் ரூ.23 கோடி மதிப்பிலான கருவிகள் தமிழகத்துக்கு கிடைத்தது என்று விவரித்தார் ஒளிவண்ணன்.■

## புனே அருகில் பழங்குடியினத்தவருக்கான மருத்துவ முகாம்

ரோட்டரி செய்திக் குழு



புனே அருகில் பன்ஷெட் அணைக்கட்டின் உப்பங்கழிக் கரைகளில் உள்ள தாவ் என்ற தொலைதூரக் கிராமத்தில் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி, RID 3131 நடத்திய மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை முகாமில் 180 பழங் குடியினத்தவர் பலன் பெற்றார்கள். சங்க உறுப்பினர்கள் Dr மாதவ் கன்காவாலெ, Dr ராஜேஷ் பவார் முகாமை வழிநடத்தினார்கள். வழக்கமான பரிசோதனைகளுடன் மேமோகிராஃபி மற்றும் Pap ஸ்மியர் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. பார்வைக் குறைபாடுகளைக் கொண்ட 80 மக்களுக்குச் சங்க உறுப்பினர் ப்ரிஜ் சேத்தி ஆதரித்த மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. முகாமுக்குப்பின், 21 பேருக்குக் கண் புரை சிகிச்சை அளிக்கப்பட்டது. கிட்டத்தட்ட எல்லாருக்கும் வைட்டமின் குறைபாடு இருந்தது; 80 மக்கள் ரத்த சோகை யுடன் இருந்தார்கள். நாங்கள் பல வைட்டமின் டானிக்குகள், மாத்திரை களையும் வழங்கினோம்'' என்கிறார் சங்கத்தலைவர் கிரண் ராவ்.■





## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 37,049 |
| Rotaract clubs | : | 10,778 |
| Interact clubs | : | 16,872 |
| RCCs | : | 11,917 |
| Rotary members | : | 1,201,314 |
| Rotaract members | : | 232,273 |
| Interact members | : | 388,102 |

*As on December 16, 2021*

## Membership Summary

As on December 1, 2021

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 132 | 6,152 | 7.53 | 46 | 52 | 238 |
| 2982 | 76 | 3,563 | 7.33 | 47 | 98 | 73 |
| 3000 | 137 | 5,455 | 9.09 | 92 | 259 | 213 |
| 3011 | 125 | 4,654 | 26.99 | 72 | 118 | 36 |
| 3012 | 137 | 4,135 | 26.96 | 65 | 77 | 61 |
| 3020 | 77 | 4,772 | 7.33 | 30 | 166 | 350 |
| 3030 | 96 | 5,162 | 15.19 | 118 | 245 | 359 |
| 3040 | 102 | 2,604 | 14.52 | 54 | 81 | 196 |
| 3053 | 71 | 2,831 | 18.47 | 34 | 49 | 118 |
| 3054 | 184 | 7,469 | 20.34 | 104 | 177 | 563 |
| 3060 | 110 | 5,165 | 15.00 | 62 | 71 | 146 |
| 3070 | 124 | 3,305 | 15.67 | 46 | 36 | 59 |
| 3080 | 98 | 4,161 | 13.31 | 136 | 159 | 115 |
| 3090 | 90 | 2,313 | 5.58 | 39 | 72 | 123 |
| 3100 | 106 | 2,395 | 11.15 | 10 | 21 | 146 |
| 3110 | 137 | 3,739 | 11.53 | 14 | 17 | 106 |
| 3120 | 90 | 3,671 | 16.34 | 62 | 32 | 55 |
| 3131 | 140 | 5,566 | 23.75 | 109 | 232 | 131 |
| 3132 | 90 | 3,618 | 10.95 | 31 | 122 | 166 |
| 3141 | 117 | 6,463 | 26.95 | 137 | 184 | 102 |
| 3142 | 102 | 3,798 | 20.88 | 79 | 143 | 80 |
| 3150 | 115 | 4,311 | 13.55 | 76 | 138 | 118 |
| 3160 | 78 | 2,640 | 8.79 | 29 | 20 | 82 |
| 3170 | 139 | 6,335 | 14.87 | 83 | 241 | 169 |
| 3181 | 87 | 3,510 | 8.80 | 33 | 194 | 115 |
| 3182 | 85 | 3,500 | 9.54 | 42 | 124 | 104 |
| 3190 | 161 | 6,752 | 18.45 | 159 | 206 | 70 |
| 3201 | 153 | 6,022 | 9.45 | 105 | 93 | 66 |
| 3203 | 93 | 4,796 | 7.96 | 74 | 233 | 36 |
| 3204 | 62 | 2,071 | 6.37 | 21 | 24 | 13 |
| 3211 | 146 | 4,870 | 7.82 | 7 | 24 | 133 |
| 3212 | 143 | 5,284 | 12.87 | 75 | 204 | 153 |
| 3231 | 99 | 3,760 | 8.46 | 28 | 81 | 419 |
| 3232 | 154 | 7,562 | 17.32 | 116 | 212 | 99 |
| 3240 | 102 | 3,576 | 15.94 | 62 | 405 | 216 |
| 3250 | 108 | 4,017 | 19.89 | 63 | 73 | 185 |
| 3261 | 92 | 3,237 | 18.13 | 15 | 24 | 44 |
| 3262 | 123 | 4,137 | 14.58 | 69 | 73 | 101 |
| 3291 | 168 | 4,272 | 23.08 | 133 | 95 | 647 |
| **India Total** | **4,449** | **171,643** | | **2,577** | **4,875** | **6,206** |
| 3220 | 76 | 2,391 | 16.39 | 88 | 131 | 75 |
| 3271 | 130 | 2,253 | 17.53 | 92 | 185 | 25 |
| 3272 | 161 | 1,961 | 17.13 | 70 | 22 | 47 |
| 3281 | 311 | 8,413 | 18.28 | 264 | 148 | 208 |
| 3282 | 179 | 3,991 | 11.55 | 197 | 47 | 47 |
| 3292 | 153 | 6,062 | 17.30 | 169 | 129 | 128 |
| **S Asia Total** | **5,459** | **196,714** | | **3,457** | **5,537** | **6,736** |

*Source: RI South Asia Office*

# 80ம் ஆண்டில் RC தார்வாட்

கிரண் ஜெஹரா

என் நெஞ்சுக்கு நெருக்கமான திட்டங்களில் உங்கள் சங்கம் பணிபுரிவதைக் கண்டு நான் மகிழ்கிறேன். பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதில், அவர்களுக்குக் கல்வி, வளங்கள், சேவைகள், வாய்ப்புகள் கிடைப்பதை உறுதிசெய்வதில், அதன் மூலம் செழிப்பாக வாழத் தேவையான கருவிகளை அவர்கள் பெறுவதில் நான் கவனம் செலுத்துகிறேன். இந்த கொண்டாட்டத்தில் பங்கேற்பது எனக்கு மகிழ்ச்சி'' என்றார் RI தலைவர் சேகர் மேத்தா. RI தார்வாட், RID 3170ன் 80வது பதிவுக் கொண்டாட்டங்களில் RI இயக்குநர் மகேஷ் கோட்பாகியுடன் பங்கேற்கும் போது அவர் இவ்வாறு கூறினார். தன்னுடைய மைல் கல் ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக, 26 பெண்களுடைய கல்வியை இந்தச் சங்கம் ஆதரிக்கிறது. அந்தப் பெண்களுடன் மேத்தா பேசினார். இந்தப் பெண்கள் உயர்நிலைக் கல்வியை நிறைவு செய்யும்வரை இந்தச் சங்கம் இவர்களுடைய பள்ளிக் கட்டணத்தைச் செலுத்தும், சீருடைகள், பள்ளிப் பைகள், காலணிகள், எழுது பொருள் பொதிகளை வழங்கும் என்றார் சங்கத் தலைவர் விஜயகுமார் கட்டிமணி.



*சங்கத்தின் 80ம் ஆண்டு விழாவில் RI தலைவர் சேகர் மேத்தா, RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி மற்றும் அவர் மனைவி அமீதா. DG கௌரிஷ் தௌண்ட், சங்க தலைவர் விஜய்குமார் கட்டிமணி மற்றும் PDG ரவி N தேஷ்பாண்டே ஆகியோரும் உள்ளனர்.*

60 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்துக்கு ஐந்து புதிய உறுப்பினர்களைக் கோட்பாகி அறிமுகப்படுத்தினார், மிகப் பெரிய நன்கொடையாளர்கள், TRFக்குத் தாராளமாக நன்கொடையளித்த பிறரைப் பெருமைப்படுத்தினார்.

1982லிருந்து இந்தச் சங்கம் நடத்தி வரும் பால் ஹாரிஸ் நினைவு ரோட்டரி ஆங்கில வழிப் பள்ளிக்கான ஒரு புதிய வளாகத்தைக் கட்டுவதற்காகக் கட்டிமணி 1 ஏக்கர் நிலத்தை நன்கொடையளித்தார். இந்தப் பள்ளியில் இப்போது 492 மாணவர்கள் பயில்கிறார்கள். இந்தச் சங்கம் இந்த ஆண்டின்போது அரசு உயர்நிலைத் தொடக்கப் பள்ளியை ஒரு மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றும்.

சரியான நேரத்தில் வழங்கப்பட்ட மதிப்பு மிக்க நிலப் பரிசு இது'' என்று சங்கத் தலைவருக்கு நன்றி தெரிவித்த பால் ஹாரிஸ் நினைவுப் பள்ளியின் தலைவர் PDG ரவி தேஷ்பாண்டே, நலிந்த குழந்தைகளுக்குத் தரமான கல்வியை வழங்கி, தனியார் பள்ளி மாணவர்களுக்கு இணையாக அவர்களை முன்னேற்றும் நம்பிக்கையுடன் நாங்கள் இந்தப் பள்ளியைத் தொடங்கினோம். இன்று எங்கள் பள்ளியில் அதி நவீன வகுப்பறைகள், தகுதி பெற்ற ஆசிரியர்கள், பிற ஊழியர்கள், மற்ற வசதிகள் உள்ளன. இது தார்வாடின் மிகச் சிறந்த பள்ளிகளில் ஒன்றாக உள்ளது, அனைவரும் இங்கு சேர விண்ணப்பிக்கலாம். எங்களுடைய மாணவர்களில் ஏழை மாணவர்களை வேறுபடுத்திக் கூற இயலாது. இந்தச் சாதனையை எண்ணி நாங்கள் பெருமைப்படுகிறோம்'' என்றார்.

DG கௌரிஷ் தௌண்ட் மனித குலத்துக்கு உதவும் இந்தச் சங்கத்தின் பல திட்டங்களைப் பாராட்டினார்.

RC பெங்களூரால் 1940ல் ஆதரிக்கப்பட்ட RC தார்வாட்தான் RID 3170ல் பதிவு செய்யப்பட்ட முதல் சங்கம், கர்நாடகத்தில் இரண்டாவது சங்கம். இந்தச் சங்கம் இதுவரை 11 ரோட்டரி, 12 இன்டராக்ட் சங்கங்களையும் ஒரு ப்ரோபஸ் சங்கத்தையும் ஆதரித்துள்ளது. இந்தச் சங்கத்தின் குறிப்பிட வேண்டிய திட்டங்களில் சில: தார்வாட் குடிமையியல் மருத்துவமனையில் நோயாளிகள் பிரிவு, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான ICU, குடிநீர்ச் சேமிப்புத் தொட்டி வசதி ஆகிய வற்றை அமைத்தது; நகராட்சி மருத்துவமனையில் தாய்மார்கள் பிரிவை மேம்படுத்தியது; தார்வாடிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுடுகாடுகளின் உள்கட்டமைப்பை விரிவாக்கியது; லௌர்டெஸ் மருத்துவமனைக்கு X-ray இயந்திரம் வழங்கியது; பள்ளிகளுக்கு ஆழ்துளைக் கிணறுகள், குடிநீர் வச திகள், அமர்பொருட்கள், கணினிகளை வழங்கியது.■

# மனிதநேயத்துடன் புற்றுநோயை எதிர்த்துப் போராடலாம்

ரஷீதா பகத்

மெட்ராஸ் மிட்டவுன் ரோட்டரி சங்கம், RID 3232 நடத்திவரும் ரோட்டரி புற்றுநோய் ஆராய்ச்சி அறக்கட்டளையில் அவரது தனிப்பட்ட ஈடுபாட்டை விவரிக்குமாறு நான் கேட்டுக்கொண்ட போது, அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது. மறைந்த ஹபிபுல்லா பாட்ஷா, கைலாஷ்மல் தூகர் போன்ற முக்கியப் பிரமுகர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தியது இத்திட்டம்.



1995ம் ஆண்டு கைலாஷ்மல் தூகர், தலைவராக இருந்தபோது தொடங்கப்பட்டது. அப்போது சங்க உறுப்பினரான Dr C S ராமச்சந்திரன், மாவட்ட ஆளுநராக இருந்தார்.

தற்போது நிர்வாக அறங் காவலராக இருக்கும் சங்கர் துரைசாமி, திட்டத்தின் செயல்பாடு களை விவரிக்கும் போது, இந்த அறக்கட்டளை புற்றுநோயாளிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரை செலவிடுகிறது. ஆனால், அக்கறை, ஈடுபாடு, தொடர்ச்சியா பின்தொடர்தலை சம்பந்தப்பட்ட வர்கள் நோயாளிக்கு வழங்கினால் இத்திட்டம் சிறப்பானதாக இருக்கும். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் சிகிச்சை பெறுவதற்கு நிதியுதவி அளிக்கும் நோக்கில்தான் இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டது. அதிக செலவு பிடிக்கும் சிகிச்சையை பெற விரும்புபவர்களுக்கு உதவுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டது. குறைந்த செலவிலான சிகிச்சை முறையை தேர்ந்தெடுப்பவர்களுக்கு, அதுவும் அரசு மருத்துவமனைகள் மற்றும் சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் மையத்தில் சிகிச்சை பெற விரும்புபவர்களுக்கே நாங்கள் உதவி செய்வோம். எங்களால் முடிந்தவரை மட்டுமே உதவி செய்வோம் என்றார் அவர்.

1990-களில் மருத்துவச் சிகிச்சைக்கு ஆகும் செலவு இப்போதுள்ளதை ஒப்பிடும்போது மிகக் குறைவு. கீமோ தெரபி சிகிச்சை என்றால் ரூ.50,000 மற்றும் அறுவைச்சிகிச்சை எனில் ரூ.1 லட்சமும் வழங்கப்பட்டது. அந்த நாளில் இது கணிசமான தொகை தான். பெரும்பாலும் அடையார் புற்று நோய் மையத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தன. இந்த அறக்கட்டளைக்கு சங்க உறுப்பினர்களே நிதி அளித்து வந்தனர். சங்கத்தின் முன்னாள் தலைவர் பாட்ஷா துடிப்பாகச் செயல்படுபவர். அவர் தனக்குள்ள தொடர்புகள் மூலம் அதிக

*இந்த திட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தது ரோட்டேரியன் அளிக்கும் நிதி அல்ல, புற்றுநோயாளிகள் மீது அவர்கள் காட்டும் அன்பு, அக்கறை, அவர்கள் சொந்த காலில் நிற்கவேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது, அவர்களுடன் நேரத்தை செலவிடுவது ஆகியவைதான்.*

*எனக்கு ஒரு வேலை கிடைத்து அதன் மூலம் சம்பாதிக்கத் தொடங்கினால், நானே மருந்து மாத்திரைக்கான ரூ.8,000-த்தை செலவிடுவேன். நீங்கள் எனக்கு பதிலாக வேறு யாருக்காவது உதவலாம் என்றார்.*

**ஜெனிபர்**
புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்.

நிதி சேர்த்துள்ளார். இந்த அறக் கட்டளையில் ரோட்டரி அல்லாத வர்களும் அறங்காவலர்களாக இருந்துள்ளனர். முதல் அறங் காவலராக இருந்தவர் அப்பல்லோ மருத்துவமனையின் தலைவர் Dr P C ரெட்டி. ஆறு அறங்காவலர் கள் மெட்ராஸ் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள். மற்ற ஐந்து பேர் ரோட்டேரியன் அல்லாதவர்கள். 2017-ஆம் ஆண்டில் இறக்கும் வரை ஹபிபுல்லா பாட்ஷா நிர்வாக அறங்காவலராக இருந்தார். இப்போது துரைசாமி அந்தப் பதவியை வகித்து வருகிறார்.

ஆரம்பத்தில் இந்த புற்று நோய் அறக்கட்டளை மருத்துவச் சிகிச்சைக்கு மட்டுமே நிதியுதவி அளித்து வந்தது. ஆனால், படிப்படியாக சிகிச்சைக்கு பிந்தைய ஊட்டச்சத்து உள்ளிட்ட வேறு சிலவற்றுக்கும் உதவி அளிக்கத் தொடங்கியது. இன்றுவரை சுமார் 700 புற்று நோயாளிகளுக்கு உதவி செய்து வந்துள்ளது.

முன்னர் இந்தோனேசியா மற்றும் மலேசியாவில் ரோட்டேரியனாக இருந்த துரைசாமி, 2013-ஆம் ஆண்டில் மெட்ராஸ் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். அவரும் அவரது மனைவியும், இந்தியாவுக்கு வெளியே இதே போன்ற திட்டங்களில் பணி புரிந்துள்ளனர். அறக்கட்டளை பணியிலும் ஆர்வத்துடன் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

பணத்தை தவிர அறங்காவலர்கள் மற்றும் ரோட்டேரியன்களின் தனிப்பட்ட ஈடுபாடு மற்றும் அக்கறை ஆகியவை இருந்தாலும் மற்ற மருத்துவ நிறுவனங்களிலிருந்து

## டாக்டர் சாந்தா என்னும் தேவதை

*சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய் சிகிச்சை மையத்தின் மறைந்த இயக்குநர் Dr V சாந்தா, புற்றுநோயாளிகளை கவனித்துக் கொண்ட விதமும், அவர் செலுத்திய அக்கறையையும் விவரிக்க வார்த்தைகளே இல்லை என்கிறார் சங்கர் துரைசாமி. புற்று நோயாளி களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் Dr சாந்தா. அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் குழந்தைகள் நலப் பிரிவு நிர்வாகியைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு சென்னை தவிர, வெளியூர்களிலிருந்து குறிப்பாக கிராமப்பகுதிகளிலிருந்து குழந்தைகள் புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தனர். அதைப் பார்த்தவுடன் எனக்கு குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்ற மன உறுதி ஏற்பட்டது. இங்குள்ள குழந்தைகள், தங்களுக்கு புற்றுநோய் இருப்பது தெரியாமலேயே அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்களைப் பராமரித்து வருபவர்கள் பெரும்பாலும் தாய் அல்லது பாட்டி என்பதால் அவர்களின் மனதில் கவலை இருந்தது. குழந்தைகளை ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்து வது பெரிய பணியாகும். அதனால் ரோட்டேரியன்கள் நிதி உதவியையும் தாண்டி ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவு செய்தனர். மெட்ராஸ் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த லலிதா என்பவர் கலை மற்றும் கைவினைப் பொருள்களில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர். அவர் வாரம் இருமுறை குழந்தைகளுக்கு ஓவியம் வரைதல் மற்றும் காகிதங்களை வைத்து பொம்மை செய்தல் உள்ளிட்டவற்றை அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். மேலும் ரோட்டேரியன்கள் புத்தகங்கள் மற்றும் இதர பொருள்களை வழங்கினர்.*

*2018 ஆம் ஆண்டில் ஒரு நாள் Dr சாந்தாவை சந்திக்க எங்களுக்கு அழைப்பு வந்தது. எளிமையாகவும் சிரித்த முகத்துடனும் அவர் இருந்தார். குழந்தைகளுக்கு சிகிச்சைக்குப் பின் தேவைப்படும் உணவு வகைகள் மற்றும் மருந்துகளை வழங்கும் எங்கள் பணியை அவர் பாராட்டினார். இரத்த புற்றுநோயால் அவதிப்படும் குழந்தைகளை பரிசோதிக்க வேண்டும். ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் சிகிச்சை மூலம் அவர்களை குணப்படுத்த 100 சதவீதம் வாய்ப்புள்ளது என்று Dr சாந்தா கூறினார்.*

*ரோட்டரிக்காக அவர் கூறிய அன்பான வார்த்தைகளை ரோட்டேரி யன்கள் மறக்கமாட்டார்கள். ரோட்டரி பெரிய நிறுவனம். இதை பெரிய அளவில் செய்வதற்கான வலிமையும் அர்ப்பணிப்பும் உள்ள நிறுவனம். ஆரம்ப சோதனைத் திட்டத்துக்கு பிறகு இதை நீங்கள் இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு செல்ல முடியும். இன்போஸிஸ் போன்ற பெரு நிறுவனங்களுடன் இதுபற்றி பேசி வந்தாலும், நான் ரோட்டரி இதில் ஈடுபடுவதையே விரும்புகிறேன். நீங்கள் சோதனை முறையில் இதில் வெற்றிகண்டால், அதை நாடு முழுவதும் எடுத்துச்செல்வீர்கள். போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் பணிகளை நான் பார்த்திருக்கிறேன். புற்றுநோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனையையும் ஒரு சவாலாக ஏற்று நீங்கள் செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றார். 2020ம் ஆண்டில் Dr சாந்தா மறைந்துவிட்டார். ஆனாலும், எங்கள் அறக்கட்டளை வாக்குறுதியை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளது.*

*“பெண் நலம்” என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் நாங்கள் இணைந்து செயல்பட்டு வருகிறோம். அவர்களிடம் மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி உள்ளிட்ட பரிசே ாதனை வசதிகள் கொண்ட நடமாடும் வாகனம் உள்ளது. எங்களின் ரோட்டரி மாவட்டமும் (3232) இதேபோன்ற வசதிகள் கொண்ட வாகனத்தை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. எங்கள் DGE Dr நந்தகுமார், இதற்கான திட்டத்தை தயாரித்து வருகிறார். அதில் எங்கள் சங்கமும் இணைந்து செயல்பட உள்ளது. புற்றுநோய் கண்டறிதல் மட்டுமல்ல, தொடர் சிகிச்சைக்கும் நாங்கள் தயாராகி வருகிறோம் என்றார் துரைசாமி.*

*இந்தத் திட்டம் இப்போது நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. அறக்கட்டளைக்கு ரூ.48 லட்சம் தொகுப்பு நிதி உள்ளது. ஆனால், வட்டி விகிதம் சரிந்து வருவதால் அறங்காவலர்கள் நிதி திரட்ட சிரமப்படுகிறார்கள்.*

இது எந்த வகையில் வேறுபடுகிறது என்று விளக்கமுடியுமா? என்று நான் கேட்டேன்.

சையத் என்னும் 17 வயது சிறுவனுக்கு நான்காம் நிலை எலும்பு புற்றுநோய் இருந்ததை விவரித்தார். நாங்கள் எங்களால் முடிந்த சிகிச்சை களைச் செய்துவிட்டோம். இனி எங்களை மீறிய சக்திதான் அவனை காப்பாற்ற வேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். சையத் தந்தையை இழந்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவன். 2018இல் அவனை சந்தித்தேன். நான்கு ஆண்டுகளாக புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறான். அந்த இளைஞன் சிகிச்சை பெற்று வரும் புற்றுநோய் வார்டை உரங்கள் தயாரிக்கும் தொழில் செய்துவரும் துரைசாமி நிர்வகித்து வந்தார். அவரிடம், அங்கிள், அவருக்கு செய்யவேண்டிய சிகிச்சை கள் முடிந்துவிட்டன. இதற்கு மேல் எங்களால் எதுவும் செய்ய முடியாது. ஆனால், அந்த இளைஞனுக்கு ஆலோசனை செய்து உதவமுடியுமா? என்றனர். அந்த நேரத்தில் நான் கவுன்சிலிங் செய்ய ஆரம்பித்தேன். அவன் மோட்டார் சைக்கிளில் என்னை சந்திக்க வருவான். அவன் மகிழ்ச்சியாகவே காணப்பட்டான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ‘எனக்கு வலி இருக்கிறது. ஆனால், அதை சமாளித்து வருகிறேன்’ என்று அந்த இளைஞன் சொன்னான்.

தந்தை 6 மாதங்களுக்கு முன் இறந்துவிட்டார். அடுத்த ஆண்டு சகோதரிக்கு திருமணம் நடக்க இருக்கிறது. நான் ஏதாவது சம்பாதித்து அவளுக்குப் பணம் கொடுக்க விரும்புகிறேன். உங்களால் எனக்கு ஏதாவது ஒரு வேலை வாங்கித் தரமுடியுமா? என்று கேட்டான். அவன் அழகாக பேசினான். நான் உடனே, உனக்கு ஒரு மடிக் கணினி தருகிறேன். நான் சொல்லும் வேலையை அதில் எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லித் தருகிறேன். நீ வீட்டிலிருந்தபடியே வேலை செய்யலாம். உனக்கு மாதம் ரூ.10,000 சம்பளம் தருகிறேன் என்றேன். அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. துரைசாமி ஒருநாள் அந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்று அந்த இளைஞனின் தாய் மற்றும் சகோதரியை சந்தித்தார். அடுத்த வாரம் மீண்டும் வருவதாகக் கூறிச் சென்றார். ஆனால், துரதிருஷ்டவசமாக அடுத்த இரண்டு வாரங்களில் சையத்தின் உடல்நிலை மோசமடைந்து உயிரிழந்து விட்டான். கண்களில் வழிந்துவரும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் அவர் மேலும் கூறுகையில், நான் அந்த இளைஞனை மகிழ்ச்சி அடையச் செய்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. எங்கள் புற்றுநோய் அறக்கட்டளை அதைச் செய்ய உதவியது.


கடந்த ஆண்டு சையத்தின் சகோதரியின் திருமணத்திற்கு அவரது தாயார் என்னை அழைத்திருந்தார். திருமணம் ஆன ஓராண்டில் குழந்தை பிறந்தது. அந்தப் படத்தையும் எனக்கு அனுப்பிவைத்திருந்தார் என்றார்.



### சிறப்பு தொடர்புகள்

இந்த வேலை மூலம் கிடைக்கும் தொடர்புகளால் அவர் மகிழ்ச்சி அடைகிறார். மேலும் புற்றுநோய் தீர்க்கப்படாத நோய் என்று தவறான எண்ணம் இருப்பவர்கள், அதிலிருந்து விடுபடவும் உதவி வருகிறார். தான்யா என்ற நான்கு வயது குழந்தையின் தாயார் நுரையீரல் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த கதையை அவர் நினைவுகூர்ந்தார். புற்று நோய் ஒரு தொற்று நோய் என்று எண்ணி குழந்தை, தாயாருடன் விளையாடுவதை மாமியார் தடுத்து வந்தார். கணவராலும் ஏதும் செய்ய முடியவில்லை. ஒருநாள் துரைசாமி, உளவியலாளர் ஒருவரை அவர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் புற்றுநோயாளியுடன் சுதந்திரமாக உரையாடினர். அவரின் உடல்நிலையை அறிந்த அந்நியர்கள் இதைச் செய்தால் புற்றுநோய் ஒரு தொற்றுநோயாக இருக்காது என்று நம்பினார். இதையடுத்து குழந்தையும் தாயும் மீண்டும் இணைந்தனர்.

சென்னையில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் இரண்டு மருத்துவ மனைகள துரைசாமி பாராட்டுகிறார். புற்றுநோய் சிகிச்சைக்கான சிறந்த மருத்துவமனைகளில் ஒன்று சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனை. இங்கு புற்றுநோய் சிகிச்சைக்கென தனி பிளாக் உள்ளது. மருத்துவர்களும் உள்ளனர். இந்தியாவிலேயே புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனைகளில் சிறந்த ஒன்றாக இதை நான் மதிப்பிடுகிறேன். டாக்டர் சுப்பையா இதன் தலைவராக இருக்கிறார். தனியார் மருத்துவ மனையில் பணிபுரிந்தால் அவர் மாதம் லட்சக்கணக்கில் சம்பாதிக்க முடியும். நாங்கள் பலரை அங்கு சிகிச்சைக்காக அனுப்புகிறோம். அவர்களுக்கு அங்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.



அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையத்தின் முன்னாள் இயக்குனர் Dr V சாந்தா அவர்களுடன் ரோட்டரி புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் அறங்காவலர் சங்கர் துரைசாமி.

ஆனால், நாங்கள் உணவு, மருந்து மாத்திரைகள் மற்றும் கவுன்சிலிங் வழங்குகிறோம். தேவைப்பட்டால் சிகிச்சை பெறுபவர்களுடன் மிக நெருக்கமாக பணியாற்றுகிறோம்.

புற்றுநோயாளிகளுக்கு உதவுவதில் ராயப்பேட்டை மருத்துவமனை ஊழியர்கள் எவ்வளவு முனைப்புடன் செயல்படுகிறார்கள் என்பதை ஒரு எடுத்துக் காட்டுடன் அவர் விளக்கினார். சமீபத்தில் தஞ்சாவூர் காஸ்மோஸ் ரோட்டரி சங்கம் மூலம் ஒரு புற்றுநோயாளி பரிந்துரைக்கப் பட்டார். அந்த நோயாளிக்கு வேலை எதுவும் இல்லை. ஆனால், தினமும் ரூ.2,000 மதிப்புக்கு மருந்துகள் தேவைப்பட்டன. அந்த ரோட்டரி சங்கத்தாலும் அவரை ஆதரிக்க முடியவில்லை. மருந்து தயாரிப்பாளர்களை தொடர்புகொள்ள ராயப்பேட்டை மருத்துவமனை எங்களுக்கு உதவியது. நாங்கள் அவர்களுடன் பேசி மாதம் ரூ.8,000 என்ற விலையில் அந்த மருந்துகளைப் பெற்றோம். அந்த நோயாளி தஞ்சாவூரில் இருக்கிறார். அவரது பெயர் ஜெனிஃபர். குழந்தைகளின் கல்விக்கும் அவர் பிறர் உதவியை எதிர்பார்த்திருந்தார். அதற்கும் நாங்கள் உதவினோம்.

அடுத்து ஜெனிஃபர், வேலை வேண்டும் என்று ரோட்டரி அறக்கட்டளைக்கு கோரிக்கை விடுத்தார். எனக்கு ஒரு வேலை கிடைத்து அதன் மூலம் சம்பாதிக்கத் தொடங்கினால், நானே மருந்து மாத்திரைக்கான ரூ.8,000-த்தை செலவிடுவேன். நீங்கள் எனக்கு பதிலாக வேறு யாருக்காவது உதவலாம் என்றார். இதையடுத்து ரோட்டேரியன்கள் அவருக்கு சிறிய நிதி நிறுவனத்தில் பணம் வசூல் செய்யும் ஏஜெண்ட் வேலை வாங்கிக் கொடுத்தனர். அவர் இப்போது அங்கு நல்ல முறையில் பணிபுரிந்து வருகிறார்.

இந்த திட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தது ரோட்டேரியன் அளிக்கும் நிதி அல்ல, புற்றுநோயாளிகள் மீது அவர்கள் காட்டும் அன்பு, அக்கறை, அவர்கள் சொந்த காலில் நிற்கவேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது, அவர்களுடன் நேரத்தை செலவிடுவது ஆகியவைதான். ஏனெனில் புற்று நோயாளிகளை சிலர் பயமுறுத்துவதால் அவர்கள் மனச்சோர்வு அடைந்து விடுகிறார்கள்.

இது எங்கள் சங்கத்தின் கனவுத் திட்டமாகும். மேலும் எங்கள் சங்க உறுப்பினர்கள் பலர் இதில் முழு ஈடுபாடு காட்டி வருகின்றனர். இருந்தாலும் சுதந்திரமாக செயல்பட்டு வருகிறோம் என்றார் துரைசாமி. பிற ரோட்டரி சங்கங்கள் பரிந்துரைக்கும் புற்று நோயாளிகளிடமும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். ஒரு சங்கம் ஒரு புற்று நோயாளியை பரிந்துரைக்கும்போது உங்களால் எவ்வளவு நிதி தந்து உதவ முடியும் என்று கேட்டு, அதற்குச் சமமாக நாங்களும் ஒரு தொகையை அவரின் சிகிச்சைக்காக செலவிடுகிறோம்.

ஆனால், இந்தத் திட்டம் இப்போது நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. அறக்கட்டளைக்கு ரூ.48 லட்சம் தொகுப்பு நிதி உள்ளது. ஆனால், வட்டி விகிதம் சரிந்து வருவதால் அறங்காவலர்கள் நிதி திரட்ட சிரமப்படுகிறார்கள். மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நன்கொடை பெறுவதிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

### பெரு நன்கொடையாளர்களும் ரோட்டேரியன்களும்

அறக்கட்டளையின் 'புரவலர் நன்கொடையாளர்' திட்டத்தில் சேர முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ் நன்கொடையாளர்கள் ஆண்டுக்கு ரூ.25,000 வீதம் 12 ஆண்டுகளுக்கு கொடுத்தால் போதுமானது. ஏற்கெனவே 12 பேர் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இன்னும் அதிக மானவர்கள் இதில் சேர வேண்டும்.■







# ஜும்ரிதலையா ரசிகர்களுக்கு நன்றி!

V ராம்நாராயணன்

மார்வார் முண்ட்வாவைச் சேர்ந்த ஆனந்த் அகேலா, ஜும்ரிதலையாவைச் சேர்ந்த அல்லா ரக்கா, ராஜ்நந்தகோனைச் சேர்ந்த சரத் அகர்வால் மற்றும் யோத்மால், மஞ்சேரியல், நந்தேத், கரீம்நகர், நேபா நகர், இந்தூர், ராஜ்கோட், பீட், உஜ்ஜைன், தன்பாத் ஆகிய இடங்களிலிருந்து எண்ணற்ற மற்றவர்கள் சில சிறந்த ஹிந்தி திரைப்படப் பாடல்களை எனக்கு அறிமுகம் செய்ததற்காக நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். ஆகாஷவாணியின் “ஆப் கி ஃபர்மாயிஷ்” நிகழ்ச்சியைக் கேட்பவர்களில் இந்த நேயர்களின் பெயர்கள் வழக்கமாக இடம் பெறும். இந்த நிகழ்ச்சி பல நல்ல பாடல்களைத் தந்தது. சங்கீத் சரிதா போன்ற நிகழ்ச்சிகள் ராகங்களை அடிப்படையாகக் கொண்ட பாடல்களை தந்ததுடன், அதே ராகங்களில் பாரம்பரிய பாடல்களையும், இசையையும் தந்தது. நல்ல பாடல்கள் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றது.

*1950-களில் ரேடியோ சிலோன் (இலங்கை வானொலி) மற்றும் அகில இந்திய வானொலியின் விவித்பாரதியுடன் தொடர்புடையதால் இந்த நகரம் பிரபலமானது.*

வானொலில் ஒலிக்கும் இந்த பாடல்களைக் கேட்பவர்கள் வெகு தொலைவில் இருந்தனர். ஜும்ரிதலையாவரை இந்த பாடல்கள் ஒலிபரப்பானது. விக்கீப்பிடியாவின் படி ஜும்ரிதாலியா அல்லது ஜும்ரி தெலையா என்பது ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஒரு சிறிய நகரம். 1950-களில் ரேடியோ சிலோன் (இலங்கை வானொலி) மற்றும் அகில இந்திய வானொலியின் விவித்பாரதியுடன் தொடர்புடையதால் இந்த நகரம் பிரபலமானது. இந்த அலைவரிசைகளில் நேயர் விருப்பத்தில் திரைப்பட பாடல்களைக் கேட்டு கோரிக்கைகள் வருவதும் இங்கிருந்துதான்.



*நடிகர் திலிப்குமார் “மதுபன் மே ராதிகா நாச் ரே” பாடலில்.*

1950-களின் தொடக்கத்தில் மைக்கா தொழிலதிபர் ராமேஷ்வர் பிரசாத் பர்ன்வால் என்பவர் தினமும் ரேடியோ சிலோனுக்கு 20 முதல் 25 கோரிக்கைகளை அனுப்புவார். வானொலியில் நேயர் விருப்பப் பாடல்கள் ஒலிபரப்பாகும்போது தினமும் பர்ன்வால் பெயர் வருவதைக் கண்ட பான் கடை உரிமையாளர் கங்கா பிரசாத் மகாதியா, எலெக்ட்ரானிக் கடை வைத்திருந்த நந்தலால் சின்ஹா உள்ளிட்டோர் இதேபோல பாடல்கள் கேட்டு கோரிக்கைகளை அனுப்பத் தூண்டியது. இந்த மூன்று பேரின் புகழ் பெருகியதால், நகர மக்களிடையே பாடல் கோரிக்கை மோகம் தோன்ற வழிவகுத்தது. பாடல் கோரிக்கைகளை முன்வைப்பதில் இளைஞர்கள் போட்டி போட்டனர். இதைத் தொடர்ந்து மற்ற நகரங்களைச் சேர்ந்தவர்கள் ஜும்ரி தெலையா நகர மக்களைப் போலவே பெருமளவில் கோரிக்கைகளை அனுப்பி வந்தனர். இதையடுத்து 1980-களில் வானொலி நேயர்கள் சங்கம் உருவானது.








"மன் தர்பத் ஹரிதர்ஷன் கோ ஆஜ்", "பூச்சோ நா கைஸே மைன் ரேன் பிதாயி", "ஜோதி கலஷ் சால்கே", "மன்மோகன பதே ஜூடே", "மதுபன் மே ராதிகா நாசே ரே" அல்லது "ஜிந்தகி பார் நஹின் பூலேகி யே பர்ஸாத் கி ராத்" போன்ற பாரம்பரிய இசை கொண்ட அனைத்துப் பாடல்களும் எனக்கு நினைவுக்கு வந்தது. இவை பாக்ஸ் ஆபிஸ் ஹிட்டாகா விட்டாலும், ரசிகர்களின் மனதை தொட்டன.

*சில முத்தான ஹிந்தி பாடல்கள் என் மனதில் இன்றும் நிழலாடுகின்றன. இவற்றை விவித் பாரதி தவிர வேறு எங்கும் கேட்டிருக்க முடியாதவை.*

சில முத்தான ஹிந்தி பாடல்கள் என் மனதில் இன்றும் நிழலாடுகின்றன. இவற்றை விவித் பாரதி தவிர வேறு எங்கும் கேட்டிருக்க முடியாதவை. பராக் படத்தில் ஓ சஜனா என்ற பாடல் முதல் தரமானவை. அதே படத்தில் லதா மங்கேஷ்கர் பாடிய "மிலா ஹை கிஸ்கா ஜும்கா" என்ற பாடலும் சலீல் சௌத்ரி எழுதியவைதான். ஆஜ்மிர் அல்லது ஸ்ரீகங்காநகரில் இருந்து ஒரு ரசிகர் இதை விரும்பிக் கேட்பார்.

சோட்டி பஹேன் படத்தில் வரும் "ஜாவூன் கஹான் படா ஏ தில்", என்ற முகேஷ் பாடி சங்கர் ஜெய்கிஷன் இசையமைத்த பாடலை நான் நீண்டகாலம் சர்தார் மாலிக் இசை அமைத்தது என்று தவறுதலாக நினைத்திருந்தேன். சாரங்கா படத்தில் வரும் "சாரங்கா தேரி யாத் மே" மற்றும் "ஹான் திவானா ஹன் மெயின்" ஆகியவை அவர் உருவாக்கியவை. இந்த பாடல்களை பிற்பகல் வேளையில்

அரைகுறை தூக்கத்துடன், கையில் புத்தகத்துடன், டிரான்ஸ்ஸ்டர் ரேடியோ பக்கத்தில் இருக்க கேட்டு ரசித்தவை.

வானொலியில் கேட்கும் சில பாடல்கள் நமது கவனத்தை திசைத்திருப்பிவிடும். கோஹினூர் திரைப்படம் 1960-களில் வெளியானபோது அதில் வரும் பாடல்கள் ராகங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. "மதுபன் மெயின் ராதிகா நாசே ரே" முதல் "டோ சிதாரன் கால ஜமீன் பர் ஹை மிலன் ஆஜ் கி ராத்" அல்லது "தால் சுகி ஷேம் காம்" ஆகியவை முக்கியமான காட்சிகளையோ அல்லது உணர்வுபூர்மான காதலையோ வெளிப்படுத்துவதாக இருக்கும், ஆனால், திரையில் அந்த காட்சியில் திலிப்குமாரும்-மீனாகுமாரியும் நம்மை ஏமாற வைத்துவிடுவார்கள். நௌஷத்-ஷகீல், பதாயுனி-முகமது ரஃபி/லதா மங்கேஷ்கர் ஆகியோரின் இசையும் பாட்டும் பிரமாதமாக இருக்கும்.

அதே இசையில் நால்வர் குழுவானது பைஜு பாவ்ராவில் வெற்றிபெற்றது. பாரத் பூஷன் மற்றும் மீனா குமாரி முன்னிலை வகிக்க, "மன் தர்பத் ஹரி தர்ஷன் ககோ ஆஜ்" பாடல், ஷகீல், பதாயுனி, நௌஷத் மற்றும் முகமது ரஃபி ஆகிய மூவரின் முஸ்லிம் கூட்டணியில் கோஹினூர் படத்தில் சூப்பராக இருந்தது. நடிகர்களும் முஸ்லிம் என்பதால் கூடுதல் பரிமாணத்தை கொடுத்தது.

பரத் பூஷன், தனது வரலாற்றுத் திறனுக்காக சரிவர அறியப்பட்ட வில்லை என்றால் அவர் பைஜு பாவ்ராவில் நடிப்பில் பரிமளித்தார். ஆனால், பர்ஸாத் கி ராத் படத்தில் அவர் நடிப்பு எடுபடவில்லை. அவர், ஜிந்திகி பார் நஹின் பூலேகி என்ற சிறந்த பாடலுக்காக வாயசைத்தார். அவ்வளவுதான். மிர்சா காலிப் படத்தில் கவிஞன் காலிப்பை புகழந்து பாடும்போது அவரது நடிப்பு ஒன்றும் பிரமாதமாக இல்லை. ஆனால்,

*ஆல் இந்தியா ரேடியோ அலுவலகத்தில்* ஒரு RJ.



இவற்றால் படம் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை.

*ஹாய் அவுர் பி துனியா மென்*
*சுகன்வர் பஹுத் அச்சே*
*கஹ்தென் ஹைன் கி காலிப் கால*
*ஹை அந்தாஜென் பயான் அவுர்*

(இந்த உலகில் பல நல்ல கவிஞர்கள் இருக்கிறார்கள் ஆனால், காலிப் தனக்கென தனித்துவமான பாணியைக் கொண்டுள்ளார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.)

ஹிந்தி திரையுலகில் பிரதீப் குமார் மிகச்சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். ரோஷன் இசையமைப்பில், சந்திரலேகா படத்தில் அவர் பாடிய பாடல், “ரே து கஹே நா தீர் தாரேசு” கிளாசிக்கல் ராகங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த பாடல் மறக்க முடியாதது. விவித பாரதியில் நான் அடிக்கடி கேட்ட பாடல்கள் படைப்புகள் நௌஷத்தினுடையது. எனினும் இந்திய ஜவான்களுக்காக பிற்பகல் 3 மணிக்கு ஒலிபரப்பாகும் ஜெய்மாலா நிகழ்ச்சியை குறிப்பிடாமல் இருக்க முடியாது. சச்சின் தேவ் பர்மன் ஒரு நாளும் பின்தங்கியதில்லை. மதன் மோகன், சி.ராமச்சந்திரா, ஜெய்தேவ், ரோஷன், சித்ரகுப்த், குலாம் முகமது, ரவி மற்றும் சங்கர் ஜெய்கிஷன் ஆகியோர் தங்களுக்கே உரிய முத்திரையுடன் இசையுடன்கூடிய பாடல்களை ரசிகர்களுக்கு விருந்தளித்தார்கள்.




*ஜூம்ரி தலையா ரசிகர்களே திரைப்பாடல்கள் மீது உங்களுக்கு இருக்கும் ரசி கத்தன்மைக்கும், மறக்க முடியாத சிறந்த ஹிந்தி பாடல்களை கோடிக்கணக்கான நேயர்கள் பல தசாப்தங்களாக கேட்கச் செய்ததற்காகவும் உங்களுக்கு நன்றி.*

கய்யாம்! இவர் உண்மையிலேயே அசல் இசையமைப்பாளரா? அவர் பஞ்சாப் நாட்டுப்புற பாடல்கள், பஹடி துன் மற்றும் கஜல் பாடல்களுக்கே இசையமைத்து வந்தார். மொஹபத் இஸ்கோ கஹ்தென் ஹைன் படத்திற்காக கய்யாம் இசையமைத்த ரஃபி-சுமன் கல்யாண்பூர் டூயட் “தெஹாரியே ஹோஷ் மென் ஆ லூன்” பாடலை முதன் முறையாக விவித் பாரதியில் கேட்க நேர்ந்தது. “அகாரி காட்”-இல் லதா மங்கேஷ்கர் பாடிய “பஹரோன் மேரா ஜீவன் பி சவாரோ” மற்றும் ஷாகுனில், அவரது மனைவி ஜகஜித் கௌர் பாடிய “தும் அப்னா ரஞ்ச்-ஓ-காம்”, முகேஷ் பாடிய “கபி, கபி” உள்ளிட்ட பஹாடி பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

ஜூம்ரி தலையா ரசிகர்களே திரைப்பாடல்கள் மீது உங்களுக்கு இருக்கும் ரசிகத்தன்மைக்கும், மறக்க முடியாத சிறந்த ஹிந்தி பாடல்களை கோடிக்கணக்கான நேயர்கள் பல தசாப்தங்களாக கேட்கச் செய்ததற்காகவும் உங்களுக்கு நன்றி. தொலைக்காட்சி வந்தவுடன் வானொலிக்கு இருந்த மவுசு குறைந்துவிட்டது. எனினும் யூடியூப் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் வந்துவிட்ட நிலையில் “மவுஸை கிளிக்” செய்தோ அல்லது மொபைல் போனை “ஸ்வைப்” செய்தோ நாம் நினைத்த பாடலை கேட்டு ரசிக்க முடியும்.



கட்டுரையாளர் முன்னாள் ஸ்ருதி பத்திரிகையின் ஆசிரியர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# ரோட்டரி ஆளுநர்





**முகேஷ் சிங்கால்**
**அச்சிடல் மற்றும் பொதியாக்கல்**
RC **அலிகர் சிட்டி,** RID 3110

## ஆசிரியர்களுக்கான மிகப் பெரிய பயிற்சித் திட்டம்

இவருடைய மாவட்டம் RILM மற்றும் டெக் மகிந்திரா-வுடன் ஓர் MoUல் பணியாற்றி அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 6,150 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. இந்தப் பயிற்சியின் மூலம் அவர்கள் தங்கள் கற்பித்தல் திறமைகளை மேம்படுத்திக்கொண்டு, மாணவர்களுக்கு உதவுவார்கள். இதுவரை உத்தராகண்ட் மற்றும் UPIஐ சேர்ந்த ஆசிரியர்களுக்கு நாங்கள் 500 நாட்டைக் கட்டமைப்போர் விருதுகளை வழங்கியுள்ளோம், இன்னும் பலருக்கு இந்த விருதை வழங்கவுள்ளோம்'' என்கிறார் முகேஷ் சிங்கால். இந்த மாவட்டத்தின் சங்கங்கள் GGகள், மாவட்ட நல்கைகள் மற்றும் உறுப்பினர் பங்களிப்பின் வழியாக 30 மகிழ்ச்சிப் பள்ளிகளைச் செயல்படுத்தும்.

இந்த ரோட்டரி ஆண்டு நிறைவதற்குள் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து மொத்தம் 4,400க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் எண்ணிக்கையைப் பெற இவர் திட்டமிடுகிறார். நான் ஏற்கெனவே இதுவரை 280 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்துள்ளேன். நாங்கள் இன்னும் 10 புதிய சங்கங்களைச் சேர்த்து மொத்தம் 150 சங்கங்களை எட்டுவோம் என்கிறார் இவர். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $200,000.

2000ம் ஆண்டில், என் நண்பரும் முன்னாள் ரோட்டரியனுமான பங்கஜ் அகர்வால் என்னை ரோட்டரியில் சேர்த்தார். ஆனால், ஒரு மிகப் பெரிய இளம்பிள்ளைவாத முகாமைப் பார்த்த பிறகு, என் மன நிலை மாறியது, நான் சமூகத் திட்டங்களில் பங்குபெறத் தொடங்கினேன்'' என்கிறார் சிங்கால். ஆனால், இவருக்கு ஒரு கவலை உள்ளது. நாம் புதிய உறுப்பினர்களை மிக விரைவாகச் சேர்க்கிறோம், ஆனால், அவர்களுடைய சான்றுகளைச் சரிபார்ப்பதில்லை. இதனால் ரோட்டரியன்களின் தரம் குறையாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார்.

**சமர் ராஜ் கர்க்**
**தானியங்கி உதவித்துறை,**
RC **கிரேட்டர் லக்னோ,** RID 3120

## பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், வயதுவந்தோர் எழுத்தறிவில் இவர் கவனம் செலுத்துவார்

ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கையைப் பெருக்கு வதற்கு ஓர் உறுதியான வழி, தொழில் வலைப்பின்னலை வலுவாக்குவது, ரோட்டரியன்களிடையில் தோழமையை வளர்ப்பது என்கிறார் சமர் கர்க். 1989ல் ரோட்டராக்டர் ஆன இவர், தன்னுடைய தந்தை Rtn சஜ்ஜன் குமார் கர்க் அவர்களால் ஊக்கம் பெற்று 1998ல் ரோட்டரியில் இணைந்தார். என் தந்தை என் சிந்தனைகளை, மனப்பாங்கை வடிவமைத்தார்.

இவர் இந்த ஆண்டு நிறைவுக்குள் 500 புதிய ரோட்டரியன்களைச் சேர்த்து மாவட்ட உறுப்பினர் எண்ணிக் கையைச் சுமார் 3,900க்குக் கொண்டு செல்ல விரும்புகிறார். ஏற்கெனவே ஆறு புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன; இன்னும் நான்கு பட்டியலிடப்படுகின்றன; இதனால் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 94 ஆகிறது. இவர் ஜூன் நிறைவுக்குள் 100 புதிய ரோட்டராக்ட் சங்கங்களை அமைக்கவும், 100+ ரோட்டராக்டர்களைச் சேர்த்து ரோட்ட ராக்டர் எண்ணிக்கையை 600க்கு மேல் கொண்டு செல்லவும் திட்டமிடுகிறார். கிராமப்புறப் பகுதிகளில் உள்ள பள்ளி மாணவிகளுக்கு மிதிவண்டிகளை நன்கொடையளிக்கும் ஒரு GGக்காக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதும் வயதுவந்தோர் எழுத்தறிவும் எங்களுடைய கவனப் பகுதிகள், இதில் நாங்கள் பல திட்டங்களை நடத்துகிறோம்'' என்கிறார் கர்க். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $200,000.

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**டாக்டர் மயூரேஷ் வர்கெ**
**அறுவைச் சிகிச்சை வல்லுனர்**
RC அம்பர்நாத், RID 3142

## மேற்கு இந்தியாவில் ரோட்டரியின் வளர்ச்சிக்கு மிக நல்ல வாய்ப்பு உள்ளது

RID 3142ல் (தானே மற்றும் நவி மும்பை) ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை, திட்டங்கள் மற்றும் TRF வழங்கலில் மிக விரைவாக வளரும் என்கிறார் டாக்டர் மயூரேஷ் வர்கெ. ஜூன் நிறைவுக்குள் உறுப்பினர் எண்ணிக்கை 1,000 வளரும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 4,300க்கு மேல் செல்லும் என்று இவர் நம்புகிறார்.

நவி மும்பையில் உள்ள PKC மருத்துவமனையின் தொண்டுப் பணியை ஆதரிப்பதற்காக மூன்று டயாலிசிஸ் இயந்திரங்கள் (ரூ.21 லட்சம்) கொடையளிக்கப்பட்டன. இவற்றுக்கு ஒரு பெருநிறுவனமும் RC நியூ பாம்பே சீசைடைச் சேர்ந்த இரண்டு ரோட்டரியன்களும் நிதியளித்தார்கள். ரோட்டரி திவ்யாங் மையத்தில் நடந்த செயற்கைக் கால் (ஜெய்ப்பூர் கால்) மற்றும் காலிப்பெர் முகாமில் சுமார் 50 பேர் பலன் பெற்றார்கள்.

கடந்த 20 ஆண்டுகளாக இந்த மாவட்டம் தசை, எலும்புக்கூட்டுச் சிதைவு அறுவைச் சிகிச்சைகளுக்காகச் சிறப்பு முகாம்களை நடத்துகிறது. இதுவரை நாங்கள் 5,000 திருத்த அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளோம் என்கிறார் இவர். TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $500,000. 2000ல், முன்னாள் ரோட்டரியன் சுனில் கவதெ அவர்களால் ஊக்கம் பெற்று வர்கெ ரோட்டரியில் சேர்ந்தார். இவர் RI தலைவர் ரான் பர்டனிடமிருந்து (2013–14) Service above Self விருதைப் பெற்றுள்ளார்.



**பிரதிம் பேனர்ஜி**
**தொழில்துறை மேலாண்மை**
RC ஜாம்ஷெட்பூர் வெஸ்ட், RID 3250


## இவருக்குப் பிடித்த திட்டங்கள்: மகிழ்ச்சிப் பள்ளிகள், PPH முகாம்கள்

பிகார் மற்றும் ஜார்கண்டிலுள்ள இந்த மாவட்டத்தின் சங்கங்களுக்கு மிகப் பிடித்த திட்டங்கள், மகிழ்ச்சிப் பள்ளிகளும் நேர்வித நலன் திட்ட முகாம்களும் தான். இது வரை குறைந்தது 250 PPH முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன, 60 முதல் 70 மகிழ்ச்சிப் பள்ளித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மகிழ்ச்சிப் பள்ளிகளுக்கு உறுப்பினர்கள் நிதியளிக்கிறார்கள்'' என்கிறார் பிரதிம் பேனர்ஜி. இவர் இதுவரை 400 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார், ஜூன் 30க்குள் மேலும் 400 பேரைச் சேர்த்து மாவட்ட உறுப்பினர் எண்ணிக்கையை 4,800க்குமேல் கொண்டுசெல்லத் திட்ட மிடுகிறார். ஆறு புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன, அடுத்த சில மாதங்களில் நாங்கள் மேலும் 4 அல்லது 5ஐச் சேர்த்துச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கையை 112 ஆக்குவோம்.

லட்சிய விருப்பம் நிறைந்த ஒரு திட்டத்தின்மூலம் இவர்கள் அரசுப் பள்ளிகள், பொது நல மையங்கள், ரயில்வே நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், சமூகக் கூடங்களில் மாவட்ட நிதியின் வழியாகப் பாதுகாப்பான குடிநீர் வசதியை அமைக்கிறார்கள்.

TRF வழங்கலுக்கு இவருடைய இலக்கு, $300,000. 2006ல், தன்னுடைய பள்ளி நண்பர் Rtn ராஜீவ் தல்வால் அவர்களால் ஊக்கம் பெற்று இவர் ரோட்டரியில் இணைந்தார். ரோட்டரியன்களை ஊக்குவிப்பதற்காக, RI தலைவர் மேத்தாவுக்குப் பிடித்த மேலும் செய்யுங்கள், மேலும் வளருங்கள் என்ற முழக்கத்தை பேனர்ஜி சற்று மாற்றியுள்ளார்: மேலும் செய்யுங்கள், மேலும் வழங்குங்கள்.

## Advertise in Rotary News




| Tariff | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| Half Page | ₹20,000 |
| **Specifications** | |
| 17 x 25 cm | Full page |
| 17 x 12 cm | Half page |

**Advertisements in colour only**

**Phone: 044 42145666**
**e-mail: rotarynews@rosaonline.org**

## Rotarians!

**Visiting Chennai for business?**

**Looking for a compact meeting hall?**



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


# District Wise TRF Contributions as on November 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contributions |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 71,727 | 1,044 | 0 | 151,814 | 224,585 |
| 2982 | 27,143 | 5,633 | 0 | 2,449 | 35,225 |
| 3000 | 3,630 | 11 | 0 | 3,311 | 6,951 |
| 3011 | 7,622 | 3,672 | 0 | 81,879 | 93,174 |
| 3012 | 19,993 | 3,811 | 25,041 | 228,613 | 277,458 |
| 3020 | 33,551 | 5,955 | 22,596 | 4,620 | 66,721 |
| 3030 | 18,732 | 267 | 22,027 | 10,067 | 51,093 |
| 3040 | 28,779 | 250 | 0 | 21,361 | 50,391 |
| 3053 | 3,052 | 311 | 27 | 0 | 3,390 |
| 3054 | 2,902 | 816 | 0 | 189,811 | 193,529 |
| 3060 | 38,082 | 1,201 | 0 | 74,982 | 114,264 |
| 3070 | 8,495 | 0 | 0 | 27,600 | 36,095 |
| 3080 | 7,966 | 4,086 | 0 | 6,018 | 18,070 |
| 3090 | 13,766 | 0 | 28,000 | 0 | 41,766 |
| 3100 | 17,320 | 0 | 0 | 2,484 | 19,803 |
| 3110 | 7,719 | 355 | 0 | 0 | 8,074 |
| 3120 | 46,899 | 1,000 | 0 | 0 | 47,899 |
| 3131 | 233,688 | 28,444 | 5,000 | 303,613 | 570,744 |
| 3132 | 20,340 | 1,169 | 5,000 | 9,619 | 36,129 |
| 3141 | 232,851 | 4,073 | 64,865 | 283,381 | 585,170 |
| 3142 | 195,484 | 1,654 | 8,145 | 24 | 205,307 |
| 3150 | 22,646 | 7,138 | 15,000 | 43,120 | 87,905 |
| 3160 | 17,803 | 2,387 | 17,264 | 0 | 37,454 |
| 3170 | 29,324 | 9,553 | 1,710 | 30,007 | 70,593 |
| 3181 | 9,627 | 4,031 | 0 | 0 | 13,658 |
| 3182 | 14,273 | 6,033 | 0 | 5,232 | 25,538 |
| 3190 | 108,993 | 11,888 | 30,411 | 0 | 151,291 |
| 3201 | 45,508 | 54,401 | 0 | 204,222 | 304,130 |
| 3203 | 16,333 | 16,223 | 6,086 | 145,938 | 184,579 |
| 3204 | 2,191 | 422 | 0 | 1,036 | 3,649 |
| 3211 | 14,880 | 280 | 0 | 15,463 | 30,623 |
| 3212 | 13,428 | 1,575 | 1,036 | 588 | 16,627 |
| 3231 | 7,811 | 7,679 | 0 | 2,851 | 18,341 |
| 3232 | 40,144 | 51,564 | 31,601 | 234,855 | 358,164 |
| 3240 | 33,750 | 11,373 | 0 | 63,379 | 108,502 |
| 3250 | 9,132 | 2,737 | 1,036 | 15,118 | 28,023 |
| 3261 | 4,415 | 304 | 0 | 30,854 | 35,573 |
| 3262 | 2,812 | 431 | 0 | 0 | 3,242 |
| 3291 | 69,309 | 1,751 | 11,171 | 10,936 | 93,166 |
| **India Total** | **1,502,120** | **253,519** | **296,014** | **2,205,243** | **4,256,896** |
| 3220 **Sri Lanka** | 34,911 | 6,393 | 1,510 | 1,000 | 43,814 |
| 3271 **Pakistan** | 3,342 | 316 | 0 | 5,990 | 9,648 |
| 3272 **Pakistan** | 16,732 | 10,623 | 0 | 2,117 | 29,472 |
| 3281 **Bangladesh** | 33,333 | 4,121 | 13,000 | 97,894 | 148,347 |
| 3282 **Bangladesh** | 25,608 | 4,506 | 1,000 | 500 | 31,615 |
| 3292 **Nepal** | 49,285 | 5,698 | 0 | 82,347 | 137,330 |
| **South Asia Total** | **1,665,330** | **285,175** | **311,524** | **2,395,091** | **4,657,121** |
| **World Total** | **45,290,466** | **11,056,190** | **19,773,816** | **7,477,848** | **83,598,320** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office.

# RI தலைவர் மேத்தா RID 3232ன் சங்கத் தலைவர்களைச் சந்தித்தார்

ரோட்டரி செய்திக் குழு




மகாப்ஸ் 21 பிராந்தியச் சந்திப்பு வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட RID 3232 DG J ஸ்ரீதர், இந்த ஆண்டுக்கான தன்னுடைய சங்கத் தலைவர்கள் சென்னையில் RI தலைவர் சேகர் மேத்தா-வைச் சந்திக்க ஒரு நிகழ்ச்சியை நடத் தினார். இந்த நிகழ்ச்சியில் RI இயக்குநர் A S வெங்கடேஷ், TRF அறங்காவலர் அஜீஸ் மேமன், PDGகள், சங்க தலைவர்கள் மற்றும் அவர்களுடைய துணைவர்கள் கலந்துகொண்டார்கள்.

RID 3232ன் திட்டங்கள் மற்றும் சங்கங்களை 13 மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து பார்த்த பிறகும், தலைவர் சேகர் ஊக்கமளிக்கும் ஒரு பேச்சை வழங்கினார், என்றார் ஸ்ரீதர்.

DGN ரவி ராமன் மற்றும் DGND N S சரவணன் பங்கேற்றார்கள். சென்னையில் ஒரு முழுமையான பேரிடர் மேலாண்மைச் செயல் முறையை அமைப்பதற்காக, RID 3232க்கான ஒரு நீடித் திருக்கும், முன்னெச்சரிக்கைச் செயல்முறையை Rtn ஹரிச ரண் தலைமையின் கீழ் தான் உருவாக்கியிருப்பதாக DG ஸ்ரீதர் அறிவித்தார். தலைவர் மேத்தா ஒரு பேரிடர் மேலாண்மைக் கையேட்டை வெளியிட்டார், தலைவர்கள் தங்களுடைய தலைமைப் பொறுப்புகளை முழுக்கப் பயன்படுத்தி ரோட்டரியை வளர்க்கவேண்டும், பொருளுள்ள மற்றும் பெரிய சேவைத் திட்டங்களைச் செய்யவேண்டும் என்று நஅவர் வலியுறுத்தினார்.

மாவட்ட அறிவுறுத்துநர் PDG அபிராமி ராமநாதன் குயில்குப்பம் கிராமத் திட்டத்தின் தாக்கத்தைப் பற்றிய ஓர் அறிக்கையை வழங்கினார். RC மெட்ராஸ் சென்ட்ரல் மற்றும் 40க்கும் மேற்பமி சங்கங்கள் இணைந்து நடத்தும் இந்தத் திட்டம், சமீபத்திய கொள்கை மாற்றம் ஒன்றால் இடம் பெயர்ந்துள்ள இருளர் இன உறுப்பினர்களிடையில் மிகப் பெரிய தாக்கம் ஒன்றை உருவாக்குகிறது. இந்தத் திட்டம் பழங் குடியினத்தவர்களுக்குத் தரமான பாதுகாப்பு, அவர் களுடைய குழந்தைகளுக்கு மேம்பட்ட கல்வி, வாழ்வாதார வாய்ப்பு களை வழங்கி, அதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கைகளை மாற்றியமைக்கிறது.

DRFC அம்பலவாணன் RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி மேத்தா நன்கொடை நிறுவல் நிதிக்காக $30,000க்கான ஒரு காசோலையைத் தலைவர் மேத்தாவிடம் வழங்கினார், PDG J B காம்தர் RI தலைவர் சேகர் மேத்தா-வை அறிமுகப்படுத்தினார். மாவட்ட RYLA தலைவர் வித்யா ரகு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார், மாவட்டச் செயலாளர் R ரவி சங்கர் நன்றி உரை ஆற்றினார்.■

# புத்தாண்டிற்கான பசுமை உறுதிகள்

ப்ரீதி மேஹரா

புத்தாண்டு இப்போதுதான் தொடங்கியுள்ளது! 2022க்கான உறுதிகளை வகுப்பதற்கு இதுதான் சரியான நேரம். நம் பூமியைப் பசுமையாக வைப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்ய உறுதி கொள்வோம். இந்தியாவில், நன்கு வாழ்கிற, உயர்நிலையில் உள்ள 20% குடும்பங்கள்தான் மிகக் கூடுதலான கார்பன் உமிழ்வுகளை உருவாக்குகிறார்கள். சென்ற ஆண்டு, மனித குலம் மற்றும் இயற்கைக்கான ஆராய்ச்சிக் கல்விக் கழகம் நடத்திய ஓர் ஆய்வில், குறைவாகச் செலவு செய்கிற (அதாவது, நாள்தோறும் சுமார் ரூ.150க்குக் குறைவாகச் செலவு செய்கிற) வீடுகளுடன் ஒப்பிடும்போது, நிறையச் செலவு செய்கிற வீடுகள் 7 மடங்கு கூடுதல் உமிழ்வுகளை உருவாக்குவதாகத் தெரியவந்தது.

அப்படியானால், நாம் எந்த வாக்குறுதிகளைப் பின்பற்றலாம். முதலில், இயன்றவரை கூடுதலாக ஐந்து 'R'களை பின்பற்ற உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். இதன் பொருள், உங்களுடையவற்றை அல்லது உங்கள் வீட்டுக்குச் சொந்தமானவற்றை மறுசுழற்சி செய்யுங்கள் (Recycle), மீண்டும் பயன்படுத்துங்கள் (Reuse), வேறு நோக்கத்துக்குப் பயன்படுத்துங்கள் (Repurpose), பழுது பார்த்துப் பயன்படுத்துங்கள் (Repair). உங்களுக்கு உண்மையில் தேவைப்படாத பொருட்களை வாங்கவோ சேமிக்கவோ ஆசைப்படாமல் மறுத்துவிடுங்கள் (Refuse). இது உங்கள் செலவுகளையும் குறைக்கும்.

நாம் ஐந்து 'R'களை செயல் படுத்துவது எப்படி? அதற்கான சில அறிவுறுத்தல்கள் அல்லது உதவிக் குறிப்புகள், இதோ:

மறுசுழற்சி செய்தல் சற்றுத் தொந்தரவாக இருக்கலாம். ஆனால், நீங்கள் நாள்தோறும் உங்களுடைய நேரத்தில் பத்து நிமிடங்களை உறுதியுடன் இதற்காக வழங்கினால் போதும். அந்த நேரத்தைப் பயன்படுத்தி, நீங்கள் தூக்கி எறியத் திட்டமிடுகிறவற்றை அலுமினியம், அட்டை, தாள், பிளாஸ்டிக், கண்ணாடி என்று பிரிக்கலாம். அது குப்பைகளைத் திரட்டுபவருக்கு மிகவும் பயன்படும். அத்துடன், தூக்கி எறியப்படும் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தானவகையில் நிலத்தின்மீது தொடர்ந்து குவிந்து கொண்டிருக்கும் குப்பைக் குவியலைச் சேராமல், மறுசுழற்சி செய்யப்படவும் இது உதவும்.


பிறருக்குப் பயன்படக்கூடிய எதையும் எப்போதும் தூக்கி எறிவதில்லை என்று உறுதி சொல்லிக் கொள்ளுங்கள். இதன் பொருள், உங்கள் ஆடைகளைத் தேவை யுள்ளவர்களுக்கு வழங்கலாம்; வண்ணங்கள், தொட்டில்கள், மணிகள், ஒரு பக்கம் காலியாக உள்ள தாள்கள் போன்றவற்றை இளம் குழந்தைகளைக் கொண்ட ஒரு பள்ளி அல்லது ஒரு செயல் குழுவுக்கு வழங்கலாம், அவர்கள் அதைத் தங்களுடைய கலை அல்லது பள்ளித் திட்டங்களுக்குப் படைப்புணர்வுடன் பயன்படுத்து வார்கள். இதைச் செய்வதற்கு மிக எளிய வழி, உங்கள் குடியிருப்பின் ஒரு காலி இடத்தில் மறு பயன்பாட்டு மூலை ஒன்றைத் தொடங்குவதுதான். அங்கு வசிக்கிறவர்கள் பொருட்களைத் தூக்கி எறிவதற்குப் பதில் இங்கு வைக்கலாம். பின்னர், தேவையுள்ள மக்கள் தங்களுக்குத் தேவையானவற்றை அங்கிருந்து எடுத்துக்கொள்ளலாம். அதன்பிறகும் ஏதேனும் பொருட்கள் மீதமிருந்தால், அவற்றை அவ்வப்போது பழைய பொருள் திரட்டுபவரிடம் வழங்கலாம்.

பொருட்களை வாங்கும்போது எப்போதும் பிளாஸ்டிக் பையைப் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று உங்களுக்கு நீங்களே வாக்குறுதி சொல்லிக்கொள்ளுங்கள். சந்தைக்குச் செல்லும்போது, மீண்டும் பயன்படுத்தக் கூடிய பை இல்லாமல் வீட்டிலிருந்து




















கிளம்புவதில்லை என்று உறுதி சொல்லிக்கொள்ளுங்கள்.

நீங்கள் புத்தகம் படிக்கிறவர் என்றால், புதிய புத்தகங்களை வாங்குவதற்குப் பதில் அவற்றை நண்பர்களிடம் கடன் பெற்றுப் படிக்கலாம் அல்லது பழைய புத்தகக் கடைகளில் வாங்கலாம். அதைவிடச் சிறப்பு, உள்ளூர் நூலகத்தில் சேர்ந்துவிடலாம்.

தண்ணீர்ப் பயன்பாட்டைப்பற்றிய ஒரு வாக்குறுதியையும் நீங்கள் கண்டிப்பாகச் சொல்லிக்கொள்ள வேண்டும். இதில் முக்கியமான முதல் படிநிலை, பாட்டிலில் அடைக்கப்பட்ட நீரை வாங்கமாட்டேன் என்று உறுதியாக மறுப்பது. அதற்குப் பதிலாக, மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஒரு தண்ணீர் பாட்டிலைக் கையில் கொண்டு செல்லுங்கள். உங்கள் நீர்த் தேவையை மேலும் குறைப்பதற்கு, குளிக்கும்போது, கை கழுவும்போது நீர்ப் பயன்பாட்டைக் குறையுங்கள், பல் தேய்க்கும்போது எப்போதும் குழாயை மூடுங்கள். நீர்ச் சேமிப்பு தொடர்பாக நீங்கள் செய்யக் கூடிய மிகப் பெரிய பங்களிப்பு, வீட்டில் அல்லது நீங்கள் வசிக்கும் சமூகத்தில் மழை நீர் சேகரிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்குவது.

உணவைப் பொறுத்தவரை நீங்கள் சொல்லவேண்டிய வாக்குறுதிகள் பல உண்டு. உள்ளூரில் விளைந்த, பருவத்துக்கு ஏற்ற பழங்கள், காய்கறிகள், முழு தானியங்களைக் கூடுதலாகச் சாப்பிடுவேன் என்று நீங்கள் உறுதியேற்கவேண்டும். உள்ளூரில் வளர்ந்த, பூச்சிக்கொல்லிகள் இல்லாத இயற்கை உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுங்கள், இதன் மூலம், தொலைவில் உள்ள இடங்களிலிருந்து உணவுப் பொருட்களைச் சந்தைகளுக்குக் கொண்டுவரும் எரிபொருள் செலவு குறையும். அத்துடன், நீங்கள் சிறு தொழில்களை ஆதரிப்பீர்கள், இவை வருவாய் மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்க உதவுகின்றன.

உணவைப் பொறுத்தவரை, பயன்பாட்டைத் தாண்டி இன்னொரு பரிமாணமும் உண்டு. சமையலறையில் வீணாகும் பொருட்களைப் பிரித்து, உரமாக்கக்கூடிய பொருட்களைத் தனியாக வைக்க உறுதி கொள்ளுங்கள். நீங்களே இவற்றை உரமாக மாற்றினால் இன்னும் நல்லது. இதன் மூலம், வீணாகும் பொருட்கள் உங்கள் செடிகள் அல்லது தோட்டத்துக்கு ஊட்டச்சத்தை வழங்கும் உரமாக மாறும். உங்கள் நண்பர்களில் சிலர் சொந்தமாக உரமாக்க இயலாமல் இருக்கலாம், அவர்களுக்கு உங்கள் உரத்தை நீங்கள் பரிசு வழங்கலாம். இயன்றபோதெல்லாம் சிறு தொலைவுகள் நடப்பேன் அல்லது மிதிவண்டி ஓட்டுவேன் என்று உறுதி சொல்லிக்கொள்ளுங்கள்.

இந்த வாக்குறுதிகளெல்லாம் முக்கியமா என்று நீங்கள் சிந்திக்கலாம். இவை முக்கியம்தான். ஏனெனில், உலக அளவில் பசுங்குடில் வாயுக்களை உமிழும் மூன்றாவது மிகப் பெரிய நாடு இந்தியா, நம்முடைய கார்பன் உமிழ்வு அளவு, 2.46 பில்லியன் மெட்ரிக் டன். இந்தியாவில் ஒவ்வொரு மனிதருடைய சராசரிக் கார்பன் பயன்பாடு ஆண்டுக்கு 0.56 டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஏழைகளுக்குத் தலா 0.19 டன்னாகவும், பணக்காரர்களுக்குப் பொறாமைப்படவைக்கும் வகையில் தலா 1.32 டன்னாகவும் உள்ளது. பல சமூக, பொருளாதாரக் குழுக்களில் உணவு மற்றும் மின்சாரம் தான் உமிழ்வுகளில் பெரும்பகுதிக்குப் பங்களிக்கிறது என்கிறது இந்தியா ஸ்பெண்ட் என்ற தரவுப் பகுப்பாய்வு அமைப்பு.

நாம் அனைவரும் சேர்ந்தால் தான் மாற்றத்தை உண்டாக்க இயலும். வசதி யாக உள்ளவர்கள் கவனத்துடன் தங்கள் கார்பன் பயன்பாட்டைக் குறைத்து ஓர் எடுத்துக்காட்டாக வாழலாம். உங்கள் அனைவருக்கும் மிக மகிழ்ச்சியான மற்றும் பசுமையான புத்தாண்டு வாழ்த்துகள்!

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# RC வாபியை பெருமைபடுத்திய இரு ரோட்டரியினர்

ரோட்டரி செய்திக் குழு



குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்த் பத்ம பூஷன் விருதை Rtn *ராஜு ஷ்ராஃப் அவர்களுக்கு வழங்குகிறார்.*

இந்திய குடியரசு தலைவர் ராம் நாத் கோவிந்த் வாபியைச் சேர்ந்த (யுனைடட் ஃபாஸ்ஃபரஸ் நிறுவனர்) ராஜு ஷ்ராஃப் அவர்களுக்கு பத்ம பூஷன் விருது வழங்கி பெருமைப்படுத்தினார். இவர் RID 3060வின் RC வாபி உறுப்பினர் ஆவார். மனைவி சான்ட்ரா வுடன் இணைந்து ஷ்ராஃப் வாபியில் முதல் ஆங்கில பள்ளி மற்றும் அன்கலேஷ் வரில் ஒரு கெமிகல் என்ஜினியரிங் கல்லுாரி மற்றும் வாபியில் ஒரு மருத்துவமனையும் ஒரு செவிலியர் கல்லுாரியும் நிறுவியுள்ளார்.

இச்சங்கத்தின் மேலும் ஒரு உறுப்பினர் கனு மோகன்லால் தேசாய் அவர்கள் குஜராத் மாநில நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வாபியில் ரோட்டரி தொண்டு அறக்கட்டளையின் அறங்காவலர் மற்றும் இயக்குனரும் ஆவார்.



*குஜராத் நிதியமைச்சர் கனு மோகன்லால் தேசாய்.*

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**RISAOவிலிருந்து அங்கீகாரங்களை அனுப்பும் நேர அட்டவணை**

பால் ஹாரிஸ் தோழமை அங்கீகாரங்களைச் செயல்படுத்தி அனுப்ப 3 முதல் 4 வாரம் ஆகிறது. நீங்கள் அறக்கட்டளைக் கருத்தரங்குகள் அல்லது மாவட்ட விழாக்களில் நன்கொடையாளருக்குச் சிறப்பு அங்கீகாரம் ஏதும் வழங்க விரும்பினால், உங்கள் கோரிக்கை நிகழ்ச்சிக்குக் குறைந்தது 15 நாட்கள் முன்பாக எங்களுக்கு வரவேண்டும். மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரம் RI தலைமையகத்தில் செயல் முறைப்படுத்தப்படுகிறது, அதற்கான செதுக்கல் குறிப்புகளை நாங்கள் மேம்படுத்தியபின், அது எங்கள் அலுவலகத்துக்கு வர 5 முதல் 6 வாரம் ஆகிறது. மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரம் கோரிக்கையின் அடிப்படையில் மட்டும் தான் செயல் முறைப்படுத்தப்படுகிறது. மிகப் பெரிய நன்கொடையாளர் அங்கீகாரக் கோரிக்கைப் படிவத்தைத் தரவிறக்க, இந்த இணைப்பைக் கிளிக் செய்யுங்கள்: *http://www.highroadsolution.com/fileuploader2/files/majordonorrecognitionform.docx.*

**இணையப் பங்களிப்பு: நினைவில் வைக்கவேண்டிய விஷயங்கள்**

- *www.Rotary.org* அல்லது *www.rotaryfoundationindia.org* வழியாக இணையப் பங்களிப்புகளைச் செய்யும் போது, கிரெடிட் அட்டையுடன் உறுப்பினர்கள் Debit அட்டையைப் பயன்படுத்தியும் பணம் செலுத்த லாம், “Credit Card” என்கிற இதே இணைப்பை அதற்கும் பயன் படுத்தலாம்.
- போலி ID உருவாக்கத்தைத் தவிர்க்கவும், உங்கள் பங்களிப்புக்குச் சரியான நேரத்தில் மதிப்பைப் பெறவும் இணையப் பங்களிப்புகளுக்கு, *My Rotary* உள்நுழைவை அல்லது உங்கள் அலுவல் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள்.
- ரோட்டரியன் அல்லாதவர்களுடைய பங்களிப்புகள்-உங்கள் சங்கம்/மாவட்டத்தைச் சேர்ந்த, ரோட்டரியன் அல்லாத ஒருவர் ஓர் இணையப் பங்களிப்பை வழங்கினால், அதை உரிய சங்கத் துடன் இணைப்பதற்கு, இணைய உறுதிப்படுத்தல் எண்ணையும் சங்கத் தகவல்களையும் RI தெற்கு ஆசிய அலுவலகத்திடம் *risao@rotary.org* என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்துகொள்ளும்படி அவர்களைக் கோருங்கள்.

**ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா)-க்குச் செய்யப்படும் INR பங்களிப்புகளுக்கான கட்டாயத் தேவைகள்**

➢ பங்களிப்பு வரவு மற்றும் தொடர் புடைய 80G ரசீதை நிதியை அனுப்பியவர் பெயரில் மட்டும் தான் உருவாக்க இயலும்.

**மாவட்ட நல்கைகள்:** உங்கள் மாவட்டம் மாவட்ட நல்கை நிதிகளை முறையாகப் பெறவேண்டுமென்றால், மே 15, 2022க்குள் மாவட்ட நல்கை விண்ணபங்கள் வந்து சேரவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மாவட்ட நல்கைகளும் மே 31, 2022க்குள் செலுத்தப்படவேண்டும், இல்லாவிட்டால், மாவட்ட நல்கைகள் மே 31, 2022 அன்று ரத்து செய்யப்படும்.

மாவட்ட நல்கை பற்றிய விபரங்களுக்கு ராய் ஜான் (roy.john@rotary.org) அவர்களை 011–42250146 எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள். ■

# கல்கத்தாவில் செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம்

கிரண் ஜெஹரா

RC கல்கத்தா சௌரிங்கி, RID 3291, ஒரு செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமை நடத்தியது. இந்த மிகப் பெரிய முகாம், ஃபின்லாந்தைச் சேர்ந்த நான்கு RI மாவட்டங்கள் (1385, 1390, 1410 மற்றும் 1430), கொல்கத்தா மகாவீர் சேவா சதனில் உள்ள CII இளைஞர் பிரிவான "யங் இந்தியன்ஸ்" மற்றும் RC கல்கத்தா மேஃபேர் உடன் இணைந்து நடத்தப்பட்டது.

சங்கத் தலைவர் விக்ரம் டன்டியா, RID 3291 ரோட்டரியன்கள் முன்னிலையில் DG பிரபீர் சாட்டர்ஜி இந்த முகாமைத் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டத்தின் இலக்கு, குறைந்த வருவாய்க் குழுவைச் சேர்ந்த கை, கால் நீக்கப்பட்டவர்களுக்குச் செயற்கைக் கை, கால் பொருத்தி மறுவாழ்வு அளிப்பதுமட்டுமில்லை, அவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சி அளித்து, வாழ்வாதார ஆதரவு பெற அவர்களுக்கு உதவுவதும் தான். இதனால், பலன் பெறுவோர் வாழ்க்கைச் செயல்பாடுகளில் மீண்டும் ஈடுபடுவார்கள்" என்கிறார் டன்டியா. இந்தச் சங்கம் மாற்றுத் திறனாளிப் பெண்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் மீதும் கவனம் செலுத்துகிறது.

### 1,200க்கும் மேற்பட்ட பலன் பெறுவோர்

இந்தத் திட்டத்தால் பலன் பெறும் 30 வயது ராஜு கான் சிரிப்புடன் சொல்கிறார், இப்போது நான் மீண்டும் உள்ளூர்ப் பேக்கரியில் வேலைக்குச் செல்ல இயலும், என் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப இயலும். 2017ல் ஒரு ரயில் விபத்தில் கால்களை இழந்தது முதல் நான் வேலை இன்றி இருந்தேன்.

1,270க்கும் மேற்பட்டோருக்கு இந்த முகாமில் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டன. மகாவீர் சேவா சதனைச் சேர்ந்த தன்னார்வலர்கள் கை, கால் பொருத்துதல் தொழில் நுட்பச் செயல்முறையைக் கவனித்துக் கொண்டார்கள்.

இந்தத் திட்டத்தின் குழு பன்னாட்டு நல்கையின் நுணுக்கங் களைப் புரிந்துகொள்ள RC பேளூர் முன்னாள் தலைவர் விஷ்ணு தன்தானியா உதவினார். அவர் பன்னாட்டுக் கூட்டாளர்களுடன் எங்களைத் தொடர்புகொள்ளச் செய்தார். RC லெப்பவிர்தா, RID 1430ஐச் சேர்ந்த எர்க்கி பசனென் இந்தத் திட்டத்தின் பன்னாட்டுத் தொடர்பு நபராகச் செயல்பட்டார், இந்தக் கை, கால் பொருத்தல் முகாமில் கூட்டாளர்களாகச் சேர ஃபின்னிஷ் சங்கங்களை ஊக்குவித்து உதவினார்" என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.■





DG பிரபீர் சாட்டர்ஜீ (வலதிலிருந்து 5வது) மற்றும் சங்க தலைவர் விக்ரம் டன்டியா (வலதிலிருந்து 2வது), விஷ்ணு தன்தானியா, PDGs ப்ரோஜோ குண்டு மற்றும் ஷியாமாஸ்ரீ சென் முகாமின் துவக்க விழாவில்.

# நல்லிணக்கத்துடன் வாழ்தல்

பரத் — ஷலன் சவூர்

தாராள மனம் கொண்ட ஒருவர் நல்லெண்ணத்தைப் பரப்பத் தீர்மானித்தார், அதற்காக ஒரு கால்நடைப் பயணத்தைத் தொடங்கினார். மதியத்தில் அவர் ஒரு கிராமத்தைச் சென்றடைந்தார். அங்கிருந்த முதல் கதவைத் தட்டி "எனக்கு ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?" என்று அந்த வீட்டு பெண்ணிடம் கேட்டார் அந்தப் பெண். "எங்கள் வீட்டில் உணவு ஏதும் இல்லை." என்றார். அதைப் பற்றிச் சிந்தித்தபோது அவருக்கு ஒரு யோசனை வந்தது

"பரவாயில்லை, "என்னிடம் ஒரு மந்திரக்கல் இருக்கிறது. அதை வெந்நீர்ப் பானையில் போட்டால் போதும், உலகின் மிகச்சுவையான சூப் கிடைக்கும்!" என்றார். உடனடியாக, ஒரு பெரிய பானையில் தண்ணீரை கொதிக்க வைத்தார். நீர் கொதித்துக்கொண்டிருந்தபோது, அவர் அந்தப் பெண்ணிடம் சொன்னார், "உங்களுடைய நண்பர் களையும் அழையுங்கள், எல்லாரும் சேர்ந்து இந்தச் சுவையான சூப்பை அருந்துவோம்." இதைக் கேட்ட அந்தப் பெண் அவருடைய தாராள மனப்பான்மையை எண்ணி மகிழ்ந்தார், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் இந்தச் செய்தியைச் சொன்னார், அவர்களையும் சூப் உண்ண அழைத்தார்.

விரைவில், அந்தக் கிராமம் முழுவதும் இந்தச் செய்தி பரவிவிட்டது. எல்லாரும் அந்த மந்திரச் சூப்பைக் காண வந்தார்கள்.

இப்போது, அந்த மனிதர் சூப்பைச் சிறிது ருசிபார்த்தார், "ம்ம்ம். இதோடு கொஞ்சம் உருளைக்கிழங்கைச் சேர்த்தால் நன்றாக இருக்கும்" என்றார்.

"என்னிடம் உருளைக்கிழங்கு உள்ளது" என்றார் கிராமத்து மனிதர் ஒருவர். ஓடிச் சென்று ஒரு பாத்திரம் நிறைய உருளைக் கிழங்குத் துண்டுகளைக் கொண்டு வந்தது பானையில் சேர்த்தார். இதைக் கண்டு மகிழ்ந்த இன்னொருவர் நறுக்கிய வெங்காயங்களைக் கொண்டுவந்தார், இன்னொருவர் நறுக்கிய கேரட் கொண்டு வந்தார், இன்னொருவர் ஒரு பாத்திரம் முழுக்க உரித்த பச்சைப் பட்டாணியைக் கொண்டுவந்தார், முதியவர் ஒருவர் பால், இலவங்கம் கொண்டுவந்தார், இன்னொருவர் உப்பு, மிளகு கொண்டுவந்தார். வந்தவர் இவை அனைத்தையும் நயமாகவும் நன்றியுணர்வுடனும் அவற்றை வெந்நீரில் சேர்த்தார்.

சிறிது நேரத்துக்குப்பிறகு, அவர் மீண்டும் சூப் அருந்தினார், அவருடைய முகத்தில் மன நிறைவான புன்னகை. "சூப் தயாராகிவிட்டது!" என்றார் அவர். "எல்லாரும் உங்களுடைய கிண்ணங்கள், ஸ்பூன்களைக் கொண்டுவாருங்கள், வேண்டுமென்றால் கொஞ்சம் ரொட்டியைக் கொண்டு வாருங்கள், அனைவரும் இந்தச் சுவையான சூப்பை உண்போம்! வாருங்கள், விருந்து தயாராக இருக்கிறது, சேர்ந்து ருசிப்போம்!"

கிராமத்து மக்கள் எல்லாரும் சேர்ந்து அந்தச் சூப்பை மகிழ்ச்சியுடன் அருந்தினார்கள், பேசிச் சிரித்தார்கள், பிறருடன் நன்கு பழகி மகிழ்ந்தார்கள்... வந்தவர் சிரித்தார். தனக்கு இத்தனை நண்பர்கள் கிடைத்திருப்பதை எண்ணி அவரும் மகிழ்ந்தார். "உலகில் எல்லாரும் நண்பர்கள்தான், முன்பின் அறியாதவர்கள் என்று யாரும் கிடையாது என்று எண்ணினார்."

### மேம்பட்ட வாழ்க்கை

இன்னொருவருடைய கண்களை நீங்கள் தோழமை உணர்வுகளுடன் பார்த்தால், நீங்கள் உடனடியாக அங்கு ஒரு தூண்டுதலைக் காண்பீர்கள், உங்களைப் புரிந்துகொண்டதுபோன்ற ஓர் இணைப்பு உண்டாவதைக் காண்பீர்கள். அந்த மனிதர் சொன்ன மந்திரக் கல்லைப் போன்ற மாயம் அது. கைகோர்த்து வாழ்தல் என்ற சொல்லை நாம் கேள்விப்படாமல் இருக்கலாம், ஆனால் நாம் எல்லாரும் அப்படிப்பட்ட வாழ்க்கையைதான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அன்புடனும் அக்கறையுடனும் இன்னொருவருக்காக நாம் செய்கிற அனைத்தும், மேம்பட்ட கை கோர்த்து வாழ்தல். ஒவ்வொருவரும் உடனடியாகத் தங்கள் அன்பை, அக்கறையை இதில் சேர்ப்பதால், இந்த முழுமையுணர்வு பரவுகிறது, பலமடங்காகிறது, அந்தக் கதையில் வரும் சூப்பைப்போல.

### ஆறச்செய்யும் குழு

அதனால்தான், டாக்டர் பீட்டர் வான் ஹூட்டென் தன்னுடைய மருந்தகத்தில் இணைந்து பணிபுரியும் மருத்துவத்தை வழங்குகிறார் என்று தெரிந்துகொண்ட போது நான் மகிழ்ந்தேன். இங்கு, பல் மருத்துவர்கள், பழகுமுறைச் சிகிச்சையாளர்கள், மருத்துவ வல்லுனர்கள், செவிலியர்கள் எனப் பல துறைகளைச் சேர்ந்த வல்லுனர்கள் ஆற்றுகின்ற குழுவாக இணைந்து பணியாற்றுகிறார்கள். நோயாளி ஒருவருக்கு உடல் மற்றும் மனப் பிரச்சனைகள் இருந்தால், அவர் விரும்பும் சிகிச்சைகளை எளிதில் பெறலாம், அதன்பிறகும் அவருக்கு உயர் தர மருத்துவப் பரிசோதனைகள் வழங்கப்படுகின்றன, இதனால் அவருடைய நோய் குணமாவதுடன்



அவர் முன்பைவிடச் சிறப்பாக உணர்கிறார்.

அழகான விஷயம், இந்த மருத்துவ முறையில் டாக்டர் ஹூட்டென் ஓர் ஆழமான பரிமாணத்தைச் சேர்த்துள்ளார். மருத்துவ ஊழியர்கள் ஒவ்வொரு நோயாளியுடனும் நட்பு, மதிப்புப் பிணைப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள். நோயாளி மருந்தைச் சாப்பிட வேண்டும் அல்லது ஒரு பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்று இவர்கள் "சொல்வதில்லை", மருத்துவக் குழுவின் அக்கறை, விளக்குதல் மற்றும் பொறுமையின் வழியாக அவர் தான் நலம் பெறவேண்டும் என்று புரிந்துகொள்கிறார், அதற்காக அவர்களுடன் இணைந்து பணிபுரிகிறார்!

தகவல் தொடர்பும் நல்லிணக்கமும் சேரும் போது, சோர்வான நோய்ப்படுக்கை சுறுசுறுப்பான நலத் தோழமையாக மாறுகிறது. ஒவ்வொருவரும் நம்பிக்கையை உணர்கிறார்கள், தங்கள் குரல் கேட்கப்படுகிறது என்று எண்ணுகிறார்கள். அது அழகான, முதிர்ந்த மருத்துவ அணுகுமுறையாகும்.

Dr தீபக் சோப்ரா மருத்துவ மாணவராக இருந்தபோது, ஓர் ஆராய்ச்சிப் பரிசோதனையில் விளையாட்டாகச் சேர்ந்தார், அது அவருக்கு ஒரு விழிப்பை உண்டாக்கியது என்று நான் நினைக்கிறேன். இந்தக் குழுவில் உள்ளவர்கள் LSD தாக்கத்தின்கீழ் ஒரு சுவரொட்டியைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்தச் சுவரொட்டியில் இருந்தவர், உலகின் மிக அன்பான, மிக இரக்கமான மனிதராகிய அன்னை தெரசா. "அப்போது நான் உணர்ந்ததைப் போன்ற ஆழமான பச்சாத்தாபத்தையும் இரக்கத்தையும் அதற்குமுன் எப்போதும் உணர்ந்ததில்லை" என்கிறார் Dr சோப்ரா.

இந்தப் பரிசோதனை அவரிடம் எந்த அளவு ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது என்றால், இன்றைக்கு, 50 ஆண்டுகள் கழித்து, அவருடைய சோப்ரா அறக்கட்டளை மைண்ட் மெட்" என்ற மருத்துவ நிலை சைக்கடெலிக் (மாயத்தோற்றம் உண்டாக்கும் மருந்துகளைப் பயன்படுத்துதல்) மருந்து உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி, மனச்சோர்வு மற்றும் பழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற மன நலக் குறைபாடுகளுக்குச் சிகிச்சை அளிக்க சைக்கடெலிக் மருந்துகளைப் பயன்படுத்துவதுபற்றிய விழிப்புணர்வை உண்டாக்குகிறது, அத்துடன், மன நலக் குறைபாடு, தற்கொலை பற்றிய களங்கவுணர்வை அழிக்கவும் போராடுகிறது.



### ஐந்து நல உருவாக்கிகள்

நம்முடைய தனிப்பட்ட நிலையிலும் நலத்துக்கு ஓர் இணைந்து செயல்படும் அணுகுமுறை தேவை: உடலைக் கட்டுக்கோப்பாக வைக்கும் உடற்பயிற்சி, உணவு, தூக்கம், எண்ணங்கள் மற்றும் உணர்வுகள், அமைதியில் வல்லமை பெறுதல். உடற்பயிற்சிகளில் மிகுந்த பலன் தருவது என்னவென்றால், நீங்களாக விரும்பிச் செய்வதுதான்.

உங்கள் உடல் எளிதில் செரிக்கும் உணவுகளை உண்ணுங்கள். கனமாக, தூக்கக் கலக்கமாக, மந்தமாக உணர்வது, அடிக்கடி வயிறு ஊதி ஏப்பம் விடுவது, வாந்தி எடுப்பது அல்லது மலச் சிக்கலுடன் இருப்பது நல்ல நலனும் இல்லை, நல்ல உணர்வும் இல்லை. உங்கள் உடலின் வசதியை மதிப்பது, உங்களை அன்பாகவும் இதமாகவும் நடத்துவது ஆகும். நீங்கள் எந்த உணவைச் சாப்பிட்டு வளர்ந்தீர்களோ, அவை தான் மிகச் சிறந்த உணவுகள். ஆனால், அதில் கொழுப்பு குறைவாகசேர்க்க வேண்டும், அல்லது, சேர்க்கவே கூடாது.

உடற்கட்டு மற்றும் நலனைப்பற்றிப் பேசும்போது, எண்ணங்கள் மிக முக்கியமானவை. டாக்டர் சௌமித்ரா திடுக்கிடவைக்கும் ஒரு விஷயத்தைச் சொல்கிறார். "ஸ்கிஜோஃப்ரெனியா என்பது அடிப்படையில் ஓர் எண்ணக் குறைபாடு, அது மனநிலையைப் பாதிக்கிறது; மனச்சோர்வு என்பது ஒரு மனநிலைக் குறைபாடு, அது சிந்தனையைப் பாதிக்கிறது" என்கிறார் அவர். உங்கள் எண்ணங்களைக் கவனியுங்கள். மிகச் சிறந்த கருத்துகளைப் படித்துப் புரிந்துகொள்ளுங்கள், அவற்றை ஒரு குறிப்பேட்டில் எழுதுவதன் மூலம், அவற்றை உங்கள் சிந்தனைப் பண்பாட்டின் பகுதியாக்குங்கள். சரியாகத் தோன்றும் ஏதோ ஒரு சொல்லை, ஒலியை, மந்திரத்தை அல்லது வழிபாட்டைச் சொல்லுங்கள்: எப்படி எண்ணமானது நாம் சொல்லும் சொல்லை ரத்து செய்கிறதோ, அதுபோல, நாம் சொல்லும் சொல் எண்ணத்தை ரத்து செய்கிறது, அதனால் முழுமையான அமைதி கிடைக்கிறது. மனம் அமைதியையும் உள் இடத்தையும் நாள்தோறும் உணரவேண்டும்.

வெறுப்பு மனப்பான்மை, ஐயம், தீர்ப்பு சொல்லுதல், ஒழுங்கற்ற மனநிலையில் இருத்தல் ஆகியவற்றுக்குப் பதிலாக, உங்கள் மனம் பற்றிக்கொள்வதற்கு ஒரு காட்சியை வழங்குங்கள். "இங்கு காட்சி என்பது வருங்காலத்தின் ஒரு படம் மட்டுமில்லை, நம்முடைய மேம்பட்ட உருவத்துக்கான ஒரு விண்ணப்பம், இப்போது இருப்பதை விடச் சிறப்பாக ஆவதற்கான ஓர் அழைப்பு" என்கிறார் சோசபெத் மாஸ்கான்டெர். இந்த வழிகளில் நாம் நல்ல நலனை அழைக்கிறோம், அதனுடன் சேர்ந்து பணியாற்றுகிறோம். எளிமையாக இருத்தல், நாம் சிந்திக்கிற, செய்கிற ஒவ்வொன்றிலும் நம் அன்பான ஆற்றல்களுடன் இணைதல் தான் இது. இது ஒரு நீடித்திருக்கிற, எப்போதும் ஆற்றுகிற, வாழ்க்கையுடன் ஒருங்கிணைந்த கூட்டணியாகும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC ஆடுதுறை — RID 2981



DG S பாலாஜி அம்மா சத்திரம் கிராமத்தில் ரத்ததான முகாம், மரம் நடும் விழா வைத் தொடங்கி வைத்தார். 80க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தார்கள்.

## RC பில்குவா சிட்டி — RID 3012



காச நோயால் துன்பப்பட்ட 14 குழந்தைகளை இந்தச் சங்கம் தத்தெடுத்தது. அவர்களுக்குச் சங்கத்தலைவர் சுதீர் கோயல் ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

## RC விழுப்புரம் சென்ட்ரல் — RID 2982



நகராட்சி தடுப்பு மருந்து வழங்கல் முகாம்களில் பங்கேற்கும் 200 செவிலியர்களுக்கு ரூ.70,000 செலவில் போக்குவரத்து வசதி வழங்கப் பட்டது. இந்தத் திட்டத்தால் 30,000 மக்கள் பலன் பெற்றார்கள்.

## RC வுய்யூரு — RID 3020



தெரு விற்பனை யாளர்களுக்கு (பெரும்பாலும் பெண்களுக்கு) இந்தச் சங்கம் ரூ.75,000 மதிப்புள்ள தள்ளு வண்டிகளைக் கொடையளித்தது.

## RC கரூர் — RID 3000



அரங்கநாதன் பேட்டை கிராமத்து அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.30,000 மதிப்புள்ள மேசைகள் கொடையளிக் கப்பட்டன.

## RC பெகோவல் — RID 3070




பெகோவலைச் சேர்ந்த 36 குடும்பங்களுக்குச் சங்கத் தலைவர் மல்கியாத் சிங் லுபானா மேற்பார் வையில் போர்வைகள், உணவுப் பொருள் பைகள் வழங்கப் பட்டன.

# செய்திகள்

## RC சுனாம் — RID 3090



Hero DMC Heart Institute-ல் சங்கம் நடத்திய இதய பரிசோதனை முகாமில் 160 பயனாளிகளுக்கு பல பரிசோதனைகளை செய்யப்பட்டது.

## RC லக்னோ — RID 3120



ஃபுல்வாரி பாட்ஷாலா என்ற சேரிப் பள்ளியில் IDPG K K ஸ்ரீவஸ்தவா, சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் மாணவர்களுக்குக் கம்பளி உடைகள் வழங்கப்பட்டன.

## RC மொராதாபாத் பிராஸ்சிட்டி ஸ்டார்ஸ் — RID 3100



தில் கி பாத் என்ற 4.5கிமீ வாக்கத்தான் நடை நிகழ்ச்சியை இச்சங்கம் நடத்தியது. பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், ரோட்டரியின் பொதுத் தோற்றம் தொடர்பான வீதி நாடகங்களும் இடம் பெற்றன.

## ரோட்டரி ஈ-கிளப் புனே டயமண்ட் — RID 3131



சங்க உறுப்பினர்கள் ஏர்வாடாவில் உள்ள இளைஞர் காவல் இல்லத்துக்குச் சென்று, அங்கு உள்ளவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை விவரிக்கிற ஓர் உரை நடத்தப்பட்டது.

## RC ஆக்ரா கிரேஸ் — RID 3110




RC தாஜ் சிட்டியுடன் இணைந்து பதெளலி ISKCON கோயிலில் நடத்திய மருத்துவ முகாமில் 40 குழந்தைகள், 25 முதியவர்கள், 100க்கும் மேற்பட்ட பெண்கள் பலன் பெற்றார்கள்.

## RC நியூ பாம்பே சீசைட் — RID 3142



ரூ.20 லட்சம் மதிப்புள்ள செயற்கை மூச்சுவிடல் கருவிகள், Bipap இயந்திரங்கள், PPE பொதிகள், கையுறைகள் மற்றும் பிற பயன்பாட்டுப் பொருட்கள் NMMC-கோவிட் மருத்துவமனைக்கு வழங்கப்பட்டன.

## RC நெல்லூர் — RID 3160



நெல்லூர் மாவட்டத்தில் உள்ள புரன்பூர் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குப் பள்ளிப் புத்தகங்கள், தட்டுகள், தம்ளர்கள், எழுது பொருட்கள் Rtn K V சுப்ரமணியம் ஆதரவில் கொடையளிக்கப்பட்டன.

## RC சன்னபட்னா — RID 3190



சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பரப்புரை ஒன்றை சங்கம் நடத்தியது.

## RC பைல்ஹொங்கல் — RID 3170



உலக அமைதி நாளைக் கொண்டாடும் வகையில், போதுமான ஊட்டச் சத்து இல்லாத குழந்தைகளுக்கான நலப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

## RC கொச்சின் பீச்சைட் — RID 3201



சுதந்தர நாள் தாகூர் நூலக விநாடி வினாவில் வெற்றி பெற்றவர்களுக்கும் வாரியத் தேர்வுகளில் உயர் மதிப்பெண் பெற்றவர்களுக்கும் சங்கத் தலைவர் ஷியாஸ் K ஹசிம் பரிசுகளை வழங்கினார்.

## RC குந்தாபுரா — RID 3182



வட்ட நலத் துறை உதவியுடன் ரூ.1 லட்சம் செலவில் நடத்தப்பட்ட சிறப்பு முகாமில், சுமார் 200 குழந்தைகள் போதுமான ஊட்டச்சத்து இன்மைக்குச் சிகிச்சை பெற்றார்கள்.

## RC ஸ்ரீவில்லிபுத்தூர் ஃப்ரெண்ட்ஸ் — RID 3212



சங்கத்தின் ‘30 திட்ட’த்தின் கீழ், நாள்தோறும் மாணவர், முதியவர் அல்லது மாற்றுத் திறனாளி ஒருவருக்கு 30 சங்க உறுப்பினர்கள் ரூ.1,000ஐப் பணமாகவோ உதவியாகவோ ஆண்டு முழுவதும் அளிப்பார்கள்.

# செய்திகள்

## RC திருப்பத்தூர் — RID 3231



குனிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒரு மிகப் பெரிய பல் பரிசோதனை முகாம் நடத்தப் பட்டது. இதில் 200 மாணவர் களுக்குப் பல் குறைபாடுகள் உள்ளனவா என்று பரிசோதிக்கப் பட்டது. பற்பசைகளும் பல் தேய்க்கும் பிரஷ்களும் வழங்கப்பட்டன.

## RC சம்பல்பூர் வெஸ்ட் — RID 3261



சம்பல்பூர் பரமேஸ்வரி பாய் நினைவு அறக்கட்டளையுடன் இணைந்து, சகிபரா-வின் தொலைதூரப் பகுதிகளில் வீடில்லாத குடும்பங்கள், வறியவர்களுக்குக் குளிர் தாங்கும் போர்வைகள் வழங்கப்பட்டன.

## RC அண்ணாநகர் மெட்ராஸ் — RID 3232



சங்கத் தலைவர் ரேணு சாவ்லானி DRFC M அம்பல வானனிடம் TRF-யிற்காக $9,498 அளித்தார். இது சங்கத்தின் டயாலஸிஸ் திட்டத் திற்கு உதவும்.

## RC கட்டக் கோல்டன் ஸ்டார் — RID 3262




ரோட்டராக்டர்கள் மற்றும் Awaaken புற்றுநோய்ப் பராமரிப்பு அறக்கட்டளை உதவியுடன், மார்பகப் புற்றுநோய் பற்றிய விழிப் புணர்விற்காக ஒரு சைக்ளத்தான் நடத்தியது.

## RC காங்டாக் — RID 3240



கிழக்கு சிக்கிமில் உள்ள பர்டாங்கில் இருக்கும் மேம்பட்ட தொழில் நுட்பப் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு சர்வா யோகா மையத்துடன் இணைந்து ஒரு யோகாசன முகாம் நடத்தப்பட்டது.

## RC கல்கத்தா ஜாதவ்பூர் — RID 3291



சாந்தி நிகேதனில் உள்ள டரொன்டா கிராமத்தில் மாணவர்களுக் கான இலவசப் பயிற்சிப்பள்ளி ஒன்றை DG பிரபிர் சாட்டர்ஜி தொடங்கிவைத்தார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# மனிதர்களும் விலங்குகளும் இணைந்து வாழும் இடம்

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

கடந்த 71 ஆண்டுகளாக நான் இந்த கிரகத்தில் வசித்து வருகிறேன். மற்றவர்களைப் போலவே நானும் வெளிநாடுகளில் பல ஆண்டுகளைச் செலவழித்தேன். இந்தியாவில் மட்டுமே, மனிதர்களும் விலங்குகளும் மிக இணக்கமாக இடங்களைப் பகிர்ந்துகொள்கின்றன. குரங்குகள், எலிகள், பசுக்கள், பன்றிகள், நாய்கள், பூனைகள், பறவைகள், ஒட்டகங்கள், கரப்பான்பூச்சிகள், யானைகள், பாம்புகள், கீரிப்பிள்ளைகள் என அவற்றை குறிப்பிடலாம். எங்கும் காணக்கூடிய வகையில் நாம் அவற்றுடன் இணைந்து வாழ்கிறோம். தெருக்கள், வீடுகள், வனப்பகுதிகள், தோட்டங்கள் என எல்லா இடங்களிலும் நம்மைச் சுற்றி விலங்குகள் வாழ்கின்றன. அவை எங்கும் நிறைந்துள்ளன. எப்போதும் இருப்பவை. சம்ஸ்கிருதத்தில் யாத்ரா, தத்ரா, சர்வத்ரா என்று ஒரு சொற்றொடர் உண்டு. இது இங்கும் அங்கும் எங்கும் உண்மையிலேயே அசாதாரணமானது.

1985ம் ஆண்டு நடந்த சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. இந்தியா வந்த பிரிட்டிஷ் தொலைக்காட்சி குழுவினருக்கு படப்பிடிப்புக்கு உதவுமாறு ஒரு ஆங்கிலேய நண்பர் என்னிடம் கேட்டுக் கொண்டார். அது என்ன படப்பிடிப்பு என்பது மறந்துவிட்டது. நான் இந்தியன் எக்ஸ்பிரஸில் பணியாற்றிய காலம். அவர்கள் எனது அலுவலகத்துக்கு வந்தனர். நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது, யானையில் கழுத்தில் கட்டப்பட்டி ருக்கும் மணியின் ஓசையை நான் கேட்டேன். நான் அவர்களிடம் சாதாரணமான முறையில், யானையைப் பார்க்க வேண்டுமா என்று கேட்டேன். இன்று இல்லை என்று அவர்களில் ஒருவர் பதில் கூறினார். நாளை உயிரியல் பூங்காவிற்குச் செல்லலாம் என்றனர். நான் அவர்களை ஜன்னலை நோக்கி அழைத்துச் சென்றபோது, அடுத்த சில விநாடிகளில் ஒரு யானை மணியோசையுடன் நடந்து சென்றது. அப்போது பிரிட்டிஷாரின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது. அவர்கள் முற்றிலும் திகைத்துப்போனார்கள்.

மற்றொரு முறை நான் மும்பையிலிருந்து தில்லிக்கு ராஜ்தானி எக்ஸ்பிரஸில் பயணம் செய்தேன். எனக்கு எதிராக இருந்த பெர்த்தில் (படுக்கையில்) கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த வெளிநாட்டவர் இருந்தார். அவர், தனது மடிக்கணினியில் வேலைபார்த்துக் கொண்டிருந்தார். மேற்கூரையிலிருந்து திடீரென்று ஒரு எலி அவரது விசைப்பலகையில் வந்து விழுந்தது. அது எதிர்பாராத தருணம். உண்மையில் அந்த இடத்தைச் சுற்றி நிறைய எலிகள் ஓடிக்கொண்டிருந்தன. எதுவும் செய்யமுடியாத நிலை. அன்று இரவு ரயிலில் பயணிகள் தூங்கினார்களா என்பது சந்தேகமே. ஒரு நாள் பெண் நண்பர் ஒருவர் எனது அலுவலகத்துக்கு வந்தார். வரும்போதே கூச்சலிட்டுக்கொண்டும் சாபமிட்டுக்கொண்டும் வந்தார். அப்போது இரவு 7 மணி இருக்கும். குளிர்காலம் என்பதால் வெளியில் இருள் சூழ்ந்திருந்தது. அவரை அமைதிப்படுத்திவிட்டு என்னவென்று விசாரித்தேன். ஒரு பூனை அவரது காரின் டிரைவர் இருக்கையில் அமர்ந்திருந்தது. அது தெரியாமல் அவர், அந்த பூனைமீது உட்கார்ந்து விட்டார். அந்த நண்பர் காற்று வரட்டுமே என்று காரில் ஜன்னலை முழுவதும் மூடாமல் விட்டு வைத்திருந்தார். அந்தப் பூனை குளிருக்கு அடக்கமாக உள்ளே சென்று அமர்ந்துவிட்டிருந்தது.

எனக்கும் இதுபோல் இரண்டு சம்பவங்கள் நேரிட்டது. ஒருமுறை, நான் எனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டபோது, ஒரு மாடு என்னை துரத்திக் கொண்டு வந்தது. நான் வாகனத்தை ஸ்டார்ட் செய்தபோது என்னை கோபத்துடன் பார்த்ததுடன், என்னை நோக்கிப் பாய்ந்தது. நான் கிளம்பிய போதும், பீதியில் பெட்ரோல் வெளிவரும் குழாயைத் திறக்க மறந்துவிட்டேன். நல்லவேளை ஒரு சில விநாடிகளில் சுதாரித்துக் கொண்டு பெட்ரோல் குழாயைத் திறந்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டேன். அன்று நான் சிக்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே நடுக்கமாக இருக்கிறது. அங்கிருந்த குழந்தைகளும், பெண்களும் என்னைப் பார்த்து சிரித்தார்கள். மாடு என்னை கோபத்தில் துரத்தியதா அல்லது அதைப் பார்த்து ரசித்த மனிதர்களா? எது எனக்கு அவமானகரமாக இருந்தது? தெரியவில்லை.

இரண்டாவது சம்பவமும் திகிலூட்டுவதாக இருந்தது. ஒரு நாள் பிற்பகலில் போக்குவரத்து இல்லாத, ஈரமான சாலையில் வாகனத்தில் 100 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருந்தேன். எனது தொண்டையில் எரிச்சல் ஏற்பட்டதை உணர்ந்தேன். நான் தாக்கப்பட்டேன் என்ற அளவுக்கு வலி அதிகமாக இருந்தது. ஒருவழியாக வாகனத்தை சாலையோரத்துக்கு கொண்டு சென்று சரிந்து விழுந்தேன். வலி குறைய ஒரு நிமிடம் ஆனது. நான் மீண்டும் பழைய நிலைக்கு வர சில நிமிடங்கள் ஆனது. பின்னர் ஒரு வழியாக சமாளித்துக் கொண்டு பைக்கில் ஏறி, வாகனத்தை மெதுவாக ஓட்டியவாறு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். கண்ணாடியில் என்னை பார்த்துக் கொண்டபோது தொண்டைப் பகுதியில் ஒரு இடம் சிவந்து இருந்தது. எதனால் இது ஏற்பட்டி ருக்கிறது என்று யோசித்த போது, 'குளவி' என்னை தாக்கியிருப்பது தெரியவந்தது.■

# செய்தித் துளிகள்

## பூங்காவாகும் நிலக்கரிச் சுரங்கம்

வடதுருவத்துக்கு அருகில் உள்ள ஸ்வால்பார்டு ஆர்சிபெலகோ என்னுமிடத்தில் உள்ள, நாட்டின் கடைசி நிலக்கரி சுரங்கத்தை 3,000 சதுர கி.மீ. பரப்புக்கு வான் மிஜென்ஃப்ஜோர்டென் என்று இயற்கை தேசிய பூங்காவாக மாற்றுகிறது நார்வே. 20 மில்லியன் பறவைகளின் கூடுகள் மற்றும் 3,000 துருவ கரடிகள், அந்த பனிக்கடலை வேட்டையாடும் இடமான ஸ்வால்பார்டு, வடதுருவத்தில் சுற்றுச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இந்தப் பூங்கா சுற்றுச்சூழலின் எல்லையை விரிவுபடுத்தும். மேலும் இந்தப் பிராந்தியம் பசுமையுடன் திகழ உதவும்.



## சூரியனின் வளிமண்டலத்தை கடந்து சென்ற பார்க்கர் சோலார் ப்ரோப் விண்கலம்



அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் பார்க்கர் சோலார் ப்ரோப் (Parker Solar Probe) விண்கலம் "கொரோனா" என்று அழைக்கப்படும் சூரியனின் புற வளி மண்டலம் வழியாகக் கடந்து சென்றுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு முன் (2018ல்) தொடங்கப்பட்ட இந்த விண்வெளித் திட்டத்தின் நோக்கம், பார்க்கர் சோலார் ப்ரோப் விண்கலத்தை சூரியனுக்கு அருகில் அனுப்பி கடந்து செல்ல வைப்பதுதான். இந்த ஆண்டு ஏப்ரல் மாதமே இது நிகழ்ந்திருந்தாலும் அந்த விண்கலம் கொரோனா வழியாகத்தான் கடந்து சென்றது என்பது, தரவுகளின் பகுப்பாய்வுகள் மூலம் இப்போது தான் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## நோயுற்ற குழந்தைக்கு உதவிய ஒலிம்பிக் பதக்கம்

மரியா ஆண்ட்ரேஜெசிக் என்ற பெண், 2020ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளிப்பதக்கம் வென்றவர். இதயக் குறைபாட்டுடன் பிறந்த 8 மாத ஆண் குழந்தை மிலோஸெக் மலியாவின் சிகிச்சைக்கு நிதியுதவ தமது பதக்கத்தை 1,25,000 டாலருக்கு ஏலத்தில் விட்டார். போலந்தில் பல்பொருள் விற்பனை அங்காடியான ஜப்கா இதை ஏலத்தில் எடுத்த போதிலும் பின்னர் ஆண்ட்ரேஜெசிக்கிடம், பத்தகத்தை வைத்துக் கொள்ளுமாறு கூறிவிட்டது.



## "நான் இன்னும் இளமையாக இருக்கிறேன்": இங்கிலாந்து ராணி



"இந்த ஆண்டின் முதுமையானவர்" என்ற விருதை இங்கிலாந்து ராணி, எலிசபெத் II-க்கு வழங்க அந்த நாட்டு பத்திரிகை ஒன்று முடிவு செய்தது. ஆனால், 95 வயதான ராணி எலிசபெத், அந்த விருதை ஏற்க மறுத்துவிட்டார். எனக்கு அந்த தகுதியில்லை. நான் இன்னும் இளமையாகவே இருக்கிறேன். விழா ஏற்பாட்டா ளர்களுக்கு நன்றியும் வாழ்த்துக் களும். என்னைவிட தகுதியான நபர்கள் உங்களுக்கு கிடைப்பார்கள் என்று நம்புகிறேன் என்று அந்த பத்திரிகைக்கு பதில் அனுப்பிவிட்டார்.



## விவசாயி மகளுக்கு அமெரிக்க உதவித்தொகை

தமிழ்நாட்டில், ஈரோடு அருகே காசிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயின் மகளான ஸ்வேகா சுவாமிநாதன், சிகாகோ பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்ள ரூ.3 கோடி உதவித் தொகை கிடைத்துள்ளது. முதல் தலைமுறை மாணவியான இவருக்கு டெக்ஸ்டரிடி குளோபல் குரூப் என்ற அமைப்பு பயிற்சி அளித்துள்ளது. இந்தியாவில் ஊரகப்பகுதியில் உள்ள கிராமங்கள் அல்லது தொலைத்தூர நகரங்களில் வசிக்கும் பின்தங்கிய மாணவர்களை உலகளாவிய கல்வி வாய்ப்புகளுடன் இணைக்கும் தளமாக செயல்படுகிறது இக்குழு. இதில் தலைமைத்துவம் மற்றும் தொழில் வளர்ச்சி திட்டங்களுக்காக பெயரை பதிவு செய்து கொண்டுள்ளார் ஸ்வேகா.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-2024 | issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

